# கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள்

## க்ஷேத்ர மஹாத்ம்யம், ஸ்ரீ வராஹ ப்ரபாவம், ஸ்ரீ வராஹ உபநிஷத், ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்





# கல்லிடைக்குறிச்சி
# ஸ்ரீ பூமிநீளாதேவி ஸமேத
# ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள்
# திருக்கோவில் க்ஷேத்ர மஹாத்ம்யம்,
# ஸ்ரீ வராஹ ப்ரபாவம், ஸ்ரீ வராஹ உபநிஷத்,
# ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்



ஸ்ரீ லக்ஷ்மீஸரஸ் மாருதி

**ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**
ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி-1.
Phone : 0413 - 2260096



## நூல் விவரம்

நூலின் பெயர் : கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள் கோவில் க்ஷேத்ர மஹாத்ம்யம், ஸ்ரீ வராஹ ப்ரபாவம், ஸ்ரீ வராஹ உபநிஷத், ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்கள்

முதற் பதிப்பு : ஸ்ரீ ஜய வருஷம், ஆவணி - 2014

தொகுப்பும் உருவாக்கமும் : ஸ்ரீ S. வாஸுதேவன், Mobile: 94453 90591

நூலின் அளவு : Demy 1/8

தாள் : 70 GSM மேப்லித்தோ

பக்கங்கள் : 76

விலை : ரூ. 40/-

வெளியீடு : ஸ்ரீ லக்ஷ்மீ ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்
ராமகிருஷ்ணா நகர், புதுச்சேரி-1.

அச்சிட்டோர் : பி.ஆர் & சன்ஸ் (பிரிண்டர்ஸ்)
நெ.26, தம்பையா ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.
Mobile : 99400 59076

வடிவமைப்பு : மஹாமதி க்ராபிக்ஸ்
நெ.10/26, ரங்கபாஷ்யம் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-600 015.
Mobile : 9840 290 883

ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதன பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸுந்தர தாதயார்ய மஹாகுரவே நம:

## நன்றியுரை

அன்பர்களே! மிகவும் ப்ரக்யாதியும், எல்லையற்ற ப்ரபாவமும் கொண்ட ஸ்ரீ வராஹப்பெருமானைக் குறித்த ஸ்தோத்திரங்களடங்கிய இந்நூலை வெளியிட நினைத்தபோது கல்லிடைக்குறிச்சி வாஸியான திரு. விஸ்வநாதன் எனும் பரமபக்தரும் அதுபோன்றே கல்லிடைக்குறிச்சி வாஸியான திரு. ஸுப்ரமண்யம் எனும் பரமபக்தரும் பேரார்வத்துடன் பெரிதும் முன்வந்தனர். திரு. ஸுப்ரமண்யம், காவல் துறையில் உயர்பதவி வஹித்து ஓய்வு பெற்ற அன்பர், தமது துணைவியார் விஜயலக்ஷ்மி ஸுப்ரமணியன் எழுதியுள்ள ஸ்தல புராணத்தையும், படங்களையும் அனுப்பி அருள் புரிந்தார். இந்த ஸ்தல புராணம் படிக்கப்படிக்கத் தெவிட்டாத இன்பம் அளிப்பதாயுள்ளது. அவருடைய அநுமதியுடன் அவர்கள் அனுப்பிய ஸ்தல புராணத்திலிருந்து அநேக பகுதிகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவர்களுடைய குடும்பத்திற்கு ஸ்ரீ வராஹன் அனைத்து பலன்களையும், ஸௌபாக்யத்தையும் நல்குவதாக என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறேன்.

ஒருமித்த சிந்தையுடன் ஈடுபட்டு இந்நூலை அருமையாக வெளிக்கொணர்ந்த ஸ்ரீமான் வாஸுதேவனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும் ஆசார்ய கடாக்ஷமும், ஸ்ரீ பூமிதேவி ஸமேத ஸ்ரீ வராஹனின் அநுக்ரஹமும் நிலைத்திருக்க ஸ்ரீ ஶாபாநுக்ரஹ ஸ்வாமி, திவ்ய தம்பதிகள் தாள்பணிந்து ப்ரார்த்திக்கிறேன்.

இந்நூலை வெளியிட பொருளுதவி செய்து மஹோபகாரம் செய்ய முன்வந்த ஸ்ரீமான் D.க்ருஷ்ணமாச்சாரி, ஜெயம்மாள் தம்பதியரின் திருக்குமாரர் ஸ்ரீமான் ராம்குமார், ஸ்ரீமதி பத்மப்ரியா தம்பதியர் ஸகலவிதமான ஶாஶ்வதமான பேறும் பெற்று வாழ ஞானப்பிரான் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

ஸ்ரீமான் வாஸுதேவனின் உள்ளக்கிடக்கையை உணர்ந்து அவருடன் அயராது உழைத்து எம்பெருமானுக்குப் பணி செய்த ஸ்ரீமான் இளையராஜன் தம்பதியருக்கு ஸ்ரீ வராஹன் ஸகல ஸம்பத்துக்களையும் நல்க அவன் திருவடிகளில் இறைஞ்சுகிறேன்.

இந்நூலை சீரிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த பி.ஆர். & சன்ஸ் (பிரிண்டர்ஸ்) ஸ்ரீமான் வாஸுதேவனுக்கும் அவருடைய

குடும்பத்தினருக்கும் திவ்ய கடாக்ஷம் நல்க எம்பெருமானை தொழுது நிற்கிறேன்.

ஸ்ரீமத் ஆண்டவன் அநுக்ரஹத்தைப் பூரணமாகப்பெற்று இணைய தளம் மூலம் வைணவ உலகத்துக்கு ஒப்பாகும், மிக்காரும் இல்லா வகையில் தன்னலமற்ற பெரும் தொண்டு ஆற்றி, பல ஸ்தோத்திரங்களையும் நல்கிவரும் ஸ்ரீ உ.வே. ஸுந்தர் கிடாம்பி ஸ்வாமி அவர்களுக்கு எங்கள் க்ருதஜ்ஞதையை ஸமர்ப்பிக்கின்றோம்.

தன்னைப் பின்பற்றும், ஆஶ்ரயிக்கும் ஆஸ்திக அன்பர்களால் பக்தியுடனும், ப்ரேமையுடனும் "ஸ்ரீ அண்ணா" என்று கொண்டாடப்படும் ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் அருட்ப்ரவசன பொக்கிஷங்களிலிருந்து சில முத்துக்கள் இங்கே கோர்க்கப்பட்டு ப்ரகாஶிக்கின்றன. அதுபோன்றே ஸ்ரீ அண்ணாவின் ஸ்ரீ ப்ருந்தாவன மஹாத்ம்யத்திலிருந்து ஸ்ரீ வராஹவதாரம் பற்றிய சில ஸ்தோத்ரங்கள் இங்கே ஒளிர்கின்றன. கோரதாண்டவம் புரியும் இக்கலியுகத்தில் ஸ்ரீ அண்ணாவை நமக்குத் தந்துதவிய திவ்யதம்பதிகளுக்கு நம் கரங்களைக் குவித்து அஞ்சலி செய்வதொன்றே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறும் ப்ரதியுபகாரமும் ஆகும்.

மாதுஸ்ரீ மீனாக்ஷி அம்மாள் என்கிற ஸ்ரீ வராஹனின் பரமபக்தை நூறாண்டுகளுக்குமுன் கல்லிடைக்குறிச்சி க்ஷேத்ரத்தில் வாழ்ந்து வந்தவர். அவர் ஸம்ஸ்க்ருத பாஷையில் பெரிய விதூஷி; அதாவது வடமொழியில் பெரும் புலமை வாய்ந்தவர். கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ வராஹன்பால் கொண்ட ப்ரேமையால் ஸ்ரீ வராஹனுக்கு ஸுப்ரபாத பாமாலை ஒன்று புனைந்து ஸமர்ப்பித்தார். அது இசைவடிவம் பெற்று தேர்ந்த இசைக்கலைஞர் ஸ்ரீ ராஜ்குமார் பாரதியால் இசைக்கப்பெற்று ஸ்ரீ வராஹனின் செவிகுளிர அநுதினமும் அதிகாலையில் ஒலித்து பக்திமணம் பரப்பிக்கொண்டிருக்கிறது. இந்நூல் வெளியாகும் தருணம் கல்லிடைக்குறிச்சி க்ஷேத்ரம் இம்மாதரசியை நினைவுகூறுகிறது.

அன்பர்கள் இந்நூலைப் படித்தும், நேரில் சென்று எம்பெருமானை தரிஸித்தும் பயன்பெற்று, பரிபூர்ணர்களாக வாழ்வாங்கு வாழ ஸ்ரீ லக்ஷ்மீபதி பூவராஹனை தாள்பணிந்து ப்ரார்த்திக்கிறேன்.

தாழ்மையுடன்
ஸ்ரீமதி விஷ்ணுப்ரியா சாரி

## பொருளடக்கம் — பக்கம்

### பாகம் - 1


1. அவதாரிகை 1
2. ஸ்ரீ வராஹ அவதார மாண்பு 3
3. ஸ்ரீ வராஹன் விஷயமான சில முக்கிய ஶ்லோகங்கள் 5
4. ஸ்ரீ வராஹ உபநிஷத் அவதாரிகை 6
5. ஸ்ரீ வராஹ உபநிஷத் 8
6. ஸ்ரீ வராஹ சரம ஶ்லோகம் 18
7. ஆழ்வார் பாஶுரங்களில் ஸ்ரீ வராஹர் 20
8. ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் ப்ரவசனாம்ருத ப்ரவாஹங்களிலிருந்து க்ரஹித்த சில அமுத துளிகள் 22
9. இந்தியாவிலுள்ள ஸ்ரீ வராஹர் ஆலயங்கள் 30


### பாகம் - 2


10. தாமிரபரணி நதி ப்ரபாவம் 32
    - தாமிரபரணி நதி தமிழகம் வருகை
    - தாமிரபரணி நதி தீர்த்த கட்டங்கள்
    - தாமிரபரணி நதிதீர ஆலயங்கள்
    - ஶிலாஶாலிபுரமெனும் கல்லிடைக்குறிச்சி க்ஷேத்ரம்


### பாகம் - 3


11. கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயம் 35
    - மூர்த்தி, க்ஷேத்ரம், தீர்த்தம்
    - ஸ்ரீ ஆதிவராஹர் ஆலய அமைப்பும், மூர்த்திகளும்
    - மூலை கருடனும், ஆடி ஸ்வாதியும்
    - அஷ்டாங்க விமான அமைப்பு
    - ஆலய த்விதள விமானம்
    - ஆலயத்தில் காணப்படும் சிற்பங்கள்
    - பலவகை உத்ஸவங்கள்
    - எம்பெருமான் கருடஸேவை
    - ஸ்ரீ மீ. விசுவநாதன் கவிதைத் தொகுப்பு 43


### பாகம் - 4


கல்லிடைக்குறிச்சி எம்பெருமான் ப்ரபாவமும்,
ஸ்ரீ வராஹ ஸ்தோத்ரங்களும்

12. ஸ்ரீ வராஹ பஞ்சரத்ன ஸ்தோத்ரம் - அவதாரிகை 45
13. ஸ்ரீ வராஹ பஞ்சரத்ன ஸ்தோத்ரம் 46
14. ஸ்ரீ பூவராஹேஸ்வர ஸ்துதி - நிகமனம் 48
15. ஸ்ரீ பூவராஹேஸ்வர ஸ்துதி 50
16. ஸ்ரீ பூவராஹாஷ்டோத்தர ஶத நாமாவளி 55
17. ஸ்ரீ அம்புஜவல்லீ அஷ்டோத்தர ஶத நாமாவளி 59
18. ஸ்ரீ ருத்ரன் அருளிய ஸ்ரீ வராஹகவசம் 63
19. ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த "ஆழியெழ" 69



ஸ்ரீ அம்புஜவல்லி நாயிகா ஸமேத
ஸ்ரீ பூவராஹ ஸ்வாமி (மூலவர்)
ஸ்ரீமுஷ்ணம்





ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீலக்ஷ்மீபதிப் பெருமான்
ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் திருக்கோவில், கல்லிடைக்குறிச்சி





ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீலக்ஷ்மீபதிப் பெருமாள் ரத்னாங்கி ஸேவை
ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் திருக்கோவில், கல்லிடைக்குறிச்சி

## அவதாரிகை

ஸ்ரீ லக்ஷ்மீ ஹயவதன பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸுந்தர தாதயார்ய மஹாகுரவே நம:

## ஶிலாஶாலிபுரம் என்னும் கல்லிடைக்குறிச்சியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பூவராஹப் பெருமாளின் ஸ்தோத்திரங்களும் வராஹ தீர்த்த மஹிமையும்

நாம் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் கல்பம் ஶ்வேதவராஹ கல்பம் எனப்படும். ஒவ்வொரு கல்பமும் பல சதுர்யுகங்களைக் கொண்டது. க்ருதயுகம் நடந்த காலத்தில் ஹிரண்யாக்ஷன் என்கிற அஸுரன் இந்த பூமியைக் கவர்ந்து சென்று, ப்ரளயம் போன்ற நிலையில் பூமியை மறைத்து விட்டான். ஸ்ரீபூமிதேவி ஸ்ரீமந் நாராயணனை சரண் புகுந்தாள். எம்பெருமான் வராஹ முகம் கொண்ட மஹா கோலரூபம் கொண்டு அஸுரனை வதைத்து தம் வக்ர தம்ஷ்ட்ரத்தில் (கோரைப்பல்லில்) பூமியை இடந்தெடுத்தார். ஸ்ரீ பூமி தேவிக்கும் ஶரணாகதி மந்த்ரமாகிய ஸ்ரீவராஹ சரமஶ்லோகத்தை லோகோஜ்ஜீவனார்த்தம் உபதேஶித்தருளினார். ஞான காண்டத்தில் வேதம் கூறும் ஶரணாகதி மார்க்கத்தை முதன் முதலாக ஸ்ரீ வராஹபிரானே உபதேஶித்தருளினார். அதனாலேயே அவரை ஞானப்பிரான் எனக் கொண்டாடுகிறோம். இவ்வராஹ மூர்த்தியும் பாரத தேஶத்தில் திருமலை, திருப்பதி, திருவெடவந்தை, ஸ்ரீமுஷ்ணம், திருவனந்தபுரம், கல்லிடைக்குறிச்சி முதலிய இடங்களில் பிரஸித்தமாக எழுந்தருளியுள்ளார். திருமலை ஈஶன் திருவேங்கடமுடையானுக்கே இடம் தந்தருளிய காரணத்தால் திருமலையில் முதலில் ஸ்ரீலக்ஷ்மீ வராஹனை தரிஶித்துப் பிறகே ஸ்ரீஸ்ரீனிவாஸனை தரிஶிப்பது என்கிற நடைமுறை (மரபு) அநுஶரிக்கப்படுகிறது.

திருவிடவெந்தை ஸ்ரீலக்ஷ்மீ வராஹனை தரிஶித்து பிரார்த்தித்தால் தடைகள் நீங்கி உடனே திருமணம் நிச்சயமாவது என்பது நிதர்ஶனமான உண்மை. ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தில் ஶாளக்ராம ஸ்வயம்வ்யக்த மூர்த்தியாகத் தோன்றி ஸ்ரீவராஹன் அருள்பாலித்து வருகிறார்.

அதுபோல கல்லிடைக்குறிச்சி ஸ்ரீலக்ஷ்மீ வராஹப் பெருமான் அநுக்ரஹித்த தீர்த்த மஹிமை பற்றியும் யாக யக்ஞங்கள் செய்வதன்

மஹிமை பற்றியும் ஸ்ரீ மத்ஸ்ய புராணம் தாமிரபரணி மஹாத்ம்யம் 13ம் அத்தியாயம் கூறுவதுடன் இரு அபூர்வமான ஸ்தோத்திர ரத்னங்களையும் தருகிறது. இந்த ஸ்தோத்ரங்களைப் பாராயணம் செய்பவர்கள் ஸகல விதமான மனோரதங்களும் நிறைவேறி, ஸகல ஐஸ்வர்யங்களும் பெற்று, தனிகர்களாகவும், தலைமுறைகளுக்குச் சிறப்புடன் நீடூழி வாழ்வார்கள். இங்குள்ள ஸ்ரீ வராஹ தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய ஸகல பாபங்களும் நீங்குவதுடன், கலிதோஷத்தால் ஏற்படும் ஸகல தீய பலன்களும், மனக்லேஶங்களும் நீங்குவது திண்ணம்.

இங்கு ப்ரம்மா தன் புத்ரர்களுடன் யாகம் செய்ய, ருத்ரன், இந்திரன், குபேரன் உள்ளிட்ட தேவர்களும் தோன்றி அநுக்ரஹித்தனர். இங்கு அரசு புரிந்து வந்த விஷ்ணுதர்மன் என்ற அரசனுக்காகப் புரிந்த யாகத்தில் ஸ்ரீவராஹப் பெருமான் திருப்தியடைந்து தோன்றி தேவர்கள் புஷ்பமாரி பொழிய அங்கேயே கோயில் கொண்டார். சிறிது தூரத்தில் ஸ்ரீருத்ரனும் கோயில் கொண்டுள்ளார். குபேரன் நிரந்தரமாக இங்கு இருந்து கொண்டு இவ்வூர் வாஸிகளையும் தரிஶிப்போரையும் செல்வந்தர்களாக அனுக்ரஹிப்பதுடன் ஸகல க்ஷேமங்களும் அருள்கிறார்.

“ததோ வராஹ தீர்த்தஸ்ய ஶ்ருணுவைபவ முத்தமம்
வர்ணயாமி கலிக்லேஶ சமனை காந்த போஷஜம்”

என மார்க்கண்டேய மஹரிஷி இந்த தீர்த்த மஹிமையைக் கூறுகிறார். இதில் ஸ்நானம் செய்து ஸ்ரீ வராஹனை தரிஶித்தால் கலிகால துக்கங்களும், பாவங்களும் நீங்கி ஸகல வாஞ்சா பலன்களும் ஸித்திக்கும்.

கல்யாணபுரி என்றே பெயர் கொண்டு அளப்பரிய மஹிமை பெற்ற இந்த ஸ்தலத்தின் மஹிமையும், கீழே கொடுக்கப்பட்ட

1. ஸ்ரீ வராஹ பஞ்சரத்னம்
2. ஸ்ரீ வராஹேஸ்வர ஸ்துதி – எனும்

இரு ஸ்தோத்ர ரத்தினங்களின் மஹாத்மியம், சொல் திறனுக்கு அப்பாற்பட்டது. இங்குள்ள எம்பெருமானை தரிஶித்து இந்த ஸ்தோத்ரங்களால் எம்பெருமானை துதித்து ஆஸ்திகர்கள் ஸர்வாபீஷ்டங்களையும் பெற எம்பெருமான், ஆசார்யன் திருவடிகளை பணிகின்றோம்.

– விஷ்ணுப்ரியா

## ஸ்ரீ வராஹ அவதார மாண்பு

அளப்பரிய தேஜோ மயமாய், யக்ஞ வராஹமாய் அவதரித்த ஸ்ரீ விஷ்ணுவுக்கும் அவரைத் தொழும் யாவர்க்கும் ப்ரணாமங்கள்.

ஸ்ரீ வராஹனின் ஒளி பொருந்திய திருமேனி, பூமியை இடந்தெடுத்த ஒப்பற்ற மேன்மை, அஸுரனை வதைத்த ஆற்றல், பன்றியாய் அவதரித்த எளிமை, பிறர் துன்பம் காணத் தாளாத கருணை ஆகிய இவற்றை தியானிக்க ஆத்ம ஞானம் பெருகி, அவனிடம் ஶ்ரணாகதி செய்து இவ்வாத்மா உய்வடையும்.

ஸ்ரீ வராஹப் பெருமான், ஸ்ரீ லக்ஷ்மீ வராஹப்பெருமானாகவும், பூவராஹனாகவும், தானே தாயாய், தந்தையாய் இருந்து ப்ரியத்தையும், ஹிதத்தையும் நல்குகிறான். எனவேயன்றோ ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வார் ஸ்ரீ வராஹப்பெருமானை தம் ரிக்வேத ஸாரமான திருவிருத்தத்தில் "ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே" என்று கொண்டாடி மகிழ்வதுடன் உலக மக்களுக்கு அடையாளமும் காட்டுகின்றார்.

த்ரேதா யுகத்தில் ஹிரண்யாக்ஷன் பூமித்தாயைப் பாயாகச் சுருட்டிக் கடலுக்கடியில் கொண்டு ஒளிக்க பிரம்மா, தன் படைப்புத் தொழிலைச் செய்ய இயலாமல் போயிற்று. அப்போது ப்ரம்மாவின் மூக்கிலிருந்து சிறிய ஏனமாய் (வராஹ உருவமாய்) வெளிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் கண்ணிமைக்கும் நேரத்தில் நெடியதோர் உருவம் தரித்து ஹிரண்யாக்ஷனை வதம் புரிந்து, பூமிப்பிராட்டியை இடந்தெடுத்து தாங்கி கொண்டார்.

"பத்யுர் தக்ஷிணபாணி பங்கஜ புடே விந்யஸ்த பாதாம்புஜா
வாமம் பந்நக ஸார்வ பௌம ஸத்ருஶம் பர்யங்கயந்தீ புஜம் !
போத்ர ஸ்பர்ஶ லஸத்கபோல பலகா புல்லார விந்தேக்ஷண
ஸாமே புஷ்யது மங்களாந் யநுதிநம் ஸர்வாணி ஸர்வம் ஸஹா

(ஸ்ரீ ஸ்வாமி தேஶிகனின் பூஸ்துதி)

பூமிப் பிராட்டி வராஹ வடிவங்கொண்ட எம்பெருமானுடைய தாமரை போன்ற வலது திருக்கரத்தில் தன் இரு திருவடித்தாமரைகளை இருத்தியும் ஆதிஶேஷன் போன்று விளங்கும் எம்பெருமானின் இடது திருக்கரத்தைத் தனது திருப்பள்ளியாகவும் கொண்டு விளங்குகின்றார்.

எம்பெருமானின் திருக்கபோலத்துடன் பிராட்டியின் திருக்கபோலம் சேர்வதால் ஏற்படும் இன்ப உணர்ச்சியால் அவளது திருக்கபோலத்தில் மயிர் கூச்சுகள் தோன்றி, அவள் திருக்கண்களும்

தாமரைபோல மலர்ந்து பிரகாஶிக்கின்றன. அத்தகைய பூமிப்பிராட்டி அடியேனுக்கு எப்போதும் எல்லா மங்களங்களையும் நல்க வேண்டும்." – என்று பூமிப்பிராட்டி குறித்து மங்களாஶாஸனம் செய்கின்றார். இந்த ஶ்லோகமே பூமிப்பிராட்டி விஷயமான த்யான ஶ்லோகமாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்த திவ்ய தம்பதிகளே நமக்குத் தந்தையும், தாயுமாகி ஹிதத்தையும், ப்ரேமையையும் நல்க அவர்கள் தாள் பணிந்து இறைஞ்சி நிற்பது நமது தலையாய கடமையல்லவோ!

அனைத்து ஜீவராஶிகளும், தாவரங்களும் தோன்றுவதற்கும், அவை செழித்து வளர்ந்து மக்களுக்கு அனைத்துச் செல்வங்களையும் வாரி வழங்குவதற்கும் ஆதாரமாக இருப்பது இந்த பூமித்தாய்தான். அனைத்தையும் தரிப்பதாலேயே பூமிக்கு தரணி என்ற பெயர் ஏற்பட்டது. பூமிக்கே அடிப்படையாக அமைந்தது தஶாவதாரத்தில் மூன்றாவது அவதாரமான ஸ்ரீவராஹ அவதாரம் என்பதால் இந்த அவதாரத்தை மட்டும் ஆதி என்ற அடைமொழியிட்டு ஸ்ரீ ஆதிவராஹன் என்று கொண்டாடுகிறோம். பூமியில் காணப்படும் அனைத்துப் புனிதத் தலங்களும், புனித ஆறுகளும், கடல்களும், மலைகளும் ஸ்ரீஆதிவராஹப் பெருமான் அருளாலேயே நிலைபெற்றதால் ஸ்ரீ வராஹ அவதாரம் தஶாவதாரத்தில் ஓர் தனி ஏற்றம் பெறுகிறது.

ஸ்ரீ வராஹ மூர்த்தியை யக்ஞவராஹர் என்றும் யக்ஞ ரக்ஷகர் என்றும் புராணங்கள் போற்ற, ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ விஷ்ணுபுராணம், வாயு புராணம், ஹரிவம்ஶம் போன்ற நூல்கள் எந்த எந்த யக்ஞபாத்திரங்கள் ஸ்ரீவராஹப் பெருமானின் எந்தெந்த அவயவங்களாக அமைந்துள்ளன என்று விளக்கமாகக் கூறுகின்றன. வராஹத்தின் நான்கு பாதங்களும் நான்கு வேதங்கள், வராஹம் "குர், குர் " என்று எழுப்பும் ஒலியே ஸாமவேதம், நாக்கு வேள்வித் தீ, வக்ர தம்ஷ்ட்ரம் யூப ஸ்தம்பம், ரோமங்கள் தர்ப்பைகள், இரண்டு கண்கள் பகலும், இரவும், அவன் காதணிகள் வேதாந்தங்கள், மூக்கு ஶ்ருவம் எனும் ஹோமக் கரண்டி, இதயம் தக்ஷிணை, ஶரீரம் யக்ஞ ஶாலை, என்றெல்லாம் வாயு புராணம் ஸ்ரீ யக்ஞவராஹனின் அவயவங்களை வர்ணித்துக்கொண்டே போகின்றது. ஸ்ரீ வராஹர் குறித்து ஸ்ரீ வராஹ கவசம், ஸ்ரீ வராஹ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் போன்ற அருமையான க்ரந்தங்கள் உள்ளன.

## ஸ்ரீ வராஹன் விஷயமான சில முக்கிய ஶ்லோகங்கள்

### ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்த தஶாவதார ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ வராஹ அவதாரம்

கோ3பாயேத3நிஶம் ஜக3ந்தி குஹநா போத்ரீ பவித்ரீ க்ருத –
ப்3ரஹ்மாண்ட: ப்ரளயோர்மி கோ4ஷ கு3ருபிர்கோ4ணா ரவைர்கு4ர்கு4ரை:
யத்த3ம்ஷ்ட்ராங்குர கோடி கா3ட4 க4டநா நிஷ்கம்ப நித்ய ஸ்தி2தி:
ப்3ரஹ்ம ஸ்தம்ப3மஸௌ த3ஸௌ ப4கவதீ முஸ்தேவ விஶ்வம்ப4ரா.

### ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ பூவராஹ அவதார ஸ்தோத்ரம்

சைத்ரே க்ருஷ்ண சதுர்த3ஶ்யாம் ரேவத்யாம் பா4நுவாஸரே
அஶ்வத்த ரூபம் வராஹம் ஸ்ரீ முஷ்ணேஶம் நமாம்யஹம்

### எம்பெருமானின் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்களைக் குறித்த ஶ்லோகம்

ஆத்3யம் ரங்க3மிதி ப்ரோக்தம் விமாநம் ரங்க3ஸஞ்ஜிதம்
ஸ்ரீமுஷ்ணம் வேங்கடாத்3ரிம் ச ஶாளக்3ராமம் ச நைமிஶம்
தோயாத்3ரிம் புஷ்கரம் சைவ நரநாராயணாஶ்ரமம்
அஷ்டௌ மே மூர்த்தய: ஸந்தி ஸ்வயம்வ்யக்தா மஹீதலே.

# ஸ்ரீ வராஹ உபநிஷத்

## அவதாரிகை

வெவ்வேறு தெய்வங்களைக் குறித்த 108 உபநிஷதங்களில் வராஹ உபநிஷத் என்பது முக்யமான ஒன்று. ஐந்து அத்யாயங்களைக் கொண்ட இந்த உபநிஷத்தில் ரிபு முனிவர் தேவமானக் கணக்கில் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் செய்ய ஸ்ரீ வராஹமூர்த்தி ப்ரத்யக்ஷமாகி வேண்டிய வரம் என்னவென வினவுகிறார். ரிபு முனிவர் "ப்ரம்மாதி தேவர்கள், தேவரீருடைய ஸ்வரூப ஞானத்தை முக்தி என்கிறார்கள். ஆகையால் அந்த ஸ்வரூபத்தைப் பற்றிய ப்ரம்ம வித்யையை உபதேஶிக்க வேண்டும்" என ப்ரார்த்திக்கிறார். ஸ்ரீ வராஹ பகவானும், "எவர் என்னை பக்தியுடன் உபாஸிக்கிறார்களோ அவர்கள் அஞ்ஞானத்தினின்றும், உலக காரியங்களினின்றும் விடுபட்டு ஜீவன் முக்தராவர். அவர் தொண்ணூற்றாரு தத்துவங்களையும் உணர்ந்து வானப்ரஸ்தராயினும் அல்லது முற்றும் துறந்த ஸந்யாஸியாயினும் முக்தி எய்துவர் என்பதில் ஸந்தேஹமில்லை" என உரைக்கிறார். தொடர்ந்து வரும் உபநிஷத்துக்களில் உலகக் கட்டுகளை, சிந்தனைகளை ஒழித்து வைராக்யாதி ஆறுகுணங்களை வளர்த்து, ஆத்மா உய்ய, பிரம்மநாடி வழியாக ஸாதனை மூலம் ஆத்மாவை வெளிக்கொணர்ந்து முக்தி பெறுவது எப்படியென்கிற யோக ஸாதனையைப் பற்றி விரிவாகக் கூறுகிறார்.

தலையில் ஒரு குடத்தைத் தாங்கி ஒரு நர்த்தகி நாட்டியமாடும்போது ஸங்கீதம், தாளம், லயம், பாவம் யாவற்றிலும் வஶப்பட்ட நிலையிலும் குடத்தை எவ்வாறு விழாமல் காப்பாற்றுகிறாளோ அதுபோல நாம் உலக விஷயங்களில் ஈடுபட்டாலும் ப்ரும்ம நாட்டத்திலிருந்து புத்தி விலகாமல் இருக்க வேண்டும். ஆத்மா ஒன்றிலேயே திருஷ்டியைச் செலுத்தி ஆத்மாவிலேயே ஆத்ம திருப்தி எய்தி வெல்பவன் ஆத்மஞானி. அவன் அவித்யையை நாடி ஓடமாட்டான். எவனுடைய புத்தி பற்று நீங்கியதோ அவன் செயல் புரிந்தாலும், புரியாவிட்டாலும் ஜீவன் முக்தனாகின்றான். பிறகு ஶரீர பாவம், ப்ராணன், நாடி இவைகளின்

விவரங்களைக் கூறி, ப்ரணவத்தின் மஹத்துவத்தை உபதேஶிக்கிறார். ஸ்வப்ன, ஜாக்ர, ஸுஷுப்தி, நிலைகளிலும் ஆத்ம ஞானம் விலகாது இருக்கக்கூடிய நிலைகளைப் பற்றி உரைக்கிறார். இவ்வாறு ஒரே நிலையில் வேறு யாதொன்றையும் நாடாது அவிச்சின்னமான தைல ஒழுக்கு போன்று எம்பெருமானை நினைப்பவனின் ஆத்மா பிரம்மநாடி மூலம் வெளிப்பட்டு மோக்ஷத்தை அடைகிறது என்பதே இந்த அத்யாயங்களின் ஸாரமாகும். ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வாரும் "வீடுமின் முற்றவும்"*, "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றெல்லாம் மோக்ஷத்தைப் பற்றி பரக்கப் பேசுகிறார்.

*விடுமின் முற்றமும் என்று பொருள்கொள்ள வேண்டும்.

# वराहोपनिषत्

## ॥ प्रथमोऽध्यायः ॥

'ओं सहनाववतु' इति शान्तिः।
अथ ऋभुर्वै महामुनि-र्देवमानेन द्वादश वत्सरं तपश्चचार।
तदवसाने वराहरूपी भगवान् प्रादुरभूत्।
सहोवाच उत्तिष्ठोत्तिष्ठ वरं वृणीष्वेति। सोदतिष्ठत्।
तस्मै नमस्कृत्योवाच ब्रह्मादयः सुराः सर्वे त्वद्रूपज्ञानान्मुक्ति माहुः।
अतस्त्वद्रूप प्रतिपादिकां ब्रह्मविद्यां ब्रूहीति होवाच।
तथेति होवाच वराहरूपी भगवान् ॥ १.१ ॥

वराहरूपिणं मां ये भजन्ति मयि भक्तितः।
विमुक्ताज्ञान तत्कार्या जीवन्मुक्ता भवन्ति ते।
ये षण्णवति तत्वज्ञा यत्र कुत्राश्रमे रताः।
जटी मुण्डी शिखी वापि मुच्यते नात्र संशयः ॥ १.२ ॥

## ॥ द्वितीयोऽध्यायः ॥

स्ववर्णाश्रम-धर्मेण तपसा गुरुतोषणात्।
साधनं प्रभवेत् पुंसां वैराग्यादि चतुष्टयम्।
नित्यानित्य वस्तु विवेकश्च इहा मुत्र विरागता।
शमादिषट्कसंपत्ति-र्मुमुक्षा तां समभ्यसेत्।
एवं जितेन्द्रियो भूत्वा सर्वत्र ममतामतिम्।
विहाय साक्षि चैतन्ये मयि कुर्यादहं मतिम्।
स्वस्वरूप संधानान्नृत्यन्तं सर्व साक्षिणम्।
मुहूर्तं चिन्तयेन्मां यः सर्वबन्धैः प्रमुच्यते।
सर्वभूतान्तरस्थाय नित्यमुक्त-चिदात्मने।
प्रत्यक् चैतन्यरूपाय मह्यमेव नमो नमः।
नमो मह्यं परेशाय नमस्तुभ्यं शिवाय च।
किं करोमि क्व गच्छामि किं गृह्णामि त्यजामि किम्।
अस्ति ब्रह्मेति चेद्वेद परोक्ष ज्ञानमेव तत्।

# வராஹோபநிஷத்

## முதல் அத்தியாயம்

'ஓம் ஸஹநாவவது' இதி ஶாந்தி:
அத2 ரிபு4ர்வை மஹாமுனிர் தே3வமாநேன
த்3வாத3ஶ வத்ஸரம் தபஶ்சசார।
தத3வஸானே வராஹரூபீ ப4க3வாந் ப்ராதுரபூ4த்।
ஸஹோவாச உத்திஷ்ட்டோ2த்திஷ்ட்ட2 வரம் வ்ரிணீஷ்வேதி।
ஸோததிஷ்ட்ட2த்।
தஸ்மை நமஸ்க்ருத்யோவாச। ப்3ரஹ்மாத3ய: ஸுரா:
ஸர்வே த்வத்3ரூபஞாநான்முக்தி மாஹு:।
அதஸ்த்வத்3ரூப ப்ரதிபாதி3காம் ப்3ரஹ்மவித்3யாம் ப்3ரூஹீதி ஹோவாச।
ததே2தி ஹோவாச வராஹரூபீ ப4க3வான் ॥ ॥ 1.1 ॥

வராஹரூபிணம் மாம் யே ப4ஜந்தி மயி ப4க்தித:।
விமுக்தாஞாந தத்கார்யா ஜீவந்முக்தா ப4வந்தி தே।
யே ஷண்ணவதி தத்வஜ்ஞா யத்ர குத்ராஶ்ரமே ரதா:।
ஜடீ முண்டீ3 ஶிகீ4 வாபி முச்யதே நாத்ர ஸம்ஶய: ॥ ॥ 1.2 ॥

## இரண்டாவது அத்தியாயம்

ஸ்வவர்ணாஶ்ரம-த4ர்மேண தபஸா கு3ருதோஷணாத்।
ஸாத4நம் ப்ரப4வேத் பும்ஸாம் வைராக்3யாதி3 சதுஷ்டயம்।
நித்யாநித்ய வஸ்து விவேகஶ்ச இஹா முத்ர விராக3தா।
ஶமாதி3ஷட்கஸம்பத்தி-ர்முமுக்ஷா தாம் ஸமப்4யஸேத்।
ஏவம் ஜிதேந்த்3ரியோ பூ4த்வா ஸர்வத்ர மமதாமதிம்।
விஹாய ஸாக்ஷி சைதந்யே மயி குர்யாத3ஹம் மதிம்।
ஸ்வ-ஸ்வரூப ஸந்தா4நாந் ந்ருத்யந்தம் ஸர்வ ஸாக்ஷிணம்।
முஹூர்த்தம் சிந்தயேந்மாம் ய: ஸர்வப3ந்தை4: ப்ரமுச்யதே।
ஸர்வபூ4தாந்தரஸ்தா2ய நித்யமுக்த-சிதா3த்மநே।
ப்ரத்யக் சைதந்ய ரூபாய மஹ்யமேவ நமோ நம:।
நமோ மஹ்யம் பரேஶாய நமஸ்துப்4யம் ஶிவாய ச।
கிம் கரோமி க்வ க3ச்சா2மி கிம் க்3ருஹ்ணாமி த்யஜாமி கிம்।
அஸ்தி ப்3ரஹ்மேதி சேத்3வேத பரோக்ஷ ஜ்ஞாநமேவ தத்।

अहं ब्रह्मेति चेद्वेद साक्षात्कारः स उच्यते।
यस्मिन् काले स्वमात्मानं योगी जानाति केवलं।
तस्मात्कालात् समारभ्य जीवन्मुक्तो भवेदसौ।
द्वे पदे बन्धमोक्षाय निर्ममेति ममेति च।
ममेति बध्यते जन्तु-र्निर्ममेति विमुच्यते।
बाह्य चिन्ता न कर्तव्या तथैवान्तर-चिन्तिका।
सर्व चिन्तां समुत्सृज्य स्वस्थो भव सदा ऋभो ॥ २.१ ॥

ईक्षणादि प्रवेशान्ता सृष्टिरीशेन कल्पिता।
जाग्रदादि विमोक्षान्तः संसारो जीवकल्पितः।
अज्ञाने बुद्धिविलये निद्रा सा भण्यते बुधैः।
विलीनाज्ञानतत्कार्ये मयि निद्रा कथं भवेत्।
बुद्धेः पूर्ण विकासोऽयं जागरः परिकीर्त्यते।

विकारादि विहीनत्वात् जागरो मे न विद्यते।
सूक्ष्मनाडिषु संचारो बुद्धेः स्वप्नः प्रजायते।
संचार धर्मरहिते मयि स्वप्नो न विद्यते।
सुषुप्ति काले सकले विलीने तमसावृते।
स्वरूपं महदानन्दं भुंक्ते विश्वविवर्जितः।
सुप्तेरुत्थाय सुप्त्यन्तं ब्रह्मैकं प्रविचिन्त्यताम्।
उत्पन्न शक्तिबोधस्य त्यक्त निःशेषकर्मणः।
योगिनः सहजावस्था स्वयमेव प्रकाशते।
पुंखानुपुंख विषयेक्षण तत्परोऽपि ब्रह्मावलोकनधियं न जहाति योगी।
सङ्गीत-ताल-लयवाद्य वशं गतापि मौलिस्थ-कुंभ-परिरक्षणधी र्नटीव।
सर्व चिन्तां परित्यज्य सावधानेन चेतसा।
नाद एवानु संधेयो योग साम्राज्यमिच्छता॥ ॥ २.२ ॥

அஹம் ப்ரஹ்மேதி சேத்3வேத3 ஸாக்ஷாத்கார: ஸ உச்யதே ।
யஸ்மிந் காலே ஸ்வமாத்மாநம் யோகீ3 ஜாநாதி கேவலம் ।
தஸ்மாத்காலாத் ஸமாரப்4ய ஜீவந்முக்தோ ப4வேத்3ஸௌ ।
த்3வே பதே3 ப3ந்த4மோக்ஷாய நிர்மமேதி மமேதி ச ।
மமேதி ப3த்4யதே ஜந்துர்-நிர்மமேதி விமுச்யதே ।
பாஹ்ய சிந்தா ந கர்தவ்யா ததை2வாந்தர-சிந்திகா ।
ஸர்வ சிந்தாம் ஸமுத்ஸ்ருஜ்ய ஸ்வஸ்தோ2 ப4வ ஸதா3 ருபோ4 ॥ ॥ 1.2 ॥

ஈக்ஷணாதி3 ப்ரவேஶாந்தா ஸ்ருஷ்டிரீஶேந கல்பிதா ।
ஜாக்ரதா3தி3 விமோக்ஷாந்த: ஸம்ஸாரோ ஜீவகல்பித: ।
அஜ்ஞாநே பு3த்தி4விலயே நித்3ரா ஸா ப4ண்யதே பு3தை4: ।
விலீநாஞாநதத்கார்யே மயி நித்3ரா கத2ம் ப4வேத் ।
பு3த்3தே4: பூர்ண விகாஸோऽயம் ஜாக3ர: பரிகீர்த்யதே ॥

விகாராதி3 விஹீநத்வாத் ஜாக3ரோ மே ந வித்3யதே ।
ஸூக்ஷ்மநாடி3ஷு ஸஞ்சாரோ பு3த்3தே4: ஸ்வப்ந: ப்ரஜாயதே ।
ஸஞ்சார த4ர்மரஹிதே மயி ஸ்வப்நோ ந வித்3யதே ।
ஸுஷுப்தி காலே ஸகலே விலீநே தமஸாவ்ருதே ।
ஸ்வரூபம் மஹதா3நந்த3ம் பு4ங்க்தே விஶ்வவிவர்ஜித: ।
ஸுப்தேருத்தா2ய ஸுப்த்யந்தம் ப்3ரஹ்மைகம் ப்ரவிசிந்த்யதாம் ।
உத்பந்ந ஶக்திபோ3த4ஸ்ய த்யக்த நி:ஶேஷ கர்மண: ।
யோகி3ந: ஸஹஜாவஸ்தா2 ஸ்வயமேவ ப்ரகாஶதே ।
புங்கா2நுபுங்க2 விஷயேக்ஷண தத்பரோऽபி
ப்ரஹ்மாவலோகநதி4யம் ந ஜஹாதி யோகீ3 ।
ஸங்கீ3த-தாள-லயவாத்3ய வஶம் க3தாபி
மௌலிஸ்த்த2-கும்ப4-பரிரக்ஷணதீ4ர்நடீவ ।
ஸர்வ சிந்தாம் பரித்யஜ்ய ஸாவதா4நேந சேதஸா ।
நாத3 ஏவாநு ஸந்தே4யோ யோக3 ஸாம்ராஜ்யமிச்ச2தா ॥ ॥ 2.2 ॥

## ॥ तृतीयोऽध्याय ॥

जन्ममृत्यु-सुखदुःख वर्जितं जातिनीति-कुलगोत्रदूरगम्।
चिद्विवर्त जगतोऽस्य कारणं तत्सदाहमिति मौनमाश्रय।
जलस्य चलनादेव चंचलत्वं यथा रवेः।
तथाऽहंकारसंबन्धादेव संसार आत्मनः।
चित्तमूलं हि संसारस्तत्प्रयत्नेन शोधयेत्।
अनात्मविद-मुक्तोऽपि सिद्धि जालानि वांछति।
द्रव्य मन्त्र क्रियाकाल-युक्त्याप्नोति मुनीश्वर।
नात्मज्ञस्य विषय आत्मज्ञो ह्यात्ममात्र-दृक्।
आत्मनाऽऽत्मनि संतृप्तो नाविद्यामनुधावति॥ ॥ ३.१ ॥

## ॥ चतुर्थोऽध्यायः ॥

अथ ह ऋभुं भगवन्तं निदाघः पप्रच्छ जीवन्मुक्ति लक्षण-मनुब्रूहीति।
तथेति सहोवाच। सप्तभूमिषु जीवन्मुक्ताश्चत्वारः।
ज्ञानभूमिः शुभेच्छा स्यात्प्रथमा समुदीरिता।
विचारणा द्वितीया तु तृतीया तनुमानसी।
सत्त्वापत्तिश्चतुर्थी स्यात्ततोऽसंसक्ति नामिका।
पदार्थ भावना षष्ठी सप्तमी तुर्यगा स्मृता।
तदवस्था जाग्रत्स्वप्न सुषुप्ति तुरीयगाः ॥ ४.१ ॥

स्थितः किं मूढ एवास्मि प्रक्ष्योऽहं शास्त्र-सज्जनैः।
वैराग्यपूर्व-मिच्छेति शुभेच्छेत्युच्यते बुधैः।
शास्त्र सज्जन संपर्क वैराग्याभ्यास पूर्वकम्।
सदाचारप्रवृत्तिर्या प्रोच्यते सा विचारणा।
विचारणा शुभेच्छाभ्यामिन्द्रियार्थेषु रक्तता।
यत्र सा तनुतामेति प्रोच्यते तनुमानसी।
भूमिका त्रितयाभ्यासाच्चित्तेर्थ-विरतेर्वशात्।
सत्त्वात्मनि स्थिते शुद्धे सत्त्वापत्तिरुदाहृता।
दशा चतुष्टयाभ्यासा दसंसर्गफला तु या।
रूढ सत्त्व चमत्कारा प्रोक्ता संसक्ति नामिका।

## மூன்றாவது அத்தியாயம்

ஜந்மம்ருத்யு-ஸுக2து:க2 வர்ஜிதம் ஜாதிநீதி-குலகோத்ரதூ3ரக3ம் ।
சித்3விவர்த ஜக3தோऽஸ்ய காரணம் தத்ஸதா3ऽஹமிதி மௌநமாஶ்ரய ।
ஜலஸ்ய சலநாதே3வ சஞ்சலத்வம் யதா2 ரவே: ।
ததா2ऽஹங்காரஸம்ப3ந்தா4தே3வ ஸம்ஸார ஆத்மந: ।
சித்தமூலம் ஹி ஸம்ஸாரஸ்தத் ப்ரயத்நேந ஶோத4யேத் ।
அநாத்மவித3-முக்தோऽபி ஸித்3தி4 ஜாலாநி வாஞ்ச2தி ।
த்3ரவ்ய மந்த்ர க்ரியாகால-யுக்த்யாப்நோதி முநீஶ்வர ।
நாத்மஜ்ஞஸ்ய விஷய ஆத்மஜ்ஞோ ஹ்யாத்ம-மாத்ர-த்3ருக் ।
ஆத்மநாऽऽத்மநி ஸந்த்ருப்தோ நாவித்3யாமநுதா4வதி ॥ ॥ 3.1 ॥

## நான்காவது அத்தியாயம்

அத2 ஹ ருபு4ம் ப4கவந்தம் நிதா3க4:
பப்ரச்ச2 ஜீவந்முக்தி லக்ஷண-மநுப்3ரூஹீதி ।
ததே2தி ஸஹோவாச ।
ஸப்தபூ4மிஷு ஜீவந்முக்தாஶ்சத்வார: ।
ஜ்ஞாநபூ4மி: ஶுபே4ச்சா2 ஸ்யாத் ப்ரத2மா ஸமுதீ3ரிதா ।
விசாரணா த்3விதீயா து த்ருதீயா தநுமாநஸீ ।
ஸத்வாபத்திஶ்சதுர்த்தீ2 ஸ்யாத்ததோऽஸம்ஸக்தி நாமிகா ।
பதார்த2 பா4வநா ஷஷ்டீ2 ஸப்தமீ துர்யகா3 ஸ்ம்ருதா ।
தத3வஸ்தா2 ஜாக்3ரத்ஸ்வப்ந ஸுஷுப்தி துரீயகா3: ॥ ॥ 4.1 ॥

ஸ்தி2த: கிம் மூட4 ஏவாஸ்மி ப்ரக்ஷ்யோऽஹம் ஶாஸ்த்ர-ஸஜ்ஜநை: ।
வைராக்3யபூர்வ-மிச்சே2தி ஶுபே4ச்சே2த்யுச்யதே பு3தை4: ।
ஶாஸ்த்ர ஸஜ்ஜந ஸம்பர்க வைராக்3யாப்4யாஸ பூர்வகம் ।
ஸதா3சாரப்ரவ்ருத்திர்யா ப்ரோச்யதே ஸா விசாரணா ।
விசாரணா ஶுபே4ச்சா2ப்4யா-மிந்த்ரியார்த்தே2ஷு ரக்ததா ।
யத்ர ஸா தநுதாமேதி ப்ரோச்யதே தநுமாநஸீ ।
பூ4மிகா த்ரிதயாப்4யாஸாச் சித்தேர்த்த2-விரதேர்வஶாத் ।
ஸத்வாத்மநி ஸ்தி2தே ஶுத்3தே4 ஸத்வாபத்திருதாஹ்ருதா ।
தஶா சதுஷ்டயாப்4யாஸா தஸம்ஸர்கே3ப2லா து யா2 ।

भूमिका पञ्चकाभ्यासात्स्वात्मारामतया भृशम्।
आभ्यन्तराणां बाह्यानां पदार्थाना-मभावनात्।
पर प्रयुक्तेन चिरं प्रत्ययेनावबोधनम्।
पदार्थभावना नाम षष्ठी भवति भूमिका।
षड्भूमिका चिराभ्यासाद् भेदस्यानुपलंभनात्।
यत्स्वभा वैकनिष्ठत्व सा ज्ञेया तुर्यगा गतिः ॥ ४.२ ॥

शुभेच्छादित्रयं भूमि भेदाभेद युतं स्मृतम्।
तथावद्वेद बुद्ध्येदं जगज्ञाग्रति दृश्यते।
अद्वैते स्थैर्य मायाते द्वैते च प्रशमं गते।
पश्यन्ति स्वप्रवल्लोकं तुर्य भूमिसु योगतः।
विच्छिन्न-शरद भ्रांश विलयं प्रविलीयते।
सत्त्वावशेष एवास्ते हे निदाघ दृढी कुरु।
पञ्चभूमिं समारुह्य सुषुप्ति पद नामिकाम्।
शान्तशेष-विशेषांश-स्तिष्ठत्यद्वैत मात्रके।
अन्तर्मुखतया नित्यं बहिर्वृत्ति परोऽपिसन्।
परिश्रान्तया नित्य निद्रालुरिव लक्ष्यते।
कुर्वन्नभ्यास-मेतस्यां भूम्यां संयग्विवासनः।
सप्तमि गाढ सुत्प्याख्या क्रमप्राप्ता पुरातनी।
यत्र नासन्न सद्रूपो नाहं नाप्यहंकृतिः।
केवलं क्षीण मनन आस्तेऽद्वैतेऽतिनिर्भयः ॥ ४.३ ॥

नोदेति नास्तमेति सुखे दुःखे मनः प्रभा।
यथाप्राप्तस्थितिर्यस्य स जीवन्मुक्त उच्यते।
यो जागर्ति सुषुप्तिस्थो यस्य जाग्रन्न विद्यते।
यस्य निर्वासनो बोधः स जीवन्मुक्त उच्यते।
रागद्वेष भयादीना मनुरूपं चरन्नपि।
योऽन्तर्व्योमवदच्छन्नः स जीवन्मुक्त उच्यते।
यस्य नाहंकृतो भावो बुद्धिर्यस्य न लिप्यते।
कुर्वतोऽकुर्वतो वाऽपि स जीवन्मुक्त उच्यते ॥ ४.४ ॥

ரூட³ ஸத்வ சமத்காரா ப்ரோக்தா ஸம்ஸக்தி நாமிகா।
பூ⁴மிகா பஞ்சகாப்⁴யாஸாத் ஸ்வாத்மாராமதயா ப்⁴ருஶம்।
ஆப்⁴யந்தராணாம் பா³ஹ்யாநாம் பதா³ர்த்த²நா-மபா⁴வநாத்।
பர ப்ரயுக்தேந சிரம் ப்ரத்யயேநாவபோ³த⁴நம்।
பதா³ர்த்த² பா⁴வநா நாம ஷஷ்டீ² ப⁴வதி பூ⁴மிகா।
ஷட்³பூ⁴மிகா சிராப்⁴யாஸாத்³ பே⁴த³ஸ்யாநுபலம்ப⁴நாத்।
யத்ஸ்வபா⁴ வைக நிஷ்ட²த்வ ஸா ஜ்ஞேயா துர்யகா³ க³தி:॥ ॥ 4. 2 ॥

ஶுபே⁴ச்சா²தி³த்ரயம் பூ⁴மி பே⁴தாபே⁴த யுதம் ஸ்ம்ருதம்।
ததா²வத்³வேத³ பு³த்த⁴யேத³ம் ஜகஜ்ஜாக்³ருதி த்³ருஶ்யதே।
அத்³வைதே ஸ்தை²ர்ய மாயாதே த்³வைதே ச ப்ரஶமம் க³தே।
பஶ்யந்தி ஸ்வப்நவல்லோகம் துர்ய பூ⁴மிஸு யோக³த:।
விச் சி²ந்ந-ஶரத³ப்⁴ராம்ஶ விலயம் ப்ரவிலீயதே।
ஸத்வாவஶேஷ ஏவாஸ்தே ஹே நிதா³க⁴ த்³ருட⁴ குரு।
பஞ்சபூ⁴மிம் ஸமாருஹ்ய ஸுஷுப்தி பத³ நாமிகாம்।
ஶாந்த ஶேஷ-விஶேஷாம்ஶ - ஸ்திஷ்ட²த்யத்³வைத மாத்ரகே।
அந்தர்முக²தயா நித்யம் பஹிர்வ்ருத்தி பரோऽபிஸந்।
பரிஶ்ராந்தயா நித்ய நித்³ராலுரிவ லக்ஷ்யதே।
குர்வந்நப்⁴யாஸ-மேதஸ்யாம் பூ⁴ம்யாம் ஸம்யக்³விவாஸந:।
ஸப்தமி கா³ட⁴ ஸுப்த்யாக்²யா க்ரமப்ராப்தா புராதநீ।
யத்ர நாஸந்ந ஸத்³ரூபோ நாஹம் நாப்யஹங்க்ருதி:।
கேவலம் க்ஷீண மநந ஆஸ்தேऽத்³வைதேऽதிநிர்ப⁴ய: ॥ ॥ 4.3 ॥

நோதே³தி நாஸ்தமேதி ஸுகே² து³:கே² மந: ப்ரபா⁴।
யதா²ப்ராப்தஸ்தி²திர்யஸ்ய ஸ ஜீவந்முக்த உச்யதே।
யோ ஜாக³ர்தி ஸுஷுப்திஸ்தோ² யஸ்ய ஜாக்³ரந்ந வித்³யதே।
யஸ்ய நிர்வாஸநோ போ³த⁴: ஸ ஜீவந்முக்த உச்யதே।
ராக³த்³வேஷ ப⁴யாதீ³நா மநுரூபம் சரந்நபி।
யோऽந்தர்யோமவத³ச்ச²ந்ந: ஸ ஜீவந்முக்த உச்யதே।
யஸ்ய நாஹங்க்ருதோ பா⁴வோ பு³த்³தி⁴ர்யஸ்ய ந லிப்யதே।
குர்வதோऽகுர்வதோ வாऽபி ஸ ஜீவந்முக்த உச்யதே। ॥ 4.4 ॥

## ॥ पञ्चमोऽध्यायः ॥

लय-मन्त्रहठा योगा योगो ह्यष्टाङ्ग संयुतः। दिवारात्रमविच्छिन्नं यामे यामे यदा यदा। अनेनाभ्यास योगेन वायुरभ्यसितो भवेत्। वायावभ्यसिते वह्निः प्रत्यहं वर्धते तनौ। वह्नौ विवर्धमाने तु सुखमन्नादि जीर्यते। अन्नस्य परिपाकेन रस वृद्धिः प्रजायते। रसे वृद्धिं गते नित्यं वर्धन्ते धातवस्तथा। धातूनां वर्धनेनैव प्रबोधो वर्धते तनौ। वह्यन्ते सर्व पापानि जन्मकोट्यार्जितानि च ॥ ५.१ ॥

गुदमेढ्रान्तरालस्थं मूलाधारं त्रिकोणकम्। शिवस्य बिन्दुरूपस्य स्थानं तद्धि प्रकाशकम्। यत्र कुण्डलिनी नाम पराशक्तिः प्रतिष्ठिता। यस्मादुत्पद्यते वायु-र्यस्माद्वह्निः प्रवर्धते। यस्मादुत्पद्यते बिन्दु-र्यस्मान्नादः प्रवर्धते। यस्मादुत्पद्यते हंसो यस्मादुत्पद्यते मनः। मूलाधारादि षट् चक्रं शक्तिस्थान-मुदीरितम्। कण्ठादुपरि मूर्धान्तं शांभवं स्थान मुच्यते। नाडीनामाश्रयः पिण्डो नाड्यः प्राणस्य चाश्रयः। जीवस्य निलयः प्राणो जीवो हंसस्य चाश्रयः। हंसः शक्तेरधिष्ठानं चराचरमिदं जगत्। निर्विकल्पः प्रसन्नात्मा प्राणायामं समभ्यसेत् ॥ ५.२ ॥

अनेक जन्मसंस्कार गुरुदेवप्रसादतः। योगाभ्यासात् ततो वेधो जायते तस्य योगिनः। इडापिंगलयोर्मध्ये सुषुम्ना-नाडि मण्डले। मुद्राबन्ध विशेषेण वायुमूर्ध्वं च कारयेत्। ह्रस्वो दहति पापानि दीर्घो मोक्षप्रदायकः। तैलधारामिवाच्छिन्नं दीर्घ घण्टा निनादवत्। अवाच्यं प्रणवस्याग्रं यस्तं वेद स वेदवित्। ह्रस्वं बिन्दुगतं दैर्घ्यं ब्रह्मरन्ध्रगतं प्लुतम्। द्वादशान्तगतं मन्त्रं प्रसादं मन्त्रसिद्धये। सर्वविघ्न हरश्चायं प्रणवः सर्वदोषहा। हरिः ओँ तत्सत ॥

॥ ५.३ ॥

इति वराहोपनिषत् समाप्ता।



ஸ்ரீ கள்வன்
கோமளவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ யதோக்தகாரி ஸந்நிதி
திருவெஃகா, காஞ்சிபுரம்
(திருமங்கையாழ்வார் மங்களாஶாஸனம்)

## ஐந்தாவது அத்தியாயம்

லய-மந்த்ரஹடா2 யோகா3 யோகோ3 ஹ்யஷ்டாங்க3 ஸம்யுத:।
தி3வாராத்ர-மவிச்சி2ந்நம் யாமே யாமே யதா3 யதா3।
அநேநாப்4யாஸ யோகே3ந வாயுரப்4யஸிதோ ப4வேத்।
வாயாவப்4யஸிதே வஹ்நி: ப்ரத்யஹம் வர்த்த4தே தநௌ।
வஹ்நௌ விவர்த4மாநே து ஸுக2மந்நாதி3 ஜீர்யதே।
அந்நஸ்ய பரிபாகேந ரஸ வ்ருத்3தி4: ப்ரஜாயதே।
ரஸே வ்ருத்3தி4ம் க3தே நித்யம் வர்த்த4ந்தே தா4தவஸ்ததா2।
தா4தூநாம் வர்த்த4நேநைவ ப்ரபோ3தோ4 வர்த்த4தே தநௌ।
வஹ்யந்தே ஸர்வ பாபாநி ஜந்மகோட்யார்ஜிதாநி ச॥ ॥ 5.1 ॥

கு3த3மேட்4ராந்தராலஸ்த2ம் மூலாதா4ரம் த்ரிகோணகம்।
ஶிவஸ்ய பி3ந்து3ரூபஸ்ய ஸ்தா2நம் தத்3தி4 ப்ரகாஶகம்।
யத்ர குண்ட3லிநீ நாம பராஶக்தி: ப்ரதிஷ்டி2தா।
யஸ்மாது3த்பத்3யதே வாயுர்-யஸ்மாத்3வஹ்நி: ப்ரவர்த்த4தே॥

யஸ்மாது3த்பத்3யதே பி3ந்து3ர்யஸ்மாந்நாத3: ப்ரவர்த்த4தே।
யஸ்மாது3த்பத்3யதே ஹம்ஸோ யஸ்மாதுத்பத்3யதே மந:।
மூலாதா4ராதி3 ஷட் சக்ரம் ஶக்திஸ்தா2ந-முதீ3ரிதம்।
கண்டா2து3பரி மூர்தா4ந்தம் ஶாம்ப4வம் ஸ்தா2ந முச்யதே।
நாடீ3நாமாஶ்ரய: பிண்டோ3 நாட்3ய: ப்ராணஸ்ய சாஶ்ரய:।
ஜீவஸ்ய நிலய: ப்ராணோ ஜீவோ ஹம்ஸஸ்ய சாஶ்ரய:।
ஹம்ஸ: ஶக்தேரதி4ஷ்டா2நம் சராசரமித3ம் ஜக3த்।
நிர்விகல்ப: ப்ரஸந்நாத்மா ப்ராணாயாமம் ஸமப்4யஸேத்॥ ॥ 5.2 ॥

அநேக ஜந்மஸம்ஸ்கார-கு3ருதே3வ-ப்ரஸாத3த:।
யோகா3ப்4யாஸாத் ததோ வேதோ4 ஜாயதே தஸ்ய யோகி3ந:।
இடா3பிங்க3லயோர்மத்4யே ஸுஷும்நா-நாடி3 மண்ட3லே।
முத்3ராப3ந்த4 விஶேஷேண வாயுமூர்த்4வம் ச காரயேத்।
ஹ்ரஸ்வோ த3ஹதி பாபாநி தீ3ர்கோ4 மோக்ஷப்ரதா3யக:।
தைலதா4ராமிவாச்சி2ந்நம் தீ3ர்க்க4 க4ண்டா நிநாத3வத்।
அவாச்யம் ப்ரணவஸ்யாக்3ரம் யஸ்தம் வேத3 ஸ வேத3வித்।
ஹ்ரஸ்வம் பி3ந்து3கதம் தை3ர்க்4யம் ப்3ரஹ்மரந்த்4ரகதம் ப்லுதம்।
த்3வாத3ஶாந்தக3தம் மந்த்ரம் ப்ரஸாத3ம் மந்த்ரஸித்3த4யே।
ஸர்வவிக்4ந ஹரஶ்சாயம் ப்ரணவ: ஸர்வதோ3ஷஹா। ॥ 5.3 ॥
ஹரி: ஓம் தத்ஸத்।

இதி வராஹோபநிஷத் ஸமாப்தா।



**25வது பட்ட அழகியசிங்கர் விஷயமான த ன்**

ஸ்ரீவாஸ வீரரகுவர்ய பராங்குஶாதி
ராமாநுஜார்யமுநிபிர் குருஸார்வ பௌமை:
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பர்பூர்ணபோதம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதிஶேகர மாஶ்ரயாம: ||

ஶாபாநுக்ரஹ ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் 25வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர்
ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேஶிகன்
பஞ்சப்ருந்தாவனம், ந்ருஸிம்ஹபுரம், கும்பகோணம்

அடியவர் ஶாபங்களை அநுக்ரஹமாக மாற்றி
அருள்புரியும் ஸ்ரீகருடாம்ஶ ஆசார்யன்

## ஐந்தாவது அத்தியாயம்

லய-மந்த்ரஹடா2 யோகா3 யோகோ3 ஹ்யஷ்டாங்க3 ஸம்யுத:।
தி3வாராத்ர-மவிச்சி2ந்நம் யாமே யாமே யதா3 யதா3।
அநேநாப்4யாஸ யோகே3ந வாயுரப்4யஸிதோ ப4வேத்।
வாயாவப்4யஸிதே வஹ்நி: ப்ரத்யஹம் வர்த்த4தே தநௌ।
வஹ்நௌ விவர்த4மாநே து ஸுக2மந்நாதி3 ஜீர்யதே।
அந்நஸ்ய பரிபாகேந ரஸ வ்ருத்3தி4: ப்ரஜாயதே।
ரஸே வ்ருத்3தி4ம் க3தே நித்யம் வர்த்த4ந்தே தா4தவஸ்ததா2।
தா4தூநாம் வர்த்த4நேநைவ ப்ரபோ3தோ4 வர்த்த4தே தநௌ।
வஹ்யந்தே ஸர்வ பாபாநி ஜந்மகோட்யார்ஜிதாநி ச॥ ॥ 5.1 ॥

கு3த3மேட்4ராந்தராலஸ்த2ம் மூலாதா4ரம் த்ரிகோணகம்।
ஶிவஸ்ய பி3ந்து3ரூபஸ்ய ஸ்தா2நம் தத்3தி4 ப்ரகாஶகம்।
யத்ர குண்ட3லிநீ நாம பராஶக்தி: ப்ரதிஷ்டி2தா।
யஸ்மாது3த்பத்3யதே வாயுர்-யஸ்மாத்3வஹ்நி: ப்ரவர்த்த4தே॥

யஸ்மாது3த்பத்3யதே பிந்து3ர்யஸ்மாந்நாத3: ப்ரவர்த்த4தே।
யஸ்மாது3த்பத்3யதே ஹம்ஸோ யஸ்மாதுத்பத்3யதே மந:।
மூலாதா4ராதி3 ஷட் சக்ரம் ஶக்திஸ்தா2ந-முதீ3ரிதம்।
கண்டா2து3பரி மூர்தா4ந்தம் ஶாம்ப4வம் ஸ்தா2ந முச்யதே।
நாடீ3நாமாஶ்ரய: பிண்டோ3 நாட்3ய: ப்ராணஸ்ய சாஶ்ரய:।
ஜீவஸ்ய நிலய: ப்ராணோ ஜீவோ ஹம்ஸஸ்ய சாஶ்ரய:।
ஹம்ஸ: ஶக்தேரதி4ஷ்டா2நம் சராசரமித3ம் ஜக3த்।
நிர்விகல்ப: ப்ரஸந்நாத்மா ப்ராணாயாமம் ஸமப்4யஸேத்॥ ॥ 5.2 ॥

அநேக ஜந்மஸம்ஸ்கார-கு3ருதே3வ-ப்ரஸாத3த:।
யோகா3ப்4யாஸாத் ததோ வேதோ4 ஜாயதே தஸ்ய யோகி3ந:।
இடா3பிங்க3லயோர்மத்4யே ஸுஷும்நா-நாடி3 மண்ட3லே।
முத்3ராப3ந்த4 விஶேஷேண வாயுமூர்த்4வம் ச காரயேத்।
ஹ்ரஸ்வோ த3ஹதி பாபாநி தீ3ர்கோ4 மோக்ஷப்ரதா3யக:।
தைலதா4ராமிவாச்சி2ந்நம் தீ3ர்க்க4 க4ண்டா நிநாத3வத்।
அவாச்யம் ப்ரணவஸ்யாக்3ரம் யஸ்தம் வேத3 ஸ வேத3வித்।
ஹ்ரஸ்வம் பிந்து3கதம் தை3ர்க்4யம் ப்3ரஹ்மரந்த்4ரகதம் ப்லுதம்।
த்3வாத3ஶாந்தக3தம் மந்த்ரம் ப்ரஸாத3ம் மந்த்ரஸித்3த4யே।
ஸர்வவிக்4ந ஹரஶ்சாயம் ப்ரணவ: ஸர்வதோ3ஷஹா। ॥ 5.3 ॥
ஹரி: ஓம் தத்ஸத்।

இதி வராஹோபநிஷத் ஸமாப்தா।

## ஸ்ரீ வராஹ சரம ஶ்லோகம்

ஸ்ரீ வராஹப் பெருமாள் தன் அவதார மஹிமை, பக்தர்கள் தன்னை எவ்வாறு வழிபடவேண்டும் என்பது பற்றியும், பிற பல முக்கியமான விஷயங்களையும் பூமிதேவியோடு ஸம்பாஷனை செய்யும் வகையில் அமையப் பெற்ற ஸ்ரீ வராஹ புராணம் 24,000 ஶ்லோகங்களைக் கொண்டது. இதில் வராஹமூர்த்தி தன் தேவிக்கு உபதேஶித்துள்ள வராஹ சரம ஶ்லோகம் மிகவும் உயர்வானதாக கருதப்படுகிறது.

காஞ்சி ஸ்ரீ தேவப்பெருமாள் ஸ்ரீ ஸ்வாமி பகவத் ராமாநுஜருக்கு அருளிய ஆறு வார்த்தைகளில் ''அந்திம ஸ்ம்ருதி வர்ஜனம்'' என்று ஶரணாகதனுக்குத் தன்பால் கடைசி நிமிஷச் சிந்தனை தேவையில்லை என்று கூறுகிறான். ஶரணாகதியின் எளிமையைப் பறைசாற்ற இதைவிட வேறு எந்த ஸாக்ஷி வேண்டும் ? பெருமான் தரும் இவ்வுறுதியை உட்கொண்டதே வராஹ சரம ஶ்லோகம் என்று புகழப்படுகிறது.

“ஸ்தி²தே மனஸிஸு ஸ்வஸ்தே² ஶரீரே ஸதியோ நர:
தா⁴து ஸாம்யே ஸ்தி²தே ஸ்மர்த்தா விஸ்வ ரூபம்ச மாம் அஜம்
ததஸ்தம் ம்ரியமாணந்தம் காஷ்ட பாஷாண ஸந்நிப⁴ம்
அஹம் ஸ்மராமி மத்ப⁴க்தம் நயாமி பரமாங்க³திம்”

(வராஹ சரம ஶ்லோகம்)

எந்த ஒரு ஆத்மா தன் உடலும், மனமும் நிலையாக இருக்கும்போது, உலகத்தையே ஶரீரமாகக் கொண்ட என்னிடம் ஶரணம் புகுகிறானோ அவன் மரணப் படுக்கையில் கல், கட்டையைப் போலே நினைவு தப்பிக் கிடக்கும்போது அவனை மறவாமல் நான் கைப்பற்றிப் பரமமான கதிக்கு அழைத்துச் செல்கிறேன் என்று வாஞ்சையுடன் வாக்களிக்கிறான் ஸ்ரீ வராஹன்.

பூமிப்பிராட்டியின் அவதாரமான ஸ்ரீ ஆண்டாளும் இவ்வார்த்தைகளை தம் நாச்சியார் திருமொழி (11-8) இல், “பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே” என்று போற்றிப்பரவுகிறாள்.

“நம: காரண ஸூகராயதே”, “ஜிதந்தே” என்றெல்லாம் தேவர்களால் கொண்டாடப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ வராஹன். “விஷ்ணு பத்நீம் மஹீம் தேவீம்” என்று வேதங்களால் கோஷிக்கப்பட்ட பூமிப் பிராட்டி. எம்பெருமானின் இவ்வவதாரத்தில்தான் எவ்வளவு ஶரண்யத்வமும், ஆஶ்ரயித்வமும்

இருக்கிறது! பிராட்டியிடம்தான் எவ்வளவு க்ஷமையும், ஸஹிப்புத்தன்மையும் இருக்கிறது!

தன் அந்திமகாலத்தைக் கருத்தில் கொண்ட பெரியாழ்வார் "ஒப்பிலேனாகிலும் நின்னையடைந்தேன்", "அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே", "எண்ணலாம்போதே உன் நாமமெல்லாம் எண்ணினேன்" என்றெல்லாம் கதறுகிறார்.

ஸ்வாமி தேஶிகன், கோபால விம்ஶதியில்,

"அத$^{4}$ராஹித சாரு வம்ஶ நாளா :
மகுடாலம்பி$^{3}$ மயூர பிஞ்ச மாலா :
ஹரிநீல ஶிலா விப$^{4}$ங்க$^{3}$ நீலா :
ப்ரதிபா$^{4}$ ஸந்து மம அந்திம ப்ரயாணே",

என்று தன் அந்திம ப்ரயாணத்தின்போது எவ்வாறு எம்பெருமான் ஸேவை ஸாதித்தருள வேண்டுமென ப்ரார்த்திக்கிறார்.

திருமங்கையாழ்வார், திருவெள்ளக்குளத்து அண்ணன் பெருமாளை,

"வராஹமதாகி இம்மண்ணை இடந்தாய்*
நாராயணனே! நல்ல வேதியர் நாங்கூர்*
சீரார் பொழில் சூழ் திருவெள்ளக் குளத்துள்*
ஆராவமுதே! அடியேற்கு அருளாயே*",

என்று மங்களா ஶாஸனம் செய்கிறார்.

(பெரிய திருமொழி 4-7-8)

நம் புத்தியும், உடலும் ஸ்வாதீனத்தில் இருக்கும்போதே "குறிக்கொள் எனை நீயே" என்று ஸ்ரீ வராஹனை நாம் ஶரணாகதி பண்ண, அவன் ஆலயத்துக்கு தூய மனத்துடன் சென்று வழிபட, தூமலர் தூவித் தொழ, வாயினால் பாடி பஜிக்க, அவனைப் பற்றிய ஸ்தோத்ரங்களைச் சொல்லித் துதிக்க, எப்போதும் அவன் நாமங்களையே ஸ்மரித்திருக்க, நம் போன்ற ஜீவர்களின் அந்திமகாலத்தில், ஸ்ரீ பூமி பிராட்டி தாயுடன் கூடிய நம் தந்தை ஸ்ரீ வராஹன், தானே ஸ்ரீ வராஹனாய், ஸ்ரீ அரங்கனாய், ஸ்ரீ அண்ணன் பெருமாளாய், ஸ்ரீமன் நாராயணனாய், ஸ்ரீ ஆராவமுதனாய், ஸ்ரீ கண்ணனாய் தன் திவ்யமங்கள ஸ்வரூபத்தைக் காட்டி, தம் பரஞ்ஜோதியான பரமபதத்திலன்றோ கொண்டுபோய்சேர்ப்பான்.

## ஆழ்வார் பாஸுரங்களில் ஸ்ரீ வராஹர்

ஸ்ரீ வராஹனே ஸ்வயம் யக்ஞம் என்பதை முதல் திருவந்தாதியில் பொய்கை ஆழ்வார் இவ்வாறு அநுபவிக்கிறார்.

செவிவாய் கண் மூக்கு உடலென்று ஐம்புலனும்* செந்தீ
புவிகால் நீர் விண் பூதமைந்தும்* – அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமும் என்பரே*
ஏனமாய் நின்றாற்கு இயல்வு.

காது, வாய், கண், மூக்கு, உடல் எனும் ஐம்புலன்களும், தீ, பூமி, காற்று, நீர், வானம் ஆகிய ஐம்பூதங்களும், குறைவற்ற பக்தி வடிவான ஞானமும், வேள்வியும், ஆத்ம குணங்களும், வராஹப் பெருமானை அடைய வழிகள் என்று கூறுகின்றார்களே! அப்பெருமானே அவனை அடைய வழியாக இருக்கும்போது (வராஹ சரம ஶ்லோகம்) இவ்விதமும் எண்ணுவது தகுமோ ?

(முதல் திருவந்தாதி – 12)

கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ
நீலவரை இரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்ப
கோலவராஹ மொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்
நீலக்கடல் கடைந்தாய் ! உன்னைப் பெற்று இனிப்போக்குவனோ !

(திருவாய்மொழி 10-10-7)

அழகிய தாமரை மலராளுக்கு உகப்பான நீ, அவள் பொருளான என்னிடமும் உகப்பு உடையவன் அன்றோ! நீலமலை ஒன்று இரண்டு பிறைபோன்ற கொம்புகளால் கவ்வியது போல, நீ வராஹனாய் பூமிப் பிராட்டியை உன் கொம்புகளால் இடந்தெடுத்தாய். (திருமாமகள் பொருட்டு) நீலக்கடலைக் கடைந்தாய்! புகலாக உன்னைப் பெற்றபின், உன்னை நழுவ விடுவேனோ?

வானத்தெழுந்த மழைமுகில் போல்* எங்கும்
கானத்து மேய்ந்த களித்து விளையாடி*
ஏனத்துருவாய் இடந்த இம்மண்ணினை*
தானத்தே வைத்தானால் இன்று முற்றும்
தரணியிடந்தானாய் இன்று முற்றும்.

– பெரியாழ்வார் திருமொழி (2-10-9)

வானில் எழுந்த மேகம் போல் வராஹ வடிவம் கொண்டு, காடெங்கும் திரிந்து விளையாடி பூமிப்பிராட்டியை ப்ரளய ஸமுத்திரத்திலிருந்தும் விடுவித்து, இடந்தெடுத்து, இருந்த இடத்திலே வைத்துக் காத்தான், ஆயினும் அவ்வாறு காப்பாற்றி நம்மை விரஹ தாபத்தில் அமிழ விட்டான்.

கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்ப்புக்கு
இடந்திடும்* தன்னுள் கரக்கும் உமிழும்*
தடம்பெருந் தோளாரத் தழுவும் பாரென்னும்
மடந்தையை* மால் செய்கின்ற மால் ஆர் காண்பரே ?

(திருவாய்மொழி 2-8-7)

எம்பெருமான் பாற்கடலில் கிடந்து, சித்திரகூட மலையில் அமர்ந்து, இராவணனை வென்று நின்றான். திருவிக்ரமனாக உலகை அளந்தான். வராஹமாய்த் தோன்றி ஹிரண்யாக்ஷன் ப்ரளயத்தில் மறைத்து வைத்த பூமி பிராட்டியை இடந்தெடுத்து தன்னுடைய வயிற்றில் வைத்துக்காத்து, பின் ஶ்ருஷ்டியின் தொடக்கத்தில் உமிழ்ந்து தன் பெருந்தோள்களால் பூமிப்பிராட்டியை ஆரத் தழுவும் அவன் அன்பு சேஷ்டிதங்களை யாரே அறிவர் ?

ஈனமாய எட்டும் நீக்கி, ஏதம் இன்றி மீது போய்*
வானம் ஆள வல்லையேல், வணங்கி வாழ்த்து என் நெஞ்சமே*
ஞானம் ஆகி, ஞாயிறு ஆகி, ஞாலம் முற்றும் ஓர் எயிற்று*
ஏனமாய் இடந்த மூர்த்தி எந்தை பாதம் எண்ணியே.

(திருமழிசை பிரான் திருச்சந்த விருத்தம் – 114)

என் நெஞ்சமே ! அறிவின்மை, வினைப்பயன், ப்ரக்ருதி வாசனை, சுவை, உடல் தொடர்பு ஆகியவாயும், மூவகைத் தாபங்களாயும் உள்ள தாழ்வுகளைப் போக்கி, விண் வழியே பரமபதம் ஏற வராஹமாய் பூமியை எடுத்துக் காத்தவனின் திருவடிகளை எண்ணுவாய். ஆத்ம ஞானமாகவும், ஸூர்யனாகவும் அவனே உள்ளான்.

## ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின் ப்ரவசனாம்ருத ப்ரவாஹங்களிலிருந்து க்ரஹித்த சில அமுத துளிகள்

முன்னொரு காலம் ப்ரம்மதேவன் பகவானை ப்ரார்த்தித்து உலகை ஸ்ருஷ்டிபண்ண நியமனம் செய்யவேண்ட, ஸ்ருஷ்டி பண்ண வேண்டிய தத்வங்களை பகவானே செய்து ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியை செய்யும்படி ப்ரம்மனுக்கு பகவான் உபதேஶிக்க, ப்ரம்மாவும், மரீசியாதி ப்ரும்மரிஷிகள், ஸனகாதிகள், மனு வரை ஸ்ருஷ்டித்து, பிறகு ப்ரம்மா மனுவிடம் ப்ரபஞ்சமாகிய பூமியில் ஜீவன்களை ஸ்ருஷ்டி பண்ணச் சொல்ல, பூமி ப்ரளய ஜலத்தில் மூழ்கியிருப்பதை பார்த்துத் திகைத்த மனு ப்ரம்மாவிடம் ப்ரார்த்திக்க, ப்ரம்மா பகவானைச் சரணடைய, பகவான் ப்ரம்மாவின் ஶ்வாஸத்திலிருந்து வெளிவந்தார். அங்குஷ்ட ப்ரமாண ரூபத்திலிருந்து பெரிய வராஹனாக கம்பீரமாக வளர்ந்து, "கர்", "கர்" என குரல்கொடுக்க, பயந்துபோன ப்ரம்மதேவாதிகள் பிறகு இது ஸாக்ஷாத் ஸ்ரீமன் நாராயணனே என அறிந்து, ஶிரஸில் கரம்குவித்து, "ஜிதம் தே" என்று துதிக்கலாயினர். நான்கு வேதங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும் வராஹமூர்த்தியாலேயே உலகம் தரிக்கப்படுகிறது என கூறப்படுகின்றது. அதனாலேயே ஆதிவராஹன் என்றும், யக்ஞ வராஹன் என்றும், ஶ்வேத வராஹன் என்றும், பூவராஹன் என்றும் இவ்வவதாரம் புகழப்படுகிறது. பகவான் யக்ஞ ஸ்வரூபனாயும், ஞான ஸ்வரூபனாயும் இருக்கிறான். பூமி பிராட்டிக்கு ப்ரும்ம வித்யையை உபதேஶித்ததனாலேயே "வித்யாகுரவே நம:" என்றும் "ஞானபிரான்" என்றும் புகழப்படுகிறான். இவ்வவதாரத்தை ஸ்வாமி நம்மாழ்வார் இவ்வாறு அநுபவிக்கிறார்.

கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய அன்பேயோ!
நீலவரை இரண்டுபிறை கவ்வி நிமிர்ந்த தொப்ப
கோல வராஹ மொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!
நீலக்கடல் கடைந்தாய்! உன்னைப் பெற்று இனிப்போக்குவனோ?
திருவாய்மொழி (10-10-7)

"நீலவரை இரண்டு பிறை கவ்வி" என இரு வார்த்தைகளில் ஸ்ரீ வராஹனை ப்ரத்யக்ஷமாகக் காட்டிவிட்டார். நீலமான ஒரு மலைபோல் எம்பெருமான் இருக்க அதில் இரு பிறைச் சந்திரன் கிளம்பினது போல வெண் கோரைப்பற்கள் விளங்க, குனிந்து பிராட்டியை எங்கெனத்தேடி, தரித்து, தூக்கி நிற்பதை ஆழ்வார்

"நிமிர்ந்த தொப்ப" என்கிறார். கோல வராஹம் என்றால் அழகான வராஹம் என்பது பொருள். "ஒன்றாய்" என்றருள்வதன் மூலம் ஈடு இணையில்லா அவதாரம் என்று கூறுகிறார். ஏன் இவ்வவதாரத்தை மட்டும் ஈடு இணையற்ற அவதாரம் என்று கூறுகிறாரெனில் இந்த அவதாரம் செய்த நன்மை வேறு எந்த அவதாரமும் செய்யவில்லை யென்பதாலேயே.

ஸ்ரீ வராஹன், ப்ரளய ஜலத்தில் மூழ்கி அலர்ந்த பூமி பிராட்டியை இடந்து தன் வக்ர தம்ஷ்ட்ரத்தில் ஏந்தினார். அலர்ந்துவிட்ட அவளுக்கும் ஒரு விஶ்ராந்தி எம்பெருமானின் தந்தத்தில். ஆயினும் பிராட்டி இந்த விஶ்ராந்தியைப் பொறுக்க மாட்டாதவளாய், ப்ரளய ஜலத்தைவிட கொடூரமான ஸம்ஸார ஸாகரத்தில் அமிழ்ந்து கரையேறாத நம் போன்ற ஜீவர்களிடம் அப்பேர்ப்பட்ட கருணை கொண்டு, எம்பெருமானிடம், "நீங்களோ உத்தாரணம் செய்வதற்கென்றே தரித்த அவதாரம்". "கரையேற்றுகின்ற அவதாரம்", இந்த ஜீவர்களைக் கரையேற வழி சொல்லுங்கள் என இரு கை குவித்துக் கேட்க, எம்பெருமானும் ப்ரஹ்ம வித்யையை பிராட்டிக்கு உபதேஶிக்க, இதுவே வராஹ புராணமாயிற்று.

ஸ்ரீ ராமாவதாரத்தில்,

"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே,
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்யே தத்வ்ரதம் மம", என்றும்,

ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில்,

"ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" என்றும்,

எம்பெருமான், ஜீவர்களின் ஶக்தியைக் காட்டி, ஶரணாகதியை உபாயமாக விதிக்கின்றான். தன்னை ஶரணாகதி பண்ணு, ப்ரபத்தி செய் என்று விதித்த இவ்விரு அவதாரங்களிலும் எம்பெருமான் இன்ன பலனைத் தருவேன் என்று சொல்லவில்லையே!

ஜீவர்கள் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்று கடைபிடிக்கவோ, தம் ஶக்தியைக் காட்டி ப்ரபத்தி, ஶரணாகதி செய்கின்ற வழியோ தெரியாதுகிடக்க, தானே முன்வந்து, காப்பாற்றுகிறேன் என்று சொன்ன ஒரே அவதாரம் ஸ்ரீ வராஹ அவதாரம்தான். வராஹவதாரத்திலன்றோ "அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம்" – உன்னை பரம பதத்திற்கே கொண்டு போய்ச் சேர்த்துவிடுவேன் என்ற அருமையான, உத்தமமான

வார்த்தைகளைக்கூறிப் பூரண ஆறுதல் கொடுக்கிறான். திடநிஷ்டையாக இரு, காப்பாற்றுகிறேன் என்று சொன்னால் ஜீவனுக்கு அந்திமகாலத்தில் திடநிஷ்டை போய்விடுமே. ஜீவன் மூச்சுதிணறி கட்டைபோல் கிடக்கும் கடைசி காலத்தில் எம்பெருமானே கதி என்று இருக்கும் ஶக்தியும் உண்டோ? இதற்கு ஸ்ரீ வராஹன் பூமி பிராட்டிக்கு சொல்லும் ஆறுதல், "அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம்" என்பதே. அதாவது நானே என் பக்தனை அந்திமகாலத்தில் நினைவில் நிறுத்தி பரஞ்ஜோதிக்கு கொண்டேபோய்விடுவேன் என்று ஆறுதலாய் கூறுவதன்றோ இவ்வவதாரம். இவ்வாறு பேசுவது ஒரு ரிஷியும், மற்றொரு ரிஷியும் அல்லவே. நம்முடைய தந்தையார் சொல்கிறார், தாயார் கரம்குவித்து கேட்கிறார் என்றல்லவோ அமைந்தது இவ்வராஹபுராணம்.

ஸாக்ஷாத் க்ஷமையே (பொறுமையே) வடிவானவள் பூமி பிராட்டி. அந்த பொறுமையாலேயே எத்தகைய துராசாரம் உடையவனாயினும், அத்துராசாரங்களையும், துஷ்டத்தனங்களையும் அவள் பொறுக்க, இதைக்கண்டு எம்பெருமான் கண்சிவக்க, பிராட்டியோ "ஸர்வம் ஸஹே", என்று ஸர்வத்தையும் மன்னித்து பெருமாளிடம் நமக்கு கருணை பண்ணும்படி ப்ரார்த்திக்க, உடனே பெருமாளும் "ஸ்திதே மனஸி", எவன் இந்த மனஸு ஸ்வாதீனமாய் இருக்கும்பொழுதும், ஞானேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள் ஸ்வாதீனமாய் இருக்கும்பொழுதும் ஓடிவந்து என்னை தரிஶனம் பண்ணுவனோ, எவன் காதார என் குணங்களை கேட்பானோ, எவன் என் திருநாமங்களை உச்சரிப்பானோ, எவன் என்னையே கதி என்று ஶரணாகதி பண்ணினானோ, அவன் அந்திமகாலத்தில் கட்டையாய், கல்லாய் கிடக்க, தொண்டை கர் கர் என இழுக்க, வயிறு உப்பி ப்ராணன் போகிற நிலையில், பந்துக்கள் இவனை கைவிட, தருணம், நானே ஓடிவந்து "அபயம்" என்றும் "அஹம் ஸ்மராமி மத்பக்தம்" என்றும் அவனை அள்ளி எடுத்து என் ஸ்வதாமமான பரஞ்ஜோதிக்கு கொண்டே போய்விடுவேன் என்று உறுதியளித்த பிறகுதான், பூமி பிராட்டி, சரி என்னை இறக்கி விடுங்கள் என்று, இறங்க இணங்கினாள். அதுவரை மடியில் அமர்ந்து ஹடம் பண்ணி நம்பொருட்டு எம்பெருமானின் உறுதி வார்த்தைகளைக் கேட்டுவாங்கித் தந்தது பூமி பிராட்டியாகிய நம் தாய். அபயம் கொடுத்தது ஸ்ரீ வராஹவதாரம் தரித்த நம் தந்தை. ராம, க்ருஷ்ணாதி அவதாரத்தை காட்டிலும் ஞானத்தை கொடுத்த

அவதாரமாகையாலேயே ஆழ்வார் "ஞானபிரானையல்லால் நான்கண்ட நல்லதுவே" என தம் திருவிருத்தத்தை தலைக்கட்டுகிறார். பல திவ்யதேஶ எம்பெருமான்களையும், அவதாரங்களையும் ஸ்வாமி நம்மாழ்வார் மங்களாஶாஸனம் செய்திருந்த போதிலும், திருவாய்மொழியையும், திருவிருத்தத்தையும் முடிக்கும்போது மட்டும் வராஹவதாரத்துடன் பூர்த்தி செய்கிறார். இதிலிருந்து ஆழ்வார் ஹ்ருதயம் நமக்கு புரியும்.

என் அந்திம காலத்தில் உன்னை நான் நினைக்கமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லுகின்றார் பெரியாழ்வார். (ஶரபங்கர், ஶபரி, பீஷ்மர் போன்ற யோகநிஷ்டர்களுக்கு) "ஒப்பிலேன் ஆகிலும் நின்னையடைந்தேன்", "அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்". என்றெல்லாம் கதறுகிறார்.

பெரியாழ்வார் திருமொழி (4-10)

"தமஸோ மாம் ஜ்யோதிர் கமய!

ம்ருத்யோர் மாம் அம்ருதம் கமய" - இருண்ட இடத்திலிருந்து என்னை ஒளிமயமான இடத்திற்கு அழைத்துக்கொண்டு போ என்று ஶரணாகதி பண்ணுகிறது வேதம்.

ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை எம்பெருமானை ஜீவனுக்கு நினைவூட்டுபன் எனக்கொண்டாடுகிறார். மனிதனுக்கு மனிதன் செய்யும் உபகாரம் நன்றி கெட்டுப்போய்விடும். தெய்வத்திற்கு நாம் செய்யும் ஶரணாகதி உரிய நேரத்தில் கைகொடுக்கும்.

நம் கடைசி கல்யாண நாளன்று யார் வந்து என்ன புண்ணியம்? "அஹம் ஸ்மராமி" என்று ஒருவன் வருவானே மனமும், உடலும் ஸ்வாதீனத்தில் இருக்கும்போது இவன் எப்படியெல்லாம் என்னை ஶரணாகதி பண்ணினான், பக்தி பண்ணினான் என்று நினைவில் கொண்டு, தன் ஶங்கு, சக்ர, கதா, பத்மங்களைக் காட்டி, "நயாமி பரமாங்கதிம்" என்று ஒளிமயமான, தன் பரமபதத்திற்கு அழைத்துக்கொண்டே போவான்.

இதுவல்லவோ ஒப்பற்ற அவதாரம்! இந்த மாதா பிதாக்களை ஶரணாகதி செய்வதொன்றே நாம் உய்வதற்கான வழி அன்றோ!

## ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகளின் ஸ்ரீ ப்ருந்தாவன மஹாத்மியத்திலிருந்து...

### ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளியது

மனுவின் வசனத்தைக் கேட்ட ப்ரும்மதேவன் ப்ராணாயாமம் செய்து ஹ்ருதயத்திலுள்ள பகவானைத் தியானம் செய்தார். தியானம் முடிந்ததும் அவருடைய மூச்சுக் காற்றின் வழியாக பகவான் வராஹரூபத்தில் வெளிவந்தான். அவருடைய கர்ஜனையைக் கேட்ட ப்ரும்மதேவனும், மரீசி முதலியவர்களும் ஆச்சர்யமான இந்த உருவம் என்னவென்று ஸந்தேஹத்தை அடைந்தனர். அப்பொழுது ஸர்வேஶ்வரனன விஷ்ணு, துதிக்கையால் யானை தாமரைப் பூவைத் தூக்குவது பேல் இந்த பூமியைத் தூக்கினார். அதைக் கண்டு நான்முகன் கைகுவித்து வணங்கித் துதித்தார்.

### ब्रह्मोवाच

नमो यज्ञवराहाय विष्णवे परमात्मने
उद्धर्तुमवतीर्णाय कभूमिं स्वदंष्ट्रया ॥ १ ॥

वेदवेद्योसि गोविन्दसर्वलोकनमस्कृत
यज्ञस्वरूपं त्वां वेत्तुं ामरः शक्नुयात्कथम् ॥ २ ॥

सर्वकर्मसमाराध्य र्वकर्मफलप्रद
सर्वेश्वर नमस्तुभ्यंाक्षी त्वं सर्वकर्मणाम् ॥ ३ ॥

नमस्ते यज्ञरूपायशोद्धारक ते नमः
प्रजापतीनां सर्वेप्रथमोऽसि प्रजापतिः ॥ ४ ॥

उद्धृता पृथिवी तेसर्वप्राणिसमुद्भवा
त्वामेव पतिमिन्त्ती वृणुते त्वां श्रियःपते ॥ ५ ॥

# பூமி தேவி ஸ்துதி

*ஜகன்னாத! நன்னடத்தையுடைய கன்னிகையான என்னை நீரே தொட்டுத் தூக்கியதால் நீரே எனக்கு ப்ராணநாதன். புருஷோத்தம! உம்மால் ரக்ஷிக்கப்பட்ட நான் இனி வேறு புருஷனை விரும்ப மாட்டேன். பதியை அடைய விரும்பும் எந்த கன்னிகைதான் தானே தேடி வந்த புருஷோத்தமனான உன்னை விடுவாள்? இவ்வாறு ஆலோசித்துத்தான் லக்ஷ்மிதேவியும் உம்மையே ப்ராண நாதனாய் அடைந்தாள். எங்கள் இருவருக்கும் பொறாமை உண்டாகாது. ஏனெனில் லக்ஷ்மிதேவி சுயநலமற்றவள்.*

## பூமிருவாச

யஸ்மாத் பதிவ்ரதா கந்யா த்வயைவாஸ்மி ஸமுத்$^3$த்$^4$ருதா।
தஸ்மாதே$^3$வ ஜக$^3$ந்நாத$^2$ ப$^4$வ மே ப்ராணவல்லப$^4$ ॥ 1 ॥

இத:பரம் ந ஸ்ப்ருஶாமி த்வாம் விநா புருஷாந்தரம்।
த்வயைவ புருஷஶ்ரேஷ்ட யத$^3$ஸ்மி பரிரக்ஷிதா ॥ 2 ॥

கா ஸ்த்ரீ புருஷஸாரஜ்ஞா பதிஸம்யோக$^3$காங்க்ஷிணீ।
ஸந்த்யஜேத்புருஷஶ்ரேஷ்ட$^2$ம் த்வாமேவம் ஸ்வயமாக$^3$தம் ॥ 3 ॥

ஏவம் விசார்ய ஸா தே$^3$வீ ஸாக்ஷால்லக்ஷ்மீஶ்ச பா$^4$ர்க$^3$வீ।
தபஸா ப$^3$ஹுநா லேபே$^4$ த்வாமேவ ப்ராணவல்லப$^4$ம் ॥ 4 ॥

ஸாபத்நதோ$^3$ஷோ ந ப$^4$வேதா$^3$வயோ: புருஷோத்தம।
வக்ஷ:ஸ்த$^2$லஸ்தி$^2$தா லக்ஷ்மீர்யதோ நி:ஸ்வார்த்த$^2$சேஷ்டிதா ॥ 5 ॥

## ஸ்ரீ க்ருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அருளியது

இதற்கிடையில் பூதேவி கைகுவித்து வணங்கி தழுதழுத்த குரலுடன் துதி செய்தாள்.

## भूमिरुवाच

यस्मात् पतिव्रता कन्या त्वयैवास्मि समुद्धृता
तस्मादेव जगन्नाथ भव मे प्राणवल्लभ ॥ १ ॥

इतःपरं न स्पृशामि त्वां विना पुरुषान्तरम्।
त्वयैव पुरुषश्रेष्ठ यदस्मि परिरक्षिता ॥ २ ॥

का स्त्री पुरुषसारज्ञा पतिसंयोगकाङ्क्षिणी
सन्त्यजेत्पुरुषश्रेष्ठं त्वामेवं स्वयमागतम् ॥ ३ ॥

एवं विचार्य सा देवी साक्षाल्लक्ष्मीश्च भार्गवी
तपसा बहुना लेभे त्वामेव प्राणवल्लभम् ॥ ४ ॥

सापत्नदोषो न भवेदावयोः पुरुषोत्तम
वक्षःस्थलस्थिता लक्ष्मीर्यतो निःस्वार्थचेष्टिता ॥ ५ ॥

# பூமி தேவி ஸ்துதி

ஜகன்னாத! நன்னடத்தையுடைய கன்னிகையான என்னை நீரே தொட்டுத் தூக்கியதால் நீரே எனக்கு ப்ராணநாதன். புருஷோத்தம! உம்மால் ரக்ஷிக்கப்பட்ட நான் இனி வேறு புருஷனை விரும்ப மாட்டேன். பதியை அடைய விரும்பும் எந்த கன்னிகைதான் தானே தேடி வந்த புருஷோத்தமனான உன்னை விடுவாள்? இவ்வாறு ஆலோசித்துத்தான் லக்ஷ்மிதேவியும் உம்மையே ப்ராண நாதனாய் அடைந்தாள். எங்கள் இருவருக்கும் பொறாமை உண்டாகாது. ஏனெனில் லக்ஷ்மிதேவி சுயநலமற்றவள்.

## பூமிருவாச

யஸ்மாத் பதிவ்ரதா கந்யா த்வயைவாஸ்மி ஸமுத்3த்4ருதா।
தஸ்மாதே3வ ஜக3ந்நாத2 ப4வ மே ப்ராணவல்லப4 ॥1॥

இத:பரம் ந ஸ்ப்ருஶாமி த்வாம் விநா புருஷாந்தரம்।
த்வயைவ புருஷஶ்ரேஷ்ட யத3ஸ்மி பரிரக்ஷிதா ॥2॥

கா ஸ்த்ரீ புருஷஸாரஜ்ஞா பதிஸம்யோக3காங்க்ஷிணீ।
ஸந்த்யஜேத்புருஷஶ்ரேஷ்ட2ம் த்வாமேவம் ஸ்வயமாக3தம் ॥3॥

ஏவம் விசார்ய ஸா தே3வீ ஸாக்ஷால்லக்ஷ்மீஶ்ச பா4ர்க3வீ।
தபஸா ப3ஹுநா லேபே4 த்வாமேவ ப்ராணவல்லப4ம் ॥4॥

ஸாபத்நதோ3ஷோ ந ப4வேதா3வயோ: புருஷோத்தம।
வக்ஷ:ஸ்த2லஸ்தி2தா லக்ஷ்மீர்யதோ நி:ஸ்வார்த்த2சேஷ்டிதா ॥5॥

## இந்தியாவில் உள்ள வராஹர் ஆலயங்கள்

இந்தியாவில் ஸ்ரீ வராஹப் பெருமானுக்கு என்று ப்ரத்யேகமாக சில ஆலயங்களே இருந்தாலும் இவற்றில் முக்யமான ஆதிவராஹ க்ஷேத்ரமாகத் திகழ்வது திருமலையாகும். திருவேங்கடமுடையானுக்கு இடம் அளித்ததாகவுள்ள ஐதிகத்தன்படி இன்றைக்கும் ஸ்ரீ வராஹனுக்கே முதல் பூஜைகள் நடைபெறுகின்றன. பக்தர்களும் ஸ்வாமி புஷ்கரணியின் கரையில் கோவில் கொண்டுள்ள இந்த ஸ்ரீ ஆதிவராஹரை முதலில் தரிஸித்த பின்னரே ஸ்ரீ வேங்கடவனைத் தரிஸிக்க வேண்டும் என்ற மரபும் உள்ளது. சென்னையை அடுத்திருக்கும் மஹாபலிபுரத்திலுள்ள ஸ்ரீ ஆதிவராஹர் குஹை, மற்றும் அதன் அருகில் உள்ள திவ்ய தேஸமான திருவிடவெந்தை, கடலூர் மாவட்டத்தில் உள்ள ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரமான ஸ்ரீமுஷ்ணம், போன்றவை தமிழகத்தில் உள்ள பிரபலமான வராஹ ஸ்தலங்களாகும். மேலும் திவ்யதேஸமான திருக்குடந்தை, தஞ்சை மும்மணிக்கோவில், நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூர் என்ற ஆழ்வார்திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர் போன்ற க்ஷேத்ரங்களும் வராஹ அவதாரத்துடன் தொடர்பு கொண்ட திருத்தலங்களாகும்.

மேலும் ஆந்திர மாநிலத்தில் உள்ள நாகார்ஜுனகொண்டாவிலும், கரீம் நகரிலும் ஸ்ரீ வராஹர் ஆலயங்கள் உள்ளன. கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் உள்ள கலஹள்ளி கிராமத்தில் அமைந்த ப்ரம்மாண்டமான ஸ்ரீப்ரளய வராஹர், பூதேவியை இடது மடியில் இருத்தி அருள்பாலிக்கிறார். இந்த வராஹர் ஆலயத்தை முன்னிறுத்தி ஊரின் பெயரே வராஹநாதா கலஹள்ளி என்று அமைந்துள்ளது. ராஜஸ்தான் கஜுரஹோ ஸ்ரீ வராஹ ஸ்வாமி ஆலயம், ஒடிஷா மாநிலம் ஆலூ ஸ்ரீ வராஹநாதா ஆலயம் போன்றவையும் இந்தியாவில் ஸ்ரீ வராஹருக்குரிய ப்ரபலமான ஆலயங்கள் ஆகும். மேலும் யெலாந்தூர் மற்றும் மைசூர் அரண்மனைக்குள் அமைந்துள்ள ஸ்ரீ ஸ்வேதவராஹர் ஆலயங்கள் பிரபலமானவை.

கேரளத்தில் வரப்புழா, சேரை, பன்னியூர், திருவனந்தபுரம் போன்ற இடங்களிலும், மேற்கு வங்கத்தில் முராத்பூரிலும், வராஹர் ஆலயங்கள் உள்ளன. திருவனந்தபுரம் ஸ்ரீவராஹம் என்ற இடத்தில் உள்ள ஒப்பற்ற ஸ்ரீஆதிவராஹர் ஆலயத்தையும் கல்லிடைக்குறிச்சி ஸ்ரீவராஹர் ஆலயத்தையும் ஒரே மன்னன் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஸ்ரீ வராஹர் ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் வராஹர் திருஉருவங்கள் பிற மாநிலங்களில் உள்ள திருவுருவங்களைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. எரான், பதோ, கோ, க்வாலியர், மஜ்ஹோலி போன்ற இடங்களில் ஸ்ரீ வராஹமூர்த்தி, வராஹத்தின் உருவத்திலேயே நான்கு கால்களுடன் பன்றி ரூபத்தில் மிகப் ப்ரம்மாண்டமாகக் காட்சி தருகிறார். 9 அடி நீளமும் 6 அடி உயரமும் கொண்ட கஜுராஹோ ஆலய வராஹர் சிலை சிறிய நுணுக்கமாக 672 படைப்புச் சிற்பங்களைக் கொண்டுள்ளன. இம்மாநிலத்தில் பதோ ஆலயத்தில் உள்ள ஸ்ரீ வராஹன் உடலில் 765 மிகச் சிறிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள திறன் ப்ரமிக்க வைக்கிறது. முப்பத்து முக்கோடி தேவர்களும் ஸ்ரீ வராஹப் பெருமானுக்குள் அடக்கம் என்பதைக் குறிக்கும் வகையில் இச்சிலைகள் அமைந்துள்ளதாகக் கூறுவர். இந்த வராஹத்தின் காலடியில் ஸ்ரீ ஆதிஶேஷன் ஸர்ப்ப வடிவத்தில் அமைந்து உள்ளார். இதே போன்ற 29 வராஹர் விக்ரஹங்கள் மத்திய பிரதேஶத்தில் அமைந்துள்ளன.

# தாமிரபரணி நதி ப்ரபாவம்

## தாமிரபரணி நதி தமிழகம் வருகை

மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகத் திகழ்கின்ற அகத்திக்கூடம் என்றும், பொதியில் என்றும் போற்றப்படும் பொதிகை மலையில் உற்பத்தியாகும் வற்றாத ஜீவநதியான தாமிரபரணி ஆற்றுக்கு புனித நதிகளான கங்கைக்கும் காவிரிக்கும் அடுத்து ஒரு தனி ஏற்றமும் பெருமையும் உண்டு. திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்கள் வழியாக 125 கிமீ தொலைவு ஓடி சுமார் 4000 சதுர கிமீ பரப்பளவு கொண்ட நிலங்களை வளப்படுத்தும் இந்நதி தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் என்ற இடத்தில் கடலோடு ஸங்கமிக்கிறது.

தென்பாண்டி நாட்டு மக்களின் கலாச்சாரத்தோடும், அன்றாட வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்த தாமிரபரணி நதி தமிழ் இலக்கியங்களில் பொருனை நதி என்றும் தண்பொருனை நதி என்றும் அழைக்கப்படுகின்றது.

## தாமிரபரணி நதிதீர புனித தீர்த்தக் கட்டங்கள்

கல்லிடைக்குறிச்சியில் உள்ள தாமிரபரணி ஆற்றின் ஸ்நானகட்டம் ஸ்ரீ வராஹ தீர்த்தம் என்றே போற்றப்படுகிறது.

காவிரி நதி போன்ற தக்ஷிணக் கங்கையாம் தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளிலும் 200க்கும் மேற்பட்ட புராணப் பெருமையும், வரலாற்றுப் பின்னணியும் கொண்ட ஆலயங்களும், தீர்த்தக் கட்டங்களும் அமைந்துள்ளன. தாமிரபரணி ஆறு மலையிலிருந்து சமவெளிக்குப் பாயும் முதல் இடமாக பாபநாசம் திகழ்கிறது.

தாமிரபரணி ஆறு உற்பத்தியாகின்ற [illegible]ங்க குஹையிலிருந்து துவங்கி ஸாகர ஸங்கமம் வரை சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட புனித தீர்த்தக் கட்டங்கள் தனிச் சிறப்புப் பெருமைகளோடு திகழ்கின்றன. இந்த தீர்த்தக் கட்டங்களில் எந்தெந்த மாதத்தில் எந்தெந்த கட்டங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும், அவ்வாறு ஸ்நானம் செய்யும்போது எந்த மந்திரங்களைச் சொல்லவேண்டும்,

என்னென்ன பலன்கள்கிட்டும் என்பது பற்றியெல்லாம் விரிவாகத் தாம்ரபர்ணீ மஹாத்மியம் தெரிவிக்கிறது. இவற்றில் கல்லிடைகுறிச்சியில், ஆற்றின் கரையில் காஶ்யப தீர்த்தம், வராஹ தீர்த்தம், கண்வ தீர்த்தம், போன்றவை முக்கியமானவை. சேரன்மஹாதேவி ஸ்ரீ பக்தவத்ஸலப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ள பகுதி வ்யதீபாத தீர்த்தம் எனப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதம் வ்யதீபாத யோகத்தில் இங்குள்ள ஸ்நான கட்டத்தில் புனித நீராடி பித்ருக் கடன்கள் செய்யும் மரபு உள்ளது.

**தாமிரபரணி நதிதீர ஆலயங்கள்**

ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த 108 திருப்பதிகளுள் மிக விஶேஷமான நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியும், ஸ்ரீவைகுண்டமும் தாமிரபரணி நதிதீர திருத்தலங்களே. இவ்விரண்டும் நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒன்பது வைணவ திவ்ய தேஶங்களான நவதிருப்பதிகளைச் சேர்ந்தவை.

**ஶிலாஶாலிபுரம் என்ற கல்லிடைக்குறிச்சி க்ஷேத்ரம்**

பத்தமடை சேரன்மஹாதேவி வழியாக திருநெல்வேலியிலிருந்து தென்காசி செல்லும் சாலையில் திருநெல்வேலியிலிருந்து 35 கி.மீ தொலைவில் தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது அம்பாஸமுத்திரம். தென்கரையில் நேர் எதிரே உள்ளது பழம்பெருமை வாய்ந்த கல்லிடைக்குறிச்சி திருத்தலம். பல வேதவிற்பன்னர்களும், நித்ய அக்னிஹோத்ரிகளும் ஸங்கீத வல்லுநர்களும் வாழ்ந்த கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் அக்காலத்தில் எண்ணற்ற யாக யக்ஞங்கள் நடைபெற்றுள்ளன. தாமிரபரணி ஆற்றின் கரையில் அக்காலத்தில் நடைபெற்ற ஒரு ஸோமயாகத்தின் போது கருட ஶயனம் என்கிற யாகவேதிகை அமைப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஆண்டு முழுவதும் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளையும், அவற்றையொட்டிய அன்னதானங்களையும் பார்த்து அகமகிழ்ந்து ஶ்ருங்கேரி ஸ்ரீ ஶாரதா பீடத்தின் 33வது பீடாதிபதியாகக் கொலுவீற்றிருந்த ஸ்ரீ ஸச்சிதானந்த ஶிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதி ஸ்வாமிகள் (1858 - 1912) இந்த ஊருக்கு கல்யாணபுரி என்றே பெயரிட்டு சிறப்பித்து மகிழ்ந்தார்கள்.

கல்லிடைக்குறிச்சி கிராமத்தை வடமொழியில் ஶிலாஶாலிபுரம் என்று அழைத்தனர். (ஶிலா–மலை மற்றம் ஶாலி–நெல்). ஐவகை நிலங்களில் மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும் இந்தக் குறிஞ்சி நில ஊர்களை குறிச்சி என்றும் தமிழ் இலக்கணங்கள் குறிப்பிடுகின்றன. இதன் அடிப்படையில் மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடரின் அடிவாரத்தில் (கல்இடை) இந்த ஊர் உள்ளதால் இதற்கு கல்லிடைக்குறிச்சி (மலையை ஒட்டிய கிராமம்) என்ற பெயர் ஏற்பட்டது.

கல்லிடைக்குறிச்சி 18 அக்ரஹாரங்களைக் கொண்ட பெருமை கொண்டது. இத்தெருக்களில் குடியிருக்கும் அந்தணர்கள் கரந்தையர்பாளையம் ப்ராஹ்மண ஸமூஹம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி இந்த தெருக்களை எட்டு அக்ரஹாரங்களாக அமைத்து எண்ணற்ற ஆலயப் பணிகள், தர்மகார்யங்களைச் செய்து வருகின்றனர். திருநெல்வேலி, தென்காசி நெடுஞ்சாலையின் இரு புறங்களிலுமாக இந்த அக்ரஹாரத் தெருக்கள் அமைந்துள்ளன. ஊரின் மேற்குப் பகுதியில் கிழக்கே ஸந்நிதி தெரு, மூன்று புறங்களிலும் மாடவீதிகள், அவற்றின் வெளியே தேரோடும் ரதவீதிகளோடு நடுநாயகமாக ஸ்ரீபூமிநீளா ஸமேத ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. சுமார் 500 ஆண்டுகளுக்குமேல் பழமையான இந்த ஆலயத்திற்கு 1944 ஆம் ஆண்டிலும் பின்னர் 43 ஆண்டுகள் கழித்து 1987 ஆம் ஆண்டிலும் குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. இந்த ஆதிவராஹர் ஆலயம் பற்றி மத்ஸ்ய புராணத்தில் உள்ள தாம்ரபர்ணீ மஹாத்மியம் 13வது அத்யாயத்தில் 36 ஸ்லோகங்களில் ஸ்ரீ மார்க்கண்டேய மஹரிஷி பரக்கப் பேசியுள்ளார்.

# கல்லிடைக்குறிச்சி குபேர ப்ரதிஷ்டையான ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயம்

## மூர்த்தி, க்ஷேத்ரம், தீர்த்தம்

கல்லிடைக்குறிச்சியில் தாமிரபரணி நதியின் தென்கரையில் மஹாவிஷ்ணு ஸ்ரீ ஆதிவராஹப்பெருமாளாக எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். மன்னன் ஒருவன் செய்த அஸ்வமேதயாகத்தின் முடிவில் குபேரனின் அறிவுரைப்படி யக்ஞ பாத்திரங்களையே அவயவங்களாகக் கொண்டு ப்ரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீஆதிவராஹப் பெருமாளின் ஆலயம் குபேர ப்ரதிஷ்டையாகவே போற்றப்படுகிறது. மன்னனின் யாகத்திற்கு த்ரிமூர்த்திகள், இந்திராதி தேவர்கள் அனைவரும் எழுந்தருளியிருந்து அநுக்ரஹித்த புனிதத்தலம். அகஸ்தியரின் கமண்டலத்திலிருந்து கங்கையே தக்ஷிண கங்கையாகப் பிரவஹித்து வந்த தாமிரபரணி தீர்த்தம் - இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளும் ஒருங்கே அமையப்பெற்ற அற்புதமான க்ஷேத்ரமாக இந்த ஆலயம் திகழ்கிறது.

இப்பகுதியினை ஆண்டு வந்த விஷ்ணுதர்மன் என்ற மன்னன் இங்கு ஒரு முறை அஸ்வமேத யாகம் செய்த போது ப்ரம்மா தமது குமாரர்களுடனும், ஶிவபெருமான் குபேரனுடனும் தேவேந்திரன் தேவகணங்களோடும், அகஸ்திய முனிவர் தன் சீடர்களுடனும், இந்த யாகத்தில் எழுந்தருளினார். யாகம் முடிந்த பின்னர், யாகத்தில் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களையே தன் அவயவங்களாக் கொண்டு திகழ்கின்ற ஸ்ரீ ஆதிவராஹப் பெருமானின் ஆலயம் இங்கு குபேரப் ப்ரதிஷ்டையாகவே கருதிப் போற்றப்படுகிறது.

இந்த ஆலயத்திற்கு வந்து ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார்கள் ஸமேத ஸ்ரீ ஆதிவராஹனைத் தரிஶிக்கின்ற பக்தர்கள், மணப்பேறு, மகப்பேறு, தொழில் அபிவிருத்தி, கல்வி வளம், நிறைந்த செல்வம், உடல்நலம் போன்ற அனைத்து நலங்களையும் குறைவறப் பெற்று மகிழ்கின்றனர். ஸ்ரீ ஆதிவராஹப் பெருமான் அருளுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இப்பகுதி மக்கள். பக்தர்களுக்கு அனைத்துச் செல்வங்களையும் வாரி வழங்குகின்ற வள்ளலாகவும் இந்த ஸ்ரீ ஆதிவராஹர் அருள்பாலிக்கிறார்.

**ஸ்ரீ ஆதிவராஹர் ஆலய அமைப்பும், மூர்த்திகளும்**

கிழக்கு நோக்கி அமைந்துள்ள ஸ்ரீ ஆதிவராஹப் பெருமான் ஆலயத்தின் நுழைவாயிலை அழகிய சுதைச் சிற்பங்களுடன் கூடிய மூன்று நிலை ராஜ கோபுரம் அழகு செய்கிறது. கோபுரத்திற்கு முன்பாக நடுநாயகமாக கருட வாஹனப் பெருமாளும் இருபுறங்களில் அஞ்சலி ஹஸ்தத்துடன் ஸ்ரீகருடனும், ஸ்ரீஅநுமனும் உள்ளனர். இந்த மண்டபத்தின் மேல் விதானத்தில் கருடன், அவரை வழிபடும் முனிவர்கள், ஆதிவராஹப் பெருமாள், சுற்றிலும் ஶயன, நின்ற திருக்கோலத்தில் உள்ள பெருமாள் சிற்பங்கள் பார்த்துப் பரவசப்பட வைப்பவை. சுமார் 35 அடி உயரமான ப்ரம்மாண்டமான மரக் கதவுகளில் மிக நுணுக்கமாக இராமாயண மற்றும் மஹாபாரதச் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த கதவுகளிலுள்ள இரும்புத்தூண்கள் ஒவ்வொன்றும் கலைத்திறனோடு அமைந்துள்ளன.

அடுத்துள்ள கருட மண்டபத்தில் பலிபீடம், செப்புக் கவசமிட்ட கொடிமரம், ஸ்ரீகருடன் ஸந்நிதிகள் உள்ளன. இந்த மண்டபத்தின் வலப்புறம் வஸந்த உத்ஸவம் நடைபெறும் வஸந்த மண்டபமும், அதன் அருகே கருங்கல் பீடத்துடன் கூடிய இன்னொரு மண்டபமும் உள்ளன. இந்த மண்டபத்தின் தென்புறச் சுவற்றில் அற்புதமாக ஸ்ரீஸுதர்ஶனர் காக்ஷி அளிக்கிறார். துவஜஸ்தம்பத்திற்கும் ஸ்ரீகருடன் ஸந்நிதிக்கும் இடையே பெரிய கல் தூண்கள் தாங்கும் உத்திரத்தில் ப்ரம்மாண்டமான மணி தொங்கவிடப்பட்டுள்ளது. இம்மண்டபத் தூண் ஒன்றில் ஸ்ரீஅநுமன் பக்தர்களால் சிறப்பாக ஆராதிக்கப்படுகிறார்.

இதை அடுத்த முக மண்டபம், முகமண்டபத்தை அடுத்துள்ள ஊஞ்சல் மண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறங்களிலும் பித்தளை கவசமிட்ட மிக அழகிய பெரிய கருடன், அநுமன் வாஹனங்கள் உள்ளன. அஷ்ட நாகங்களோடு காட்சி தருகின்ற இங்குள்ள கருட வாஹனம் இம்மாவட்ட வைணவ ஆலயங்களிலேயே மிகப் பெரியதும் அழகியதுமான கருட வாஹனம் என்ற பெருமை பெறுகிறது.

அடுத்துள்ள அர்த்த மண்டபத்தின் நடுவே உள்ள பித்தளைக் கவசமிட்ட மேல் விதானத்துடன் கூடிய மேடையில் பார்க்கப்பார்க்க பரவசமூட்டும் உத்ஸவர் ஸ்ரீ லக்ஷ்மீபதி, ஸ்ரீதேவி பூதேவி ஸமேதராக

எழுந்தருளி அருள் பாலிக்கிறார். இந்த மண்டபத்திற்குப் பின்பாக கருவறை அமைந்துள்ளது. ஸ்ரீவிஷ்வக்ஸேனர், ஸ்ரீநர்த்தன கிருஷ்ணன், ஸ்ரீ திருமங்கை மன்னன், ஸ்ரீகுலஶேகரப் பெருமாள் ஆகியோரின் உத்ஸவ மூர்த்திகள் இங்கே அழகுற பொலிந்து அருள்பாலிக்கின்றனர்.

ஸ்ரீ யக்ஞவராஹர், ஸ்ரீ ப்ரளய வராஹர், ஸ்ரீ லக்ஷ்மி வராஹர், ஸ்ரீ ஆதிவராஹர் என்றெல்லாம் ஸ்ரீ வராஹமூர்த்தி பக்தர்களால் போற்றப்படுகின்றார். ஸ்ரீ ஆதிப்பிரான், ஞானப்பிரான் என்றெல்லாம் பக்தர்களால் போற்றப்படுகின்ற ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள் இங்கு கருவறையில் பூதேவியை தன் இடது மடியில் அமர்த்தி, பின்னிரு கரங்களில் சங்கு சக்கரம் திகழ, முன் வலக்கரத்தால், தேவியின் பாதங்களைப் பரிவோடு பற்றியவாறும், முன் இடக்கரத்தினால் தேவியின் இடையே அணைத்தபடியும் கிழக்கு நோக்கி அருட்காக்ஷி தருகிறார். ஸ்ரீ பூமாதேவி ஸ்ரீ ஆதிவராஹரை நோக்கிச் சற்று தலையைச் சாய்த்து, தன் இரு கரங்களைச் சேர்த்துக் குவித்து அஞ்சலி ஹஸ்தத்துடன் திகழ்கிறாள். அஸுரனால் தூக்கிச் செல்லப்பட்ட தன்னை ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீ ஆதிவராஹராக அவதரித்து மீட்டுக்கொண்டு வந்ததற்காக பக்தியோடு கரங்களைப் கூப்பி அவரை வணங்குவதாக இந்த ஸ்ரீ ஆதிவராஹர் விக்ரஹம் திகழ்கிறது. அப்போது தேவி ஸ்ரீ வராஹப் பெருமானைப் போற்றி வழிபட்டுக் கூறிய ஶ்லோகங்கள் ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீபூதேவி ஸ்துதி என்று பலராலும் பாராயணம் செய்யப்படுகிறது. தேவியின் பாதங்கள் கீழே உள்ள தாமரை மலரின் மீது பதிந்துள்ளன.

ஆலய உட்சுற்றில் கருவறைக்குப் பின்புறம், தென்மேற்கு மூலையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸந்நிதியும், வடமேற்கு மூலையில் ஸ்ரீபூதேவி ஸந்நிதியும் அமைந்துள்ளன. இந்த இரு ஸந்நிதிகளுக்கும் இடையே ஸ்ரீலக்ஷ்மீநாராயணர் ஸந்நிதி, அடுத்து தஶாவதார ஸந்நிதிகள் உள்ளன. இங்கு மத்ஸ்ய, கூர்ம மூர்த்திகள், மீன், ஆமை உருவத்திலேயே அமைந்திருக்கிறார்கள். ஸந்நிதிக்கு அருகில் வாசலும், தொடர்ந்து விஷ்வக்ஸேனர், ஆழ்வார் ஆசார்யர்கள் ஸந்நிதிகளும் உள்ளன.

**மூலை கருடனும் ஆடி ஸ்வாதியும்**

ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள் ஆலயத்தின் இன்னொரு தனிச்சிறப்பு இங்குள்ள மூலைக்கருடன் ஸந்நிதியாகும். உட்பிராகார மதிலின் வடகிழக்கு மூலையில் தன் இரு மருங்கிலும் இரண்டு சிங்கங்களோடு கருடன் அமர்ந்து அஞ்சலித்த நிலையில் காட்சி தருகிறார். கருங்கல்லில் வடிக்கப்பட்ட இந்த மூன்று ஶிலா மூர்த்திகளும் அற்புதமானவை. ஸ்ரீகருடனின் ஜயந்தியான ஆடி மாத ஸ்வாதித் திருநாளன்று மூலை ஸ்ரீகருடனுக்குச் சிறப்பு திருமஞ்சனங்கள் செய்வித்து, மலர் மாலைகளால் ஆன பூப்பாவாடைகள் அணிவிக்கப்பட்டு கற்பூர ஹாரத்தி செய்விக்கப்படுகிறது. இங்கு பக்தர்கள் ஆடி ஸ்வாதிநாளன்றும் பிற நாட்களிலும் மூலை கருடனுக்கு நேர்த்திக் கடனாக கீழே உள்ள தொட்டியில் சிதறு தேங்காய்களை உடைக்கின்றனர். ஆடி ஸ்வாதி நாளன்று மட்டும் நூற்றுக்கணக்கான சிதறு தேங்காய்கள் உடைக்கப்படுகின்றன.

**அஷ்டாங்க விமான அமைப்பு**

தமிழகக் கோவில்களில் பெரும்பாலும் மூலமூர்த்தி எழுந்தருளியிருக்கும் கற்றளியான கருவறையும் அதன் மீது சுதை உருவங்களோடு எழுப்பப்படும் கட்டுமானமும் விமானம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. (அதனால் பேச்சு வழக்கில் பொதுவாக கருவறையின் மீது அமையும் கட்டுமானத்தையே விமானம் என்கிறோம்.) விமானத்திற்கு அதிஷ்டானம், சுவர். ப்ரஸ்தரம், க்ரீவம், சிகரம் மற்றும் ஸ்தூபி என்ற ஆறு அங்கங்கள் உண்டு.

பொதுவாக கட்டுமானத்தின் மேடை போன்ற அடித்தளம் அதிஷ்டானம் என்றும், சுற்றுச்சுவர் கால் அல்லது பாதம் என்றும், மேற்கூரை ப்ரஸ்தரம் என்றும், மேல் கட்டுமானம் க்ரீவம் என்றும், இதற்கு மேற்பகுதி ஶிகரம் என்றும் ஶிகரத்தின் மீது அமைக்கப்படும் கலசம் ஸ்தூபி என்றும் கூறப்படுகின்றன. இந்த ஆறு அங்கங்களோடு (ஷடங்க) ப்ரஸ்தரத்தின் மீது தனியே இரண்டு ஸந்நிதிகளைக் கொண்ட இரண்டு தளங்கள் அமைக்கப்பட்டால் அது அஷ்டாங்க விமானம் எனப்படுகிறது. இத்தகைய அஷ்டாங்க விமானங்கள் திருக்கோஷ்டியூர், உத்தரமேரூர், மதுரை கூடலழகர்,

அம்பாஸமுத்திரம், மன்னார்கோவில் போன்ற பெரிய ஆலயங்களில் காணப்படுகின்றன. இந்த வகை விமானங்களில் பெருமாளின் நின்ற, இருந்த மற்றும் கிடந்த கோலங்களைத் தரிஶிக்கலாம்.

### ஆலய த்விதள விமானம்

இவ்வாலயத்தில் காணப்படுவது திருமாலின் இருந்த, மற்றும் கிடந்த கோலங்களைக் கொண்ட இரண்டு தளங்களுடன் கூடிய த்விதள அமைப்பாகும். இங்கு கருவரையில் ஸ்ரீ ஆதிவராஹப் பெருமானின் அமர்ந்த திருக்கோலத்தைத் தரிஶிக்கிறோம். மேல் தளத்தில் அர்த்த மண்டபத்தோடு கூடிய கருவரையில் பெருமாள் ஶயனத்திருக்கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, ப்ருகு மார்க்கண்டேய ரிஷிகளோடு ஸேவை ஸாதிக்கிறார். ஸந்நிதியின் நுழைவாயிலில் துவாரபாலகர்களான ஜய, விஜயர்கள் உள்ளனர்.

சுவர்களில் ஸ்ரீ பரமேஸ்வரன், ஸ்ரீப்ரம்மா, அஷ்டதிக்பாலகர்கள், ஸப்தரிஷிகள், ஸனகாதி முனிவர்கள், பஞ்சாயுதங்கள், ஸூர்யன், சந்திரன், தாமரை, கந்தர்வர், ஸமுத்ரராஜன், மதுகைடப அசுரர்கள், ஆகியோரின் வண்ணச் சித்திரங்கள் மூலிகை வண்ணங்களைப் பயன்படுத்தி மிகவும் எழிலாகவும், நுணுக்கமாவும் கேரள ஓவியர்களால் கேரள சுவர் ஓவியப் பாணியில் வரையப்பட்டுள்ளன. அர்த்த மண்டபச் சுவர்களில் ஆழ்வார், ஆசார்யர்கள், தஶாவதாரம், உடையவர், ஸ்ரீ விகனஸாசார்யர் திருவுருவங்களும் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன.

வைகுண்ட ஏகாதஶி நாளன்று மட்டும் ஶயனப் பெருமாள் ஸந்நிதி நாள் முழுதும் பக்தர்களுக்கு தரிஶனத்திற்காகத் திறந்து வைக்கப்படுகிறது. பிற நாட்களில் காலை ஹாரத்தியின் போது இந்த ஸந்நிதியில் பெருமாளை அனந்த ஶயனத்தில் ஸேவிக்கலாம். இந்த ஸந்நிதியை அடைவதற்கு கருட மண்டபத்தின் வடக்கு மூலையில் படிக்கட்டுகள் உள்ளன. இது போன்ற இரண்டு தளங்கள் கொண்ட த்விதள விமானத்தைப் பாளையங்கோட்டை ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி ஆலயத்திலும் காணலாம்.

### ஆலயத்தில் காணப்படும் சிற்பங்கள்

ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயத்தின் நுழைவாயில் மண்டபத்தின் மேல் விதானத்தில் கருடவாஹனம் போன்ற அமைப்பில் உள்ள

கருடனும் அவருக்கு இரு மருங்கிலும் முனிவர்களும் அமைந்துள்ளனர். இதையடுத்து பத்து கட்டங்கள் கொண்ட ஒரு சிற்பத் தொகுப்பில் நடுநாயகமாக, கருவறையில் காட்சி தருவது போன்றே ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாள் கொலு வீற்றிருக்க, சுற்றிலும் அநந்தஶயன, பரமபத, நரநாராயண மூர்த்திகள் உள்ளனர். இது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பர, வியூஹ, விபவ மற்றும் அர்ச்சை அவதாரங்களின் தொகுப்பாக அமைந்திருக்கிறது. ஆலயத்தின் பல தூண்களிலும் ஸ்ரீ ஆதிவராஹர், ஸ்ரீ பூவராஹன், ஸ்ரீ கிருஷ்ண லீலை சிற்பங்கள் மற்றும் மன்னர்களின் சிற்பங்கள் உள்ளன.

**உத்ஸவங்கள்**

வைகானஸ ஆகமப்படிபூஜைகளும், திருவிழாக்களும் நடைபெறுகின்றன. ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயத்தில் வருஷம் முழுவதும் பல்வேறு திருவிழாக்கள் ஶ்ரத்தையோடும், கோலகலமாகவும் நடத்தப்படுகின்றன. சித்திரை மாதப் பௌர்ணமி நாளன்று தாமிரபரணி ஆற்றில் தீர்த்தவாரியோடு முடிவு பெறும் 11 நாள் சித்திரை ப்ரம்மோத்ஸவத்தின்போது நடைபெறும் தேர்த்திருவிழா குறிப்பிடத்தக்கது. ப்ரம்மோத்ஸவத்தின் ஐந்தாவது நாள் மூன்று பெரிய திருப்பதிக் குடைகளின் கீழ் கருட வாகனத்தில் உத்ஸவர் ஸ்ரீ லக்ஷ்மீபதி வீதி உலா வருவதைக் காண கண்கோடி வேண்டும்.

பதினெட்டு அக்ரஹாரங்களைக் கொண்ட கல்லிடைக்குறிச்சியின் அனைத்துக் கிராமங்கள் மற்றும் சமுதாயத்தினரின் பங்களிப்பையும், ஒற்றுமையையும் வலுப்படுத்தும் வகையில் ப்ரம்மோத்ஸவம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வைகாசி விஶாக நக்ஷத்திரத்தில் முடிவு பெறும் வைகாசி மாத வஸந்தோத்ஸவம் இன்னொரு முக்கிய விழாவாகும் கோடை வெயில் காரணமாக உத்ஸவர் கருவறை மண்டபத்திலிருந்து வெளிச் சுற்றில் உள்ள வஸந்த மண்டபத்திற்கு எழுந்தருளுகிறார் இந்நாட்களில் கவசம் அணிவிக்காமல் மெல்லிய வெள்ளை வஸ்திரம் அணிவித்து அரைத்த சந்தனம் பூசி, மாலையில் ஊஞ்சல் மண்டபத்தின் முன்பாக அழகுற அமைக்கப்பட்டு வனத்தைச் சுற்றி வருமாறு இந்த விழா அமைக்கப்பட்டுள்ளது. ஆடி மாத பூர நாளன்று துவங்கும் பத்து நாள் ஊஞ்சல் உத்ஸவம், ஆவணி மாதம் ஶுக்லபக்ஷ ஏகாதஶி அன்று

துவங்கும் ஏழுநாள் பவித்ரோத்ஸவம், புரட்டாசியில் சனிக்கிழமைகள் தோறும் கருடஸேவை, நவராத்திரி, சித்திரை மற்றும் ஐப்பசி விஷு கருடஸேவை, திருக்கார்த்திகைத் திருவிழா, மார்கழி மாத 20 நாள் திரு அத்யயன உத்ஸவம் மற்றும் வைகுண்ட ஏகாதஶி, தை மாதம் மகர ஸங்கராந்தி நாளன்று நடைபெறும் ஸங்காபிஷேகம் மற்றும் லக்ஷ தீபம் போன்றவை முக்யமான உத்ஸவங்களாகும். மாதந்தோறும் திருவோண நக்ஷத்திரத்தன்று வெளிப் ப்ரஹாரத்தில் உத்ஸவர் புறப்பாடு நடைபெறுகிறது.

**எம்பெருமான் கருடஸேவை**

ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயத்தில் நடைபெறும் கருடஸேவை குறிப்பிடத்தக்கது. உத்ஸவரின் கம்பீரமான தோற்றத்திற்கேற்ப இங்கு எல்லா வாஹனங்களுமே, குறிப்பாக கருட வாஹனம் மிகப் பெரிதாய் அமைந்துள்ளன. பித்தளை கவசமிடப்பட்டுள்ள கருட வாஹனம் அஷ்ட நாகங்களோடு, அழகு மிளிர வடிக்கப்பட்டுள்ள ஒரு அற்புதமான படைப்பாகும். அத்யயன உத்ஸவம் தவிர, ப்ரம்மோத்ஸவம், வஸந்த உத்ஸவம், ஊஞ்சல் உத்ஸவம், போன்ற அனைத்து உத்ஸவங்களின் ஐந்தாவது நாள் கருடஸேவை நடைபெறுகிறது. இது தவிர ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாளிடம் கோரிக்கைகளை வைத்து பெருமாள் அருளால் அது நிறைவேறியவுடன் பக்தர்கள் ஆர்ஜித கருடஸேவைகளையும் நடத்தி மகிழ்கின்றனர்.

புரட்டாசி சனிக்கிழமைகளில் நடைபெறும் கருட ஸேவைகளில் உத்ஸவர் ஸ்ரீ லக்ஷ்மீபதி சிறப்பான மலர் அலங்காரத்துடன் கருட வாஹனத்தல் எழுந்தருளி வீதியுலா வருகிறார். மாட வீதிகளில் உலா வந்த பின்னர் கிழக்கு ரத வீதியில் சிறப்பான மலர் அலங்காரத்தில் காட்சி தரும் சட்டத் தேர் எனப்படும் வண்டிச் சப்பரத்தில் எம்பெருமான் கருட வாஹனத்தில் எழுந்தருளப் பண்ணப்பட்டு ரத வீதிகளில் வலம் வருகிறார். புரட்டாசி சனிக்கிழமைகளில் மாவட்டத்தின் பல்வேறு ஊர்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர். புரட்டாசி சனிக்கிழமைகளில் நடைபெறும் கருட வாஹனம், மற்றும் பிற உத்ஸவங்களின் ஐந்தாவது நாட்கள், அயன, விஷு கருட

வாஹனங்கள் ஆகிய நாட்களின் முதல் வெள்ளிக்கிழமையன்று மூலவர்க்கு அரிசி மாவும் தயிரும் கலந்த மாக்காப்பு அணிவிக்கப்படுகிறது. அடுத்த நாள் காலையில் சிறப்புத் திருமஞ்சனம், மாலை மூலை கருடனுக்கு திருமஞ்சனம், மலர் அங்கி அணிவிக்கப்படும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன. புரட்டாசி சனிக்கிழமைகளில் இவ்வூர் விழாக்கோலம் பூணுகிறது.

ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் (1775 - 1835) திருவாரூரில் அவதரித்து, தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் முக்தியடைந்தவர். இவர் கல்லிடைக்குறிச்சிக்கு வந்து ஸ்ரீ ஆதிவராஹப் பெருமாளை வழிபட்டு, அவர் மீது இயற்றிய "ஸ்ரீலக்ஷ்மீ வராஹம் பஜே..." என்ற துவங்கும் ஆபோகி ராகக் கீர்த்தனை பிரபலமானது.

கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ ஶங்கரஶர்மா அவர்கள் ஸ்ரீ ஆதிவராஹர் மீது ஸ்ரீ வராஹபஞ்சரத்ன ஸ்தோத்ரம் மற்றும் ஸ்ரீ பூவராஹேஸ்வர ஸ்துதி போன்ற உருக்கமான ஸ்தோத்ரங்களை இயற்றியுள்ளார்.

ஸ்ரீ ஆதிவராஹரின் பரம பக்தரும், ஆசுகவியுமான கவிஞர் கல்லிடைவாஸன் என்ற ஸ்ரீநிவாஸன் அவர்கள் ஸ்ரீ ஆதிவராஹர் மீது அருமையான கீர்த்தனங்களை இயற்றி அன்றாடம் ஸந்நிதியில் பாடி பக்தர்களைப் பரவஶப்படுத்தி வருகிறார். கல்லிடைக்குறிச்சிக் கவிஞர் மீ.விசுவநாதன் அவர்களின் வெண்பா தொகுப்பு இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

ஸ்ரீ ஆதிவராஹர் ஆலயத்தின் நடை காலை 6.00 மணி முதல் 10.30 வரையிலும் மீண்டும் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் திறந்து வைக்கப்படுகிறது.

ஸ்ரீமான் ஸுரேஷ்பட்டரின் கைபேசி எண் : **94431 59402**

## ஸ்ரீ ஆதிவராஹா உந்திருவடி சரணம்

(மீ. விசுவநாதன்)

1. நான்குநல் மாடத்து நன்கமைந்த வீதிகளில்
தான் நின்றுன் சப்பரம்நான் தள்ளியதால் – தேன்போலத்
தித்திக்கும் வாழ்க்கையால் தெய்வாதி மூலமே
புத்திக்குள் நீபூத்தாய் பூ.

2. பன்றிகளை மேய்ப்பேனென் பள்ளிப் பருவத்தில்
நன்றிதனை நீயறிவாய் ! நான்காளைக் – கன்றாம்
பருவத்தில் வாழ்க்கைநெறி மாறாமல் கண்ணா
கருமமாய் மேய்த்தாய் கனிந்து.

3. சின்ன வயதில் சிரித்துன்றன் ஆலயத்துள்
என்னென்ன சேட்டைகள் யான்செய்தேன் ? – மன்னவனே
ஆதி வராஹா ! அடியேனை மன்னித்து
ஓதினாய் வேதப் பொருள்.

4. பூசிப்போர் உள்ளத்தைப் போலி எனச்சொல்லிக்
கூசாமல் பேசியவாய் கொண்டுன்னை–யாசிக்க
வைத்தாயே ! ஆதி வராஹா ! உனையென்றன்
கைதொழுது போற்றல் கடன்.

5. வேத மறியேன் விரிவாகப் பூசைசெய்
நாத ஒழுங்கெதுவும் நானறியேன்–சாதம் நீ
தின்றதிலே மிச்சத்தைக் தேவா மிர்தமெனத்
தின்றதனால் என்கவிகள் தேன்.

6. ஓர்காசு வந்தாலே உன்னை மறந்திடுவேன்
நீர்வண்ண மூலவா ! நெஞ்சுள்ளே நீ–பேர்வைத்
தென்னை மறக்காதே எப்போது முன்தோப்புத்
தென்னை மரமென்றே தேர்

7. அம்மாவின் வார்த்தை அலட்சியமாய்த தான்கொண்டு
சும்மாவே நாந்தினமும் சுற்றியதோ – பெம்மான்
பெரியவுன் வீதிகள்தான் என்றாலும் என்னுள்
தெரியாமல் உள்ளாய்ஏன் செப்பு.

8. உன்முன்னர் நின்றே ஒருநிமிடம் உன்னையே
என்னுள்நான் வைக்கின்ற ஏகாந்தத் தன்மையை
நீயேதா; என்னுள்ள நீச வினையாவும்
மாயவா மாற்றவே வா.

9. குருநாதர் உந்தோற்றம் கொள்கையுன் பாதம்
பெருமாள்நீ என்வீட்டில் பேணும் கருவூலம் !
நன்றெனக்கு வாழ்வளித்தாய் நானுனைப் பாடவே
இன்னும் கருப்பையுள் ஏற்று.

10. வந்தேன் வளர்ந்தேன் வயதான தென்றின்றித்
தந்தேன் உனக்கென்னைத் தட்டாமல் – இந்தப்
பிறவிச் சுழியில் பெருமாதி மூல
உறவினால் பெற்றேன் ஒளி.

11. ஊரோங்கி வாழட்டும் உன்பேரைச் சொல்லியே
ஏரோங்கி, என்றும்நீ என்றிங்கே – சீரோங்கி
வேரடிக்குக் கீழும் விளங்கட்டும் தொண்டர்சூழ்
பூரணகல் யாண புரி.

## ஸ்ரீ வராஹ பஞ்சரத்ன ஸ்தோத்ரம்

## அவதாரிகை

கல்லிடைகுறிச்சியில் பரம காருணிகராய் தன் தாள் பற்றும் எவர்க்கும் அருள்பாலித்து வரும் ஸ்ரீ பூவராஹப் பெருமானைப் பற்றிய இந்த ஐந்து ஶ்லோகங்கள் ஸ்ரீஶங்கர ஶர்மா என்பவரால் கவனம் செய்யப்பட்ட அபூர்வ ஸ்தோத்ரமாகும். ஸ்ரீ வராஹப் பெருமான், ஸ்ரீ மஹாலக்ஷ்மீ, ஸ்ரீ பூதேவி ஸமேதராக சதுர்புஜங்களில் சக்ராதி சின்னங்களை ஏந்தி ஸேவை ஸாதிகும் பாங்கினைக் கூறி அபூர்வ பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன. “கல்யாணாத்மக பூஷணன்” எனக் கூறுவதால் எம்பெருமான் கல்யாணகரமான, மோக்ஷம் ஈறான ஸகல மங்களங்களையும் அருள்பவர் என்பதாகிறது. ‘‘கல்யாணாத்மக நாராயணா அடியேனுக்கு ஸுகம் உண்டாவதாக” என்பதால் ஸகல, கலி ப்ரபாவத்தால் நேரக்கூடிய கஷ்டங்கள் விலகி நிம்மதியுடன் கூடிய ஸுகம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. நாராயணனே ஒரே கதி என திருப்பித் திருப்பி கூறப்படுகிறது. ஸ்ரீ வராஹ ஸஹஸ்ரநாமத்தால் அர்ச்சிக்கப்பட்டு வரங்களை வாரி வழங்குபவர் என்பதும் கூறப்படுகிறது. ஏனெனில் துளஸிமாலை, விதவித மாலைகள், ஸ்ரீவத்ஸ, கௌஸ்துபச் சின்னங்கள், அகன்ற அழகிய கருணாபூர்ண நேத்திரங்கள், மேலும் கற்பக விருக்ஷம் போன்ற பயன் தரும் திருவடிகளைக் கொண்ட பரமனை, ஸ்ரீய: பதியை பற்றுக் கோலாகச் சரணடைவதால் ஐஹிக மற்றும் மோக்ஷம் வரையிலான பயன்கள் நம்மை வந்தடையும் என்பதில் ஸந்தேஹமென்பது இல்லை.

– விஷ்ணுப்ரியா

# श्री (भू)वराहपञ्जरत्नस्तोत्रम्

(शिलाशालिपुरम)

भूदेवीश्रितवामभागविलसन्मूर्तिः श्रिया दक्षिणे
संश्लिष्टः खरनासि काग्रविधृतानन्ता भरः श्रीकरः।
श्रीचक्रादिलसच्चतुर्भुजधरश्चक्राङ्कितश्रीधर-
प्राभारद्धारगलो हिरण्मयवपुर्नारायणो रक्षतु १

कल्याणाख्यपुरीविराजित महादिव्यालये मूर्तिमान्
कल्याणं सततं द्विजादिमकुलं संप्रापयन् वर्द्धयन्।
कल्यावर्जितचेतसां तनुभृतामंहासि संशोषयन्
कल्याणात्मकभूषणो मम सुखं पुष्णातु नारायणः २

वाराहं धृतवान् स्वरूपमखिलं लोकं सुरारातिभिः
वारास्थानमिमां नयद्भिरचलां संहिसितं जीवयन्।
स्वाराज्यं गमयन् सुराधिपतिमप्याप्याययन् मानवान्
स्वारद्यौति सुवर्णमन्त्रविनुतो नारायणो मे गतिः ३

ब्रह्माणीप्रमुखामरेन्द्रवनिता तोष्टूय्यमानश्रिया
ब्रह्मस्तावकवेदशीर्षवचनैर्नोनूय्यमानः प्रभुः ।
विप्रैर्विश्वमुखैस्सहस्रनिमितैर्नाम्नां वरैरर्चितो
विप्रोत्तीर्णभवैः स्तुतो यमिवरैर्नारायणो मे गतिः ४

तौलस्या शुभमालया सुरभिलः सौरभ्यसंपूर्णया
देदीपद्युतिकौस्तुभप्रविलसद्वक्षा विशालेक्षणः।
श्रीवत्साङ्कितवत्सकः कुवलयश्रीगर्वसर्वङ्कष-
श्रीमूर्तिः श्रितकल्पपादपदाम्भोजो गतिः श्रीपतिः ॥ ५

इत्थं शङ्करशर्मणा विरचितं श्रीसूकरास्यप्रियं
स्तोत्रं यः प्रपठेद्रमापतिपदाम्भोजद्वयं संस्मरन्।
सोऽभीष्टं लभते भुवि प्रथितधीः सर्वं परं प्राप्य
सानन्ते सूरिवरैकगम्यमतुलं विष्णोः पदं प्राप्नुयात्॥ ६

इति श्री (भू)वराहपञ्जरत्नस्तोत्रं संपूर्णम्

# ஸ்ரீ (பூ)வராஹ பஞ்சரத்ந ஸ்தோத்ரம்

(கல்லிடைக்குறிச்சி)

பூதே3வி ஶ்ரித வாமபா4க3 விலஸந்மூர்த்தி: ஶ்ரியா த3க்ஷிணே
ஸம்ஶ்லிஷ்ட: க2ரநாஸி காக்3ர வித்4ருதாநந்தா ப4ர: ஸ்ரீகர:।
ஸ்ரீசக்ராதி3லஸச்சதுர்பு4ஜதர ஶ்சக்ராங்கித ஸ்ரீத4ர-
ப்ராபா4ரத்3தாரக3லோ ஹிரண்மயவபுர் நாராயணோ ரக்ஷது ॥ 1

கல்யாணாக்2ய புரீ விராஜித மஹாதி3வ்யாலயே மூர்த்திமாந்
கல்யாணம் ஸததம் த்3விஜாதி3மகுலம் ஸம்ப்ராபயந் வர்த்த4யந் ।
கல்யாவர்ஜித சேதஸாம் தநுப்4ருதாமஹாம்ஸி ஸம்ஶோஷயந்
கல்யாணாத்மக பூ4ஷணோ மம ஸுக2ம் புஷ்ணாது நாராயண: ॥ 2

வாராஹம் த்4ருதவாந் ஸ்வரூபமகி2லம் லோகம் ஸுராராதிபி4:
வாராஸ்தா2நமிமாம் நயத்3பி4ரசலாம் ஸம்ஹிஸிதம் ஜீவயந்।
ஸ்வாராஜ்யம் க3மயந் ஸுராதி4பதி மப்யாப்யாயயந் மாநவாந்
ஸ்வாரத்3யௌதி ஸுவர்ண மந்த்ரவிநுதோ நாராயணோ மே க3தி:॥ 3

ப்ரம்ஹாணி ப்ரமுகா2மரேந்த்3ர வநிதா தோஷ்டுய்ய மாந ஶ்ரியா
ப்3ரஹ்மஸ்தாவகவேத3ஶீர்ஷ வசநைர்நோ நூய்யமாந: ப்ரபு4:।
விப்ரைர்விஶ்வமுகை2ஸ்ஸஹஸ்ர நிமித்தைர்நாம்நாம் வரைரர்சிதோ
விப்ரோத்தீர்ண ப4வை: ஸ்துதோ யமிவரைர் நாராயணோ மே க3தி: ॥ 4

தௌலஸ்யா ஶுப4மாலயா ஸுரபி4ல: ஸௌரப்4ய ஸம்பூர்ணயா
தே3தீ3பத்3யுதி கௌஸ்துப4 ப்ரவில ஸத்3வக்ஷா விஶாலேக்ஷண:।
ஸ்ரீவத்ஸாங்கித வத்ஸக: குவலய ஸ்ரீக3ர்வஸர்வங்கஷ-
ஸ்ரீமூர்த்தி: ஶ்ரித கல்ப பாத3 பதா3ம் போ4ஜோ க3தி: ஸ்ரீபதி:॥ 5

இத்த2ம் ஶங்கர ஶர்மணா விரசிதம் ஸ்ரீஸூகராஸ்யப்ரியம்
ஸ்தோத்ரம் ய: ப்ரபடே2த்3 ரமாபதிபதா3ம்போ4ஜத்3வயம் ஸம்ஸ்மரந் ।
ஸோ ऽபீ4ஷ்டம் லப4தே பு4வி ப்ரதி2தநீ4: ஸர்வம் பரம் ப்ராப்ய ஸா-
நந்தே ஸூரிவரைக க3ம்யமதுலம் விஷ்ணோ: பத3ம் ப்ராப்நுயாத் ॥ 6

இதி ஸ்ரீ (பூ)வராஹ பஞ்சரத்ந ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

## ஸ்ரீ பூவராஹேஸ்வர ஸ்துதி

### நிகமனம்

ஸ்ரீ ஶங்கர ஶர்மா அவர்கள் துதியைத் தொடங்கும் போதே குணங்களின் கடல் போன்ற எல்லையற்ற மஹிமை பொருந்திய ஸ்ரீ பூவராஹனைப் பணிந்து துதிக்க முற்படுகிறேன் என்கிறார். எம்பெருமான் ஸ்வஸங்கல்பத்தால் மஹாகோல ரூபம் தரித்து, தன் வக்ர தம்ஷ்ட்ரத்தில் பூமிப் பிராட்டியை ஏந்தும் அளவு மஹாப்ரஹ்மாண்ட ஸ்வரூபம் கொண்டது என்பதாலேயே அவர் ஜீவர்கள் போல் கர்மவஶ்யர் அல்லர் என்பது புலனாகிறது. தாயாரும் "ஸ்வேச்சா வராஹ மஹிஷீம்" என ஸ்வாமி தேஶிகனால் கொண்டாடப்படுகிறாள். அவர்கள் பூர்ண ஸ்வதந்த்ரர்கள். அஶுரனை தம் ஹுங்கார ஶப்தத்தால் ப்ரஹரித்து, வரத முத்திரை, ஸ்ரீ ஸுதர்ஶனம், தாமரை புஷ்பம் ஏந்திய கரங்களுடன் மஹாலக்ஷ்மியைத் தம் திருமார்பில் தாங்கிய ஸ்ரீவத்ஸபூர்ணனாய் அவதரித்த ஸ்ரீ வராஹனைச் சரணமடைகிறேன் எனத் தொடங்குகிறார். ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே தன் அவதார ரூபமாக முதன் முதலில் ஸ்ரீ வராஹ சரமஶ்லோகத்தைப் பிராட்டிக்கு உபதேஶிப்பதன் மூலம் ஜீவர்கள் யாவரும் எக்காலமும் உய்ய வழிகாட்டியருளினார். மேலும் முக்யமான மந்திரமும் இந்த ஶ்லோகத்தில் நிஹிதமாக உள்ளது.

ஆதிவராஹ ரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே
லோக பாலாய ஸர்வாதாராய தே நம:

அவருடைய ப்ரபுத்வம், விபுத்வம் மற்றும் கல்யாண குணங்களின் எல்லையைக் காணக்கூடியவர் யார் ? அவர் திருவடிகளிலேயே சரண் புகுந்து அவைகளையே அவலம்பனமாக, அதாவது பற்றுக் கோலாக உணர்ந்திருப்பதே ஜீவர்கள் செய்யக்கூடியது. கவி அநுபவித்திருப்பது போல, அந்த ஸ்ரீ லக்ஷ்மி வராஹப் பெருமான் கடாக்ஷ விஶேஷத்தைப் பெற்றவராகிய அவர், ஸகல கல்யாணங்களுக்கும் பாத்திரராய், ஸித்தபூர்ணராய் விளங்கியவர். தாம்ரபரணி நதி தீரத்தில் கல்யாணபுரி க்ஷேத்திரத்தில் காட்சி தரும் ஸ்ரீ வராஹப் பெருமாள் நமக்கெல்லாம் ஶுபங்களை எப்போதும்



ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் (மூலவர்),
கல்லிடைக்குறிச்சி



ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீலக்ஷ்மீபதிப் பெருமான்
ஸ்ரீஆதிவராஹப் பெருமாள் திருக்கோவில், கல்லிடைக்குறிச்சி

# ஶ்ரீ (பூ)வராஹேஶ்வரஸ்துதி:

ஸ்புரத்கரட நிர்க3லந்மது4 ஸக3ந்த4 நீராஞ்சித
ஸ்புரந்நயந கோணபா4த்த3யித வீக்ஷணோல்லாஸிநம் ।
உமாஸுத மபீ4ஷ்ட3தம் ப்ரணிபதந்நஹம் ஸாஞ்ஜலி:
ஸ்தவீமி குணஸாக3ரம் மஹிதபூ4வராஹேஶ்வரம் ॥ 1

வராஹ வரரூபிணம் வித்4ருதபூ4மிகோ4ணாப்ரபா4-
த்3வராநநமுத3க்ர ஹுங்க்ருதி விபீ4த3 தை3த்யார்த3நம் ।
ஸுதர்ஶந கராம்பு3ஜம் ஜலஜ வாமஹஸ்தம் ஸதா3
ரமாநிலயவத்ஸகம் ஶரணமேமி ஸம்ரக்ஷகம் ॥ 2

த்வாமாமநந்தி வசநாநி புராதநாநி
ஶ்வேதாதி3 பூ4 ப்ரத2ம ஶோபாபி மஹாவராஹம் ।
விஷ்ணோ ததா3 ऽபி நிஜவக்ஷ உபாஶ்ரிதாயா:
லக்ஷ்ம்யா: ப்ரியோऽஸி நநு ப4க்தஹிதார்த்த2மேவ ॥ 3

த்வம் ஸர்வதா3 ப்ரு2திவி பாலந தூ4ர்வஹோऽஸி
த்வம் கோலரூப த்4ருதபி ப்ரதயம்ஸ்ததே3வ ।
லக்ஷ்மீ பதித்வ மநிஶம் ப்ரகடீ கரோஷி
த்வாம் ராஜ ராஜகிடிரூபமஹம் நமாமி ॥ 4

ஆதி3வாராஹ ரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே
லோகபாலாய பூஜ்யாய ஸர்வாதா4ராய தே நம: ॥ 5

நத்வா ஸ்தோதும் ப்ரஸக்தஸ்தவ கு3ணமஹிம ப்ராபா2வாக்ருஷ்டசித்த:
ஸ்வாதந்த்ர்யந்நைவ நோதும் ப்ரபு4ரஹயுசிதம் கிம் கரோமி ஸ்மராமி ।
ஸ்ம்ருத்யா வா கோ3சரஸ்ஸந் மயி குரு கருணாம் ஸர்வதா2 த்வாம் ப்ரபந்ந:
தத்3பூ4வாராஹ விஷ்ணோ தவ பத3கமலத்3வந்த்3வமாலம்3பயேऽஹம் ॥ 6

த்வத்3ருஷ்டே: பாத்ரபூ4தாந் கலயஸி நிகி2லாந் ஸர்வஸம்பத்திபூர்ணாந்
நித்யம் கல்யாண கர்மப்ரஸிதி கு3ணயுதாநாதி3 வாராஹவிஷ்ணோ ।
த்வத் ப்ராது3ர் விபூத்யா புரமபி பரமம் நித்ய கல்யாணபூர்ணம்
கல்யாணக்யா2ந ஸித்த4ம் லஸதி தவ நுதிம் கஸ்ஸமர்த்தோ2 விதா4தும் ॥ 7

தாம்ராஸரித்த3க்ஷிண தீர பா4கே3 புண்யே ஸுகல்யாணபுரேऽதிரம்யே
பூ4முக்2யவாராஹவபு: குபே3ரஸந்ஸ்தா2பிதோ ந: ஶுப4மாதநோது ॥ 8

அருள வேண்டும். ஸ்ரீ குபேரனே இங்கு நிரந்தரமாக வாஸம் புரிவதால் இங்குள்ளவரும், இவ்வராஹனை தரிஶிக்க வரும் அன்பர்களும் குபேர ஸம்பத் உள்ளவராவர். பக்தர்களின் பக்தியில் என்றும் கருணை கொண்டவராய் விளங்கி தனாட்யர்களாகச் செய்கிறார். ஸ்ரீ பூமிதேவியை அதாவது இவ்வுலகையே தம் திருமுகத்தில் தாங்கி ஸர்வ லோகத்தையும் ரக்ஷித்து வரும் பொறுப்பேற்ற ஸ்வாமியின் அற்புதமான விஶ்வரூபம் வர்ணனைக்கும், நம் வாக்ஶக்திக்கும் அப்பாற்பட்டது. கவி கேட்கும் வரம் யாதெனில் ரக்ஷணம் புரிவதுடன், ஸ்ரீவித்யையும், அளப்பரிய பகவத்பக்தியும் அன்பர்களின் இதயத்தில் அகலாது நிலைத்திருக்க வேண்டும் என்பதே. ஸ்ரீமாநாகிய ஸ்ரீ வராஹன் இப்பூவுலகில் ஐஶ்வர்யங்கள் யாவுமே நல்கி, கோரும், நினைக்கும் பயன்கள் யாவுமே அருளி, முடிவில் நித்யானந்தமாகிய, புனராவ்ருத்தியற்ற மோக்ஷமும் நல்கிடுவார் என்பது நிச்சயம்.

– விஷ்ணுப்ரியா

# श्री (भू)वराहेश्वरस्तुतिः

स्फुरत्करटनिर्गलन्मधुसगन्धनीराञ्चित
स्फुरन्नयन कोणभाद्दयितवीक्षणोल्लासिनम।
उमासुतमभीष्टदं प्रणिपतन्नहं साञ्जलिः
स्तवीमि गुणसागरं महितभूवराहेश्वरम् ॥ १

वराहवररूपिणं विधृतभूमिघोणाप्रभा-
द्वराननमुदग्रहूंकृतिविभीतदैत्यार्दनम्।
सुदर्शनकराम्बुजं जलज वामहस्तं सदा
रमानिलयवत्सकं शरणमेमि संरक्षकम ॥ २

त्वामामनन्ति वचनानि पुरातनानि
श्वेतादि भूप्रथमशोभि महावराहम्।
विष्णो तदाऽपि निजवक्ष उपाश्रिता याः
लक्ष्म्याः प्रियोऽसि ननु भक्तहितार्थमेव ॥ ३

त्वं सर्वदा पृथिविपालनधूर्वहोऽसि
त्वं कोलरूपधृदपि प्रथयंस्तदेव।
लक्ष्मीपतित्वमनिशं प्रकटीकरोषि
त्वां राज राजकिटिरूपमहं नमामि ॥ ४

आदिवाराहरूपाय विष्णवे सर्वजिष्णवे।
लोकपालाय पूज्याय सर्वाधाराय ते नमः ॥ ५

नत्वा स्तोतुं प्रसक्तस्तव गुणमहिमप्रभावाकृष्टचित्तः
स्वातन्त्र्यन्नैव नोतुं प्रभुरहयुचितं किं करोमि स्मरामि।
स्मृत्या वा गोचरस्सन् मयि कुरू करुणां सर्वथा त्वां प्रपन्नः
तद्भूवाराहविष्णो तव पदकमलद्वन्द्वमालम्बयेऽहम् ॥ ६

त्वद्दृष्टेः पात्रभूतान् कलयसि निखिलान सर्वसंपत्तिपूर्णान्
नित्यं कल्याणकर्मप्रसितिगुणयुतानादिवाराहविष्णो।
त्वत्प्रादुर्विभूत्या पुरमपि परमं नित्य कल्याणपूर्ण
कल्याणाख्यानसिद्धं लसति तव नुतिं कस्समर्थो विधातुम् ॥ ७

ताम्रासरिद्दक्षिणतीरभागे पुण्ये सुकल्याणपुरेऽतिरम्ये।
भूमुख्यवाराहवपुः कुबेरसंस्थापितो नः शुभमातनोतु ॥ ८

# ஸ்ரீ (பூ)வராஹேஶ்வரஸ்துதி:

ஸ்புரத்கரட நிர்க3லந்மது4 ஸக3ந்த4 நீராஞ்சித
ஸ்புரந்நயந கோணபா4த்த3யித வீக்ஷணோல்லாஸிநம் ।
உமாஸுத மபீ4ஷ்ட3தம் ப்ரணிபதந்நஹம் ஸாஞ்ஜலி:
ஸ்தவீமி குணஸாக3ரம் மஹிதபூ4வராஹேஶ்வரம் ॥ 1

வராஹ வரரூபிணம் வித்4ருதபூ4மிகோ4ணாப்ரபா4-
த்3வராநநமுத3க்ர ஹுங்க்ருதி விபீ4த3 தை3த்யார்த3நம் ।
ஸுதர்ஶந கராம்பு3ஜம் ஜலஜ வாமஹஸ்தம் ஸதா3
ரமாநிலயவத்ஸகம் ஶரணமேமி ஸம்ரக்ஷகம் ॥ 2

த்வாமாமநந்தி வசநாநி புராதநாநி
ஶ்வேதாதி3 பூ4 ப்ரத2ம ஶோபி மஹாவராஹம் ।
விஷ்ணோ ததா3 ऽபி நிஜவக்ஷ உபாஶ்ரிதாயா:
லக்ஷ்ம்யா: ப்ரியோऽஸி நநு ப4க்தஹிதார்த்த2மேவ ॥ 3

த்வம் ஸர்வதா3 ப்ரு2திவி பாலந தூ4ர்வஹோऽஸி
த்வம் கோலரூப த்4ருதபி ப்ரதயம்ஸ்ததே3வ ।
லக்ஷ்மீ பதித்வ மநிஶம் ப்ரகட கரோஷி
த்வாம் ராஜ ராஜகிடிரூபமஹம் நமாமி ॥ 4

ஆதி3வாராஹ ரூபாய விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே
லோகபாலாய பூஜ்யாய ஸர்வாதா4ராய தே நம: ॥ 5

நத்வா ஸ்தோதும் ப்ரஸக்தஸ்தவ கு3ணமஹிம ப்ராபா2வாக்ருஷ்டசித்த:
ஸ்வாதந்த்ர்யந்நைவ நோதும் ப்ரபு4ரஹயுசிதம் கிம் கரோமி ஸ்மராமி ।
ஸ்ம்ருத்யா வா கோ3சரஸ்ஸந் மயி குரு கருணாம் ஸர்வதா2 த்வாம் ப்ரபந்ந:
தத்3பூ4வாராஹ விஷ்ணோ தவ பத3கமலத்3வந்த்3வமாலம்3பயேऽஹம் ॥ 6

த்வத்3ருஷ்டே: பாத்ரபூ4தாந் கலயஸி நிகி2லாந் ஸர்வஸம்பத்திபூர்ணாந்
நித்யம் கல்யாண கர்மப்ரஸிதி கு3ணயுதாநாதி3 வாராஹவிஷ்ணோ ।
த்வத் ப்ராது3ர் விபூத்யா புரமபி பரமம் நித்ய கல்யாணபூர்ணம்
கல்யாணக்யா2ந ஸித்த4ம் லஸதி தவ நுதிம் கஸ்ஸமர்த்தோ2 விதா4தும் ॥ 7

தாம்ராஸரித்த3க்ஷிண தீர பா4கே3 புண்யே ஸுகல்யாணபுரேऽதிரம்யே
பூ4முக்2யவாராஹவபு: குபே3ரஸந்ஸ்தா2பிதோ ந: ஶுப4மாதநோது ॥ 8

धनद कर युगन्भोजात सुस्थापितो यो
निजलषित परीष्टयै भूवराहश्चकास्ति।
धनदमहिम संपत्पूर्ण भावान् पुरस्था-
नवति मम पुरस्तात् स्तादसौ तित्यमीशः ।। ९

यापुर्वभिख्यात कुबेर नामा
वाराहपूरि त्यपि नूयमा ना।
कल्याण नामा नगरीति येन
बाभाति तं त्वां प्रणमामि विष्णो ।। १०

कोलात्मन् श्रीपते ते करतल कमले श्रीमती भाति नैत
श्चित्रं यत् सर्व लोका अपि तव करगाः पालनार्य विभान्ति।
किं च त्वं सर्व मेत ज्ञठर भुवि वहस्यद्भुतं विश्वरूपं
तं त्वां वा चा मगम्यं निरुपम विभवं करस्त वी तु प्रकामम्।। ११

त्वत्सान्निध्यमुपेयुषे करतलस्थास्त्वं मही श्रीपि
स्वस्थां सत्सगतां समर्प्य परितो रक्षार्थ सत्सन्तती:।
वियां सद्भिय मप्यनन्त भगवद्भक्ति सदा वर्द्धयन्
विष्णो राजसि कोलरूप भवतो भूया ममस्तुष्टये।। १२

यत्र कापि गतोऽपि लास्मि विसृजात्यानन्द रूपं सदा
भान्तं स्यान्त तले भवन्त मखिल स्वार्थ प्रदं श्रीपतिम्।
त्वं मामप्य विहाय दत्त सुगतिर्भूया इदं प्रार्थये
सवं व्याप्तिमते नमोऽस्तु महते तुभ्यं नमः श्रीमते ।। १३

इत्थं शङ्कर नामधेय विदुषा भक्तया पराहात्मकं
श्रीमन्तं करुणानिधिं हृदिपरं ध्यात्वा कृतं स्वर्थदम्।
स्तोत्रं यः पठति प्रपक्षसुलभस्तस्याग्रतस्फूर्तिमान्
विष्णुः कोलवपुः प्रभूतलषितं संपूरये दन्वहम्।। १४

इति श्री (भू)वराहेश्वरस्तुतिः संपूर्णम्

लीलालोत सर्वसागर जलः संपूर्ण चन्द्र प्रभोः
हेमाक्षासुर खन्डनो भुजगदः जक्राङ्कितः सन्ततम्।
दंष्ट्राग्रोद्धृतमेदिनी भयहरः क्रीडावतारो हरिः
श्रीकल्याणपुरीश्वरः करुणयादद्यात् सदा मङ्गलम् ।

த⁴நத³ கரயுக³ந்போ⁴ஜாத ஸுஸ்தா²பிதோ யோ
நிஜலஷித பரீஷ்டயை பூவராஹஞ்சகாஸ்தி ।
த⁴நத³ மஹிம ஸம்பத்பூர்ண பா⁴வாந் புரஸ்தா²-
நவதி மம புரஸ்தாத் ஸ்தாத³ஸௌ தித்யமீபு: ॥ 9

யாபுர்வபி⁴க்²யாத குபே³ர நாமா
வாராஹபூரி த்யபி நூயமா நா ।
கல்யாண நாமா நக³ரீதி யேந
பா³பா⁴தி தம் த்வாம் ப்ரணமாமி விஷ்ணோ ॥ 10

கோலாத்மந் ஸ்ரீபதே தே கரதல கமலே ஸ்ரீமதி பா⁴தி நைத
ஶ்சித்ரம் யத் ஸர்வ லோகா அபி தவ கரகா³: பாலநார்ய விபா⁴ந்தி ।
கிம் ச த்வம் ஸர்வ மேத ஜ்ஜட²ர பு⁴வி வஹஸ்யத்³பு⁴தம் விஶ்வரூபம்
தம் த்வாம் வா சா மக³ம்யம் நிருபம விப⁴வம் கரஸ்த வீ து ப்ரகாமம் ॥ 11

த்வத்ஸாந்நித்⁴யமுபேயுஷே கரதலஸ்தா²ஸ்நும் மஹீம் ஸ்ரீபி
ஸ்வாஸ்தா²ம் ஸத்ஸக³தாம் ஸமர்ப்ய பரிதோ ரக்ஷார்த்த² ஸத்ஸந்ததீ:।
வியாம் ஸத்³தி⁴ய மப்யநந்த ப⁴கவத்³ப⁴க்தி ஸதா³ வர்த்த⁴யந்
விஷ்ணோ ராஜஸி கோலரூப ப⁴வதோ பூ⁴யா மமஸ்துஷ்டயே ॥ 12

யத்ர காபி க³தோऽபி லாஸ்மி விஸ்ருஜா த்யாநந்த³ ரூபம் ஸதா³
பா⁴ந்தம் ஸ்யாந்த தலே ப⁴வந்த மகி²ல ஸ்வார்த² ப்ரத³ம் ஸ்ரீபதிம்।
த்வம் மாமப்ய விஹாய த³த்த ஸுக³திர்பூ⁴யா இத³ம் ப்ரார்த்த²யே
ஸவம் வ்யாப்திமதே நமோऽஸ்து மஹதே துப்⁴யம் நம: ஸ்ரீமதே ॥ 13

இத்த²ம் ஶங்கர நாமதே⁴ய விது³ஷா ப⁴க்தயா பராஹாத்மகம்
ஸ்ரீமந்தம் கருணாநிதி⁴ம் ஹ்ருதி³பரம் த்⁴யாத்வா க்ருதம் ஸ்வார்த்த²த³ம்।
ஸ்தோத்ரம் ய: பட²தி ப்ரபக்ஷுஸுலப⁴ஸ்தஸ்யாக்³ரதஸ்பூ²ர்த்திமாந்
விஷ்ணு: கோலவபு: ப்ரபூ⁴தலஷிதம் ஸம்பூரயே த³ந்வஹம் ॥ 14

இதி ஸ்ரீ (பூ)வராஹேஶ்வர ஸ்துதி: ஸம்பூர்ணம்

லீலாலோத ஸர்வஸாக³ர ஜல: ஸம்பூர்ண சந்த்³ர ப்ரபோ⁴:
ஹேமாக்ஷாஸுர க²ண்ட³நோ பு⁴ஜக³த³: ஜக்ராங்கித: ஸந்ததம் ।
த³ம்ஷ்ட்ராக்³ரோத்³ருதமேதி³நீ ப⁴யஹர: க்ரீடா³வதாரோ ஹரி:

ஸ்ரீகல்யாணபுரீஶ்வர: கருணயாத³த்³யாத் ஸதா³ மங்க³ளம்



ஸ்ரீ கோமளவல்லி நாயிகா ஸமேத
ஸ்ரீ நித்யகல்யாண பெருமாள்
திருவிடவெந்தை

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீ பூ₄வராஹாஷ்டோத்தரஶதநாமாவளி: ॥

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓம் பூ₄வராஹாய நம: | 2 | ஓம் மஹீநாத₂ாய நம: |
| 3 | ஓம் பூர்ணாநந்த₃ாய நம: | 4 | ஓம் ஜக₃த்பதயே நம: |
| 5 | ஓம் நிர்கு₃ணாய நம: | 6 | ஓம் நிஷ்கலாய நம: |
| 7 | ஓம் அநந்தாய நம: | 8 | ஓம் த₃ண்ட₃காந்தக்ருதே நம: |
| 9 | ஓம் அவ்யயாய நம: | 10 | ஓம் அவ்யக்தாய நம: |
| 11 | ஓம் ஹிரண்யாக்ஷாந்தக்ருதே நம: | 12 | ஓம் பூர்ணாங்க₃ாய நம: |
| 13 | ஓம் பூர்ணஷாட்₃கு₃ண்ய-விக்₃ரஹாய நம: | 14 | ஓம் லயோத₃கவிகாராய நம: |
| 15 | ஓம் ஸர்வப்ராணஹிதாய நம: | 16 | ஓம் அநந்தரூபாய நம: |
| 17 | ஓம் அநந்தஶ்ரியே நம: | 18 | ஓம் ஜிதமந்யவே நம: |
| 19 | ஓம் ப₄யாபஹாய நம: | 20 | ஓம் வேத₃ாந்தவேத்₃யாய நம: |
| 21 | ஓம் வேதி₃நே நம: | 22 | ஓம் வேத₃க₃ர்ப₄ாய நம: |
| 23 | ஓம் ஸநாதநாய நம: | 24 | ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம: |
| 25 | ஓம் புண்யக₃ந்த₄ாய நம: | 26 | ஓம் கல்பக்ருதே நம: |
| 27 | ஓம் க்ஷிதிப்₄ருதே நம: | 28 | ஓம் ஹரயே நம: |
| 29 | ஓம் பத்₃மநாப₄ாய நம: | 30 | ஓம் ஸுராத்₄யக்ஷாய நம: |
| 31 | ஓம் ஹேமாங்க₃ாய நம: | 32 | ஓம் த₃க்ஷிணாமுக₂ாய நம: |
| 33 | ஓம் மஹாகோலாய நம: | 34 | ஓம் மஹாப₃ாஹவே நம: |

## ஸ்ரீ பூ₄வராஹாஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 35 | ஓம் ஸர்வதே₃வநமஸ்க்ருதாய நம: | 36 | ஓம் ஹ்ருஷீகேஶாய நம: |
| 37 | ஓம் ப்ரஸந்நாத்மநே நம: | 38 | ஓம் ஸர்ப₄க்தப₄யாபஹாய நம: |
| 39 | ஓம் யஜ்ஞப்₄ருதே நம: | 40 | ஓம் யஜ்ஞக்ருதே நம: |
| 41 | ஓம் ஸாக்ஷிணே நம: | 42 | ஓம் யஜ்ஞாங்க₃ாய நம: |
| 43 | ஓம் யஜ்ஞவராஹாய நம: | 44 | ஓம் ஹவ்யபு₄ஜே நம: |
| 45 | ஓம் ஹவ்யாய நம: | 46 | ஓம் க்ருபாகராய நம: |
| 47 | ஓம் தே₃வஹ்ருதே₃ நம: | 48 | ஓம் கு₃ருகாந்தாய நம: |
| 49 | ஓம் த₄ர்மகு₃ஹ்யகராய நம: | 50 | ஓம் வ்ருஷாகபயே நம: |
| 51 | ஓம் அமேயாத்மநே நம: | 52 | ஓம் அங்க₃த₃ம்ஷ்ட₂ாய நம: |
| 53 | ஓம் நீலகேஶாய நம: | 54 | ஓம் மஹாப₃லாய நம: |
| 55 | ஓம் பூதாத்மநே நம: | 56 | ஓம் வேத₃நேத்ராய நம: |
| 57 | ஓம் வேத₃ஹர்த்ருஶிரோஹராய நம: | 58 | ஓம் வேத₃கு₃ஹ்யாய நம: |
| 59 | ஓம் ஸர்வதே₃வப்ரவர்தகாய நம: | 60 | ஓம் க₃பீ₄ராக்ஷாய நம: |
| 61 | ஓம் த்₄ருதாத்மநே நம: | 62 | ஓம் க₃ம்பீ₄ராத்மநே நம: |
| 63 | ஓம் அபரேஶ்வராய நம: | 64 | ஓம் ஆநந்த₃ப₄வநாதீ₄ஶாய நம: |
| 65 | ஓம் ப்₃ரஹ்மநாத₃ஸமுத்₃ப₄வாய நம: | 66 | ஓம் ஸிந்து₄தீரநிவாஸிநே நம: |
| 67 | ஓம் க்ஷேமக்ருதே நம: | 68 | ஓம் ஸாத்வதாம்பதயே நம: |
| 69 | ஓம் இந்த்₃ரதிரோத₄ாத்ரே நம: | 70 | ஓம் ஜக₃த்₃த₄ாத்ரே நம: |

## ஸ்ரீ பூ₄வராஹாஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 71 | ஓம் மஹேந்த்₃ரோத்₃-த₃ண்ட₃க₃ர்வஹாய நம: | 72 | ஓம் ப₄க்தவஶ்யாய நம: |
| 73 | ஓம் ஸ்தோத்ரோக்தாய நம: | 74 | ஓம் நிஜாநந்த₃ாய நம: |
| 75 | ஓம் ரமாபதயே நம: | 76 | ஓம் ஸ்துதிப்ரியாய நம: |
| 77 | ஓம் ஶுப₄ாங்க₃ாய நம: | 78 | ஓம் புண்யஶ்ரவண-கீர்தநாய நம: |
| 79 | ஓம் ஸத்யக்ருதே நம: | 80 | ஓம் ஸத்யஸங்கல்பாய நம: |
| 81 | ஓம் ஸத்யவாசே நம: | 82 | ஓம் ஸத்யவிக்ரமாய நம: |
| 83 | ஓம் ஸத்யாத்மநே நம: | 84 | ஓம் காலாதீதாய நம: |
| 85 | ஓம் கு₃ணாதீதாய நம: | 86 | ஓம் பரஞ்ஜ்யோதிஷே நம: |
| 87 | ஓம் பரந்த₄ாம்நே நம: | 88 | ஓம் பரமபுருஷாய நம: |
| 89 | ஓம் பராய நம: | 90 | ஓம் கல்யாணக்ருதே நம: |
| 91 | ஓம் கவயே நம: | 92 | ஓம் கர்த்ரே நம: |
| 93 | ஓம் கர்மஸாக்ஷிணே நம: | 94 | ஓம் கர்மக்ருதே நம: |
| 95 | ஓம் கர்மகாண்ட₃ஸ்ய ஸம்-ப்ரத₃ாயப்ரவர்தகாய நம: | 96 | ஓம் ஸர்வாந்தக்ருதே நம: |
| 97 | ஓம் ஸர்வக₃ாய நம: | 98 | ஓம் ஸர்வத: ஸர்வபக்ஷாய நம: |
| 99 | ஓம் ஸர்வலோகபதயே நம: | 100 | ஓம் ஸ்ரீமதே நம: |
| 101 | ஓம் ஸ்ரீமுஷ்ணேஶாய நம: | 102 | ஓம் ஶுபே₄க்ஷணாய நம: |
| 103 | ஓம் ஸர்வதே₃வப்ரியாய நம: | 104 | ஓம் ஸாக்ஷிணே நம: |
| 105 | ஓம் ஸர்வகர்மஸமாரா-த்₄யாய நம: | 106 | ஓம் ப₄க்தாபீ₄ஷ்டவர-ப்ரத₃ாய நம: |

## ஸ்ரீ பூவராஹாஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 107 | ஓம் அம்புஜவல்லீஶாய நம: | 108 | ஓம் ஸ்ரீமுஷ்ணக்ஷேத்ர-நாயகாய நம: |

॥ இதி ஸ்ரீ பூவராஹாஷ்டோத்தரஶதநாமாவளி: ஸம்பூர்ணா ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீ அம்பு₃ஜவல்லீ அஷ்டோத்தரஶதநாமாவளி: ॥

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓம் ஸ்ரீமுஷ்ணநாயக்யை நம: | 2 | ஓம் லக்ஷ்ம்யை நம: |
| 3 | ஓம் ஶ்ரியை நம: | 4 | ஓம் பத்₃மாயை நம: |
| 5 | ஓம் கமலாலயாயை நம: | 6 | ஓம் கல்யாண்யை நம: |
| 7 | ஓம் காமஜநந்யை நம: | 8 | ஓம் கமலாயை நம: |
| 9 | ஓம் விமலாயை நம: | 10 | ஓம் ரமாயை நம: |
| 11 | ஓம் பஞ்சபி₃ந்து₃மத்யை நம: | 12 | ஓம் ஸீதாயை நம: |
| 13 | ஓம் ப₄ார்க₃வ்யை நம: | 14 | ஓம் த்ரிகு₃ணாத்மிகாயை நம: |
| 15 | ஓம் மாத்ருகாயை நம: | 16 | ஓம் ருக்மிண்யை நம: |
| 17 | ஓம் நித்யாயை நம: | 18 | ஓம் ப்ரக்ருத்யை நம: |
| 19 | ஓம் பரதே₃வதாயை நம: | 20 | ஓம் இந்தி₃ராயை நம: |
| 21 | ஓம் ப₄ாவிந்யை நம: | 22 | ஓம் க₃ங்க₃ாயை நம: |
| 23 | ஓம் ஸௌந்த₃ர்யை நம: | 24 | ஓம் பு₄வநோத₃ர்யை நம: |
| 25 | ஓம் பத்₃மப்ரியாயை நம: | 26 | ஓம் பத்₃மமுக்₂யை நம: |
| 27 | ஓம் பத்₃மாக்ஷ்யை நம: | 28 | ஓம் பத்₃மஸௌந்த₃ர்யை நம: |
| 29 | ஓம் பத்₃மிந்யை நம: | 30 | ஓம் யோகி₃ந்யை நம: |
| 31 | ஓம் பத்₃மஹஸ்திந்யை நம: | 32 | ஓம் பத்₃மமாலிந்யை நம: |
| 33 | ஓம் அமந்த்ராயை நம: | 34 | ஓம் நாத₂நாத₂நாயக்யை நம: |

## ஸ்ரீ அம்புஜவல்லீ அஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 35 | ஓம் லோகநாயக்யை நம: | 36 | ஓம் து₃ர்கா₃யை நம: |
| 37 | ஓம் விஶ்வம்ப₄ராயை நம: | 38 | ஓம் ப₄த்₃ராயை நம: |
| 39 | ஓம் சண்டா₃ரூபாயை நம: | 40 | ஓம் ஸரஸ்வத்யை நம: |
| 41 | ஓம் ஆநந்த₃ரூபிண்யை நம: | 42 | ஓம் தே₃வ்யை நம: |
| 43 | ஓம் போ₄கா₃மோக்ஷப₂ல-ப்ரதா₃யை நம: | 44 | ஓம் நிரஞ்ஜநாயை நம: |
| 45 | ஓம் நித்யத்ருப்தாயை நம: | 46 | ஓம் பி₃ல்வாங்க₃ண-நிகேதநாயை நம: |
| 47 | ஓம் நிராஶ்ரயாயை நம: | 48 | ஓம் நிர்விகல்பாயை நம: |
| 49 | ஓம் ஸாவித்ர்யை நம: | 50 | ஓம் ப்ரப₄வாயை நம: |
| 51 | ஓம் பராயை நம: | 52 | ஓம் கா₃யத்ர்யை நம: |
| 53 | ஓம் மந்த்ரஜநந்யை நம: | 54 | ஓம் லலிதாயை நம: |
| 55 | ஓம் சந்த்₃ரஶீதலாயை நம: | 56 | ஓம் ப₄க்தவஶ்யாயை நம: |
| 57 | ஓம் சந்த்₃ரமுகா₂யை நம: | 58 | ஓம் ஸகலாயை நம: |
| 59 | ஓம் விகலாயை நம: | 60 | ஓம் ஜயாயை நம: |
| 61 | ஓம் ஶாந்தாயை நம: | 62 | ஓம் வித்₃யாயை நம: |
| 63 | ஓம் காந்தாயை நம: | 64 | ஓம் வ்யாப்தாயை நம: |
| 65 | ஓம் அநுக்₃ரஹாயை நம: | 66 | ஓம் உத்கர்ஷண்யை நம: |
| 67 | ஓம் ஸித்₃த₄லக்ஷ்மை நம: | 68 | ஓம் மேத₄ாயை நம: |
| 69 | ஓம் ஶ்ரியை நம: | 70 | ஓம் ப்ரணவார்த₂காயை நம: |
| 71 | ஓம் ஆதி₃மத்₄யாந்தர-ஹிதாயை நம: | 72 | ஓம் ஜ்யோதிர்மண்ட₃ல-மத்₄யகாயை நம: |
| 73 | ஓம் ஸத்யாயை நம: | 74 | ஓம் ஹிரண்யவர்ணாய நம: |

## ஸ்ரீ அம்பு3ஜவல்லீ அஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 75 | ஓம் தி4யை நம: | 76 | ஓம் ஸச்சித3ாநந்த3-ரூபிண்யை நம: |
| 77 | ஓம் நீலாயை நம: | 78 | ஓம் ப்3ராஹ்ம்யை நம: |
| 79 | ஓம் நிராகாராயை நம: | 80 | ஓம் ஜக3ந்மோஹந-விக்3ரஹாயை நம: |
| 81 | ஓம் ப்ரக்3ரஹாயை நம: | 82 | ஓம் வரத3ாயை நம: |
| 83 | ஓம் ப4வ்யாயை நம: | 84 | ஓம் அச்யுதாயை நம: |
| 85 | ஓம் அபராஜிதாயை நம: | 86 | ஓம் க3ருத்வது3த3யாயை நம: |
| 87 | ஓம் லக்ஷ்ம்யை நம: | 88 | ஓம் பூர்ணஷாட்3கு3ண்ய-விக்3ரஹாயை நம: |
| 89 | ஓம் அஶ்வக்ராந்தாயை நம: | 90 | ஓம் ரத2க்ராந்தாயை நம: |
| 91 | ஓம் விஷ்ணுக்ராந்தாயை நம: | 92 | ஓம் உருசாரிண்யை நம: |
| 93 | ஓம் ம்ருத்யுஞ்ஜயாயை நம: | 94 | ஓம் த்ராஸஹாராயை நம: |
| 95 | ஓம் நிர்ப4யாயை நம: | 96 | ஓம் ஶத்ருஸூத3ந்யை நம: |
| 97 | ஓம் த3ண்ட3காஸுர-ஸம்ஹர்த்ர்யை நம: | 98 | ஓம் ஜி2ல்லிகாவந-வாஸிந்யை நம: |
| 99 | ஓம் ஆநந்த3ப4வநா-தீ4ஶாயை நம: | 100 | ஓம் க்ஷீரஸாக3ரகந்யகாயை நம: |
| 101 | ஓம் நித்யபுஷ்கரிணீதீர-வாஸிந்யை நம: | 102 | ஓம் வாஸவார்சிதாயை நம: |
| 103 | ஓம் வராஹப்ரியாயை நம: | 104 | ஓம் த4ந்யாயை நம: |
| 105 | ஓம் காத்யாயநஸுதாயை நம: | 106 | ஓம் ஸுத4ாயை நம: |

## ஸ்ரீ அம்பு₄ஜவல்லீ அஷ்டோத்தரஶதநாமாவளி:

| | | | |
|---|---|---|---|
| 107 | ஓம் த்₃ருஷ்டாத்₃ருஷ்டப₂ல-ப்ரத₃ாயை நம: | 108 | ஓம் ஸ்ரீமத₃ம்பு₄ஜவல்ல்யை நம: |

॥ இதி ஸ்ரீ அம்பு₄ஜவல்லீ அஷ்டோத்தரஶதநாமாவளி: ஸம்பூர்ணா ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீவராஹகவசம் ॥

ஆத்₃யம் ரங்க₃மிதி ப்ரோக்தம் விமாநம் ரங்க₃ ஸஞ்ஜ்ஞிதம் ।
ஸ்ரீமுஷ்ணம் வேங்கடாத்₃ரிம் ச ஸாளக்₃ராமம் ச நைமிஶம் ॥

தோயாத்₃ரிம் புஷ்கரம் சைவ நரநாராயணாஶ்ரமம் ।
அஷ்டா மே மூர்தய: ஸந்தி ஸ்வயம் வ்யக்தா மஹீதலே ॥

ஸ்ரீ ஸூத:
ஸ்ரீருத்₃ரமுக₂ நிர்ணீத முராரி கு₃ணஸத்கதா₂ ।
ஸந்துஷ்டா பார்வதீ ப்ராஹ ஶங்கரம் லோகஶங்கரம் ॥ 1 ॥

ஸ்ரீ பார்வதீ உவாச
ஸ்ரீமுஷ்ணேஶஸ்ய மாஹாத்ம்யம் வராஹஸ்ய மஹாத்மந: ।
ஶ்ருத்வா த்ருப்திர்ந மே ஜாதா மந: கௌதூஹலாயதே ।
ஶ்ரோதும் தத்₃தே₃வ மாஹாத்ம்யம் தஸ்மாத் வர்ணய மே புந: ॥ 2 ॥

ஸ்ரீ ஶங்கர உவாச
ஶ்ருணு தே₃வி ப்ரவக்ஷ்யாமி ஸ்ரீமுஷ்ணேஶஸ்ய வைப₄வம் ।
யஸ்ய ஶ்ரவண மாத்ரேண மஹாபாபை: ப்ரமுச்யதே ।
ஸர்வேஷாமேவ தீர்தா₂நாம் தீர்த₂ ராஜோऽபி₄தீ₄யதே ॥ 3 ॥

நித்ய புஷ்கரிணீ நாம்நீ ஸ்ரீமுஷ்ணே யா ச வர்ததே ।
ஜாதா ஶ்ரமாபஹா புண்யா வராஹ ஶ்ரம வாரிணா ॥ 4 ॥

விஷ்ணோரங்கு₃ஷ்ட₂ ஸம்ஸ்பர்ஶாத் புண்யதா₃ க₂லு ஜாஹ்நவீ ।
விஷ்ணோ: ஸர்வாங்க₃ஸம்பூ₄தா நித்யபுஷ்கரிணீ ஶுபா₄ ॥ 5 ॥

மஹாநதீ₃ ஸஹஸ்ரேண நித்யதா₃ ஸங்க₃தா ஶுபா₄ ।
ஸக்ருத் ஸ்நாத்வா விமுக்தாக₄: ஸத்₃யோ யாதி ஹரே: பத₃ம் ॥ 6 ॥




இம்மஹநீர்களின் பரமாநுக்ரஹத்துடன் இந்நூல் தொகுக்கப்பட்டது.

## ஸ்ரீவராஹகவசம்

தஸ்யா ஆக்₃நேய பா₄கே₃ து அஶ்வத்த₂ச்ச₂ாயயோத₃கே ।
ஸ்நாநம் க்ருத்வா பிப்பலஸ்ய க்ருத்வா சாபி ப்ரத₃க்ஷிணம் ॥ 7 ॥

த்₃ருஷ்ட்வா ஶ்வேதவராஹம் ச மாஸமேகம் நயேத்₃யதி₃ ।
காலம்ருத்யும் விநிர்ஜித்ய ஶ்ரியா பரமயா யுத: ॥ 8 ॥

ஆதி₄வ்யாதி₄ விநிர்முக்தோ க்₃ரஹபீடா₃விவர்ஜித: ।
பு₄க்த்வா போ₄கா₃நநேகாம்ஶ்ச மோக்ஷமந்தே வ்ரஜேத் த்₄ருவம் ॥ 9 ॥

அஶ்வத்த₂மூலேடர்கவாரே நித்ய புஷ்கரிணீ தடே ।
வராஹகவசம் ஜப்த்வா ஶதவாரம் ஜிதேந்த்₃ரிய: ॥ 10 ॥

க்ஷயாபஸ்மாரகுஷ்டா₂த்₃யை: மஹாரோகை₃: ப்ரமுச்யதே ।
வராஹகவசம் யஸ்து ப்ரத்யஹம் பட₂தே யதி₃ ॥ 11 ॥

ஶத்ரு பீடா₃விநிர்முக்தோ பூ₄பதித்வமவாப்நுயாத் ।
லிகி₂த்வா தா₄ரயேத்₃ யஸ்து பா₃ஹுமூலே க₃லேத₂ வா ॥ 12 ॥

பூ₄த ப்ரேத பிஶாசாத்₃யா: யக்ஷ க₃ந்த₄ர்வ ராக்ஷஸா: ।
ஶத்ரவோ கோ₄ரகர்மாணோ யே சாந்யே விஷ ஜந்தவ: ।
நஷ்ட த₃ர்பா விநஶ்யந்தி வித்₃ரவந்தி தி₃ஶோ த₃ஶ ॥ 13 ॥

ஸ்ரீ பார்வதீ உவாச
தத் ப்₃ரூஹி கவசம் மஹ்யம் யேந கு₃ப்தோ ஜக₃த்த்ரயே ।
ஸஞ்சரேத் தே₃வவந்மர்த்ய: ஸர்வஶத்ருவிபீ₄ஷண: ।
யேநாப்நோதி ச ஸாம்ராஜ்யம் தந்மே ப்₃ரூஹி ஸதா₃ஶிவ ॥ 14 ॥

ஸ்ரீ ஶங்கர உவாச
ஶ்ருணு கல்யாணி வக்ஷ்யாமி வாராஹகவசம் ஶுப₄ம் ।
யேந கு₃ப்தோ லபே₄ந்மர்த்யோ விஜயம் ஸர்வ ஸம்பத₃ம் ॥ 15 ॥

அங்க₃ ரக்ஷா கரம் புண்யம் மஹாபாதக நாஶநம் ।
ஸர்வரோக₃ ப்ரஶமநம் ஸர்வது₃ர்க்₃ரஹ நாஶநம் ॥ 16 ॥




இம்மஹநீர்களின் பரமாநுக்ரஹத்துடன் இந்நூல் தொகுக்கப்பட்டது.



ஸ்ரீமத் ராமாநுஜர்



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஶிகன்

**ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவ பெருமாள் திருக்கோயில்,** பாண்டிச்சேரி-1.

## ஸ்ரீவராஹகவசம்

விஷாபி4சார க்ருத்யாதி3 ஶத்ருபீடா3 நிவாரணம் ।
நோக்தம் கஸ்யாபி பூர்வம் ஹி கோ3ப்யாத் கோ3ப்யதரம் யத: ॥ 17 ॥

வராஹேண புரா ப்ரோக்தம் மஹ்யம் ச பரமேஷ்டி2நே ।
யுத்3தே4ஷு ஜயத3ம் தே3வி ஶத்ருபீடா3 நிவாரணம் ॥ 18 ॥

வராஹகவசாத் கு3ப்தோ நாஶுப4ம் லப4தே நர: ।
வராஹகவசஸ்யாஸ்ய ருஷிர்ப்3ரஹ்மா ப்ரகீர்தித: ॥ 19 ॥

ச2ந்தோ3ऽநுஷ்டுப் தத2ா தே3வோ வராஹோ பூ4பரிக்3ரஹ: ।
ப்ரக்ஷால்ய பாதௌ3 பாணீ ச ஸம்யகா3சம்ய வாரிணா ॥ 20 ॥

க்ருத ஸ்வாங்க3 கர ந்யாஸ: ஸபவித்ர உத3ங்முக2: ।
ஓம் பூ4ர்பு4வ: ஸுவரிதி நமோ பூ4பதயேऽபி ச ॥ 21 ॥

நமோ ப4க3வதே பஶ்சாத் வராஹாய நமஸ்தத2ா ।
ஏவம் ஷட3ங்க3ம் ந்யாஸம் ச ந்யஸேத3ங்கு3லிஷு க்ரமாத் ॥ 22 ॥

நம: ஶ்வேதவராஹாய மஹாகோலாய பூ4பதே ।
யஜ்ஞாங்கா3ய ஶுபா4ங்கா3ய ஸர்வஜ்ஞாய பராத்மநே ॥ 23 ॥

ஸ்ரவ துண்டா3ய தீ4ராய பரப்3ரஹ்ம ஸ்வரூபிணே ।
வக்ர த3ம்ஷ்ட்ராய நித்யாய நமோऽந்தைர்நாமபி4: க்ரமாத் ॥ 24 ॥

அங்கு3லீஷு ந்யஸேத்3 வித்3வாந் கரப்ருஷ்ட2 தலேஷ்வபி ।
த்4யாத்வா ஶ்வேத வராஹம் ச பஶ்சாத் மந்த்ர முதீ3ரயேத் ॥ 25 ॥

ஓம் ஶ்வேதம் வராஹவபுஷம் க்ஷிதிமுத்3த4ரந்தம்
ஶங்கா2ரிஸர்வ வரதா3ப4ய யுக்த பா3ஹும் ।
த்4யாயேந்நிஜைஶ்ச தநுபி4: ஸகலைருபேதம்
பூர்ணம் விபு4ம் ஸகல வாஞ்சி2த ஸித்3த4யேऽஜம் ॥ 26 ॥

வராஹ: பூர்வத: பாது த3க்ஷிணே த3ண்ட3காந்தக: ।
ஹிரண்யாக்ஷஹர: பாது பஶ்சிமே க3த3யா யுத: ॥ 27 ॥

## ஶ்ரீவராஹகவசம்

உத்தரே பூ$_{4}$மிஹ்ருத் பாது அத$_{4}$ஸ்தாத்$_{3}$ வாயு வாஹந: ।
ஊர்த்$_{4}$வம் பாது ஹ்ருஷீகேஶோ தி$_{3}$க்$_{3}$விதி$_{3}$க்ஷு க$_{3}$தா$_{3}$த$_{4}$ர: ॥ 28 ॥

ப்ராத: பாது ப்ரஜாநாத$_{2}$: கல்பக்ருத் ஸங்க$_{3}$மே஽வது ।
மத்$_{4}$யாஹ்நே வஜ்ரகேஶஸ்து ஸாயாஹ்நே ஸர்வபூஜித: ॥ 29 ॥

ப்ரதோ$_{3}$ஷே பாது பத்$_{3}$மாக்ஷோ ராத்ரௌ ராஜீவலோசந: ।
நிஶீந்த்$_{3}$ர க$_{3}$ர்வஹா பாது பாதூஷ: பரமேஶ்வர: ॥ 30 ॥

அடவ்யாமக்$_{3}$ரஜ: பாது க$_{3}$மநே க$_{3}$ருடா$_{3}$ஸந: ।
ஸ்த$_{2}$லே பாது மஹாதேஜா: ஜலே பாத்வவநீ பதி: ॥ 31 ॥

க்$_{3}$ருஹே பாது க்$_{3}$ருஹாத்$_{4}$யக்ஷ: பத்$_{3}$மநாப$_{4}$: புரோ஽வது ।
ஜி$_{2}$ல்லிகா வரத$_{3}$: பாது ஸ்வக்$_{3}$ராமே கருணாகர: ॥ 32 ॥

ரணாக்$_{3}$ரே தை$_{3}$த்யஹா பாது விஷமே பாது சக்ரப்$_{4}$ருத் ।
ரோகே$_{3}$ஷு வைத்$_{3}$யராஜஸ்து கோலோ வ்யாதி$_{4}$ஷு ரக்ஷது ॥ 33 ॥

தாபத்ரயாத் தபோமூர்தி: கர்மபாஶாச்ச விஶ்வக்ருத் ।
க்லேஶகாலேஷு ஸர்வேஷு பாது பத்$_{3}$மாபதிர்விபு$_{4}$: ॥ 34 ॥

ஹிரண்யக$_{3}$ர்ப$_{4}$ஸம்ஸ்துத்ய: பாதௌ$_{3}$ பாது நிரந்தரம் ।
கு$_{3}$ல்பௌ$_{2}$ கு$_{3}$ணாகர: பாது ஜங்கே$_{4}$ பாது ஜநார்த$_{3}$ந: ॥ 35 ॥

ஜாநூ ச ஜயக்ருத் பாது பாதூரூ புருஷோத்தம: ।
ரக்தாக்ஷோ ஜக$_{4}$நே பாது கடிம் விஶ்வம்ப$_{4}$ரோ஽வது ॥ 36 ॥

பார்ஶ்வே பாது ஸுராத்$_{4}$யக்ஷ: பாது குக்ஷிம் பராத்பர: ।
நாபி$_{4}$ம் ப்$_{3}$ரஹ்மபிதா பாது ஹ்ருத$_{3}$யம் ஹ்ருத$_{3}$யேஶ்வர: ॥ 37 ॥

மஹாத$_{3}$ம்ஷ்ட்ர: ஸ்தநௌ பாது கண்ட$_{2}$ம் பாது விமுக்தித$_{3}$: ।
ப்ரப$_{4}$ஞ்ஜந பதிர்ப$_{3}$ாஹூ கரௌ காமபிதா஽வது ॥ 38 ॥

ஹஸ்தௌ ஹம்ஸபதி: பாது பாது ஸர்வாங்கு$_{3}$லீர்ஹரி: ।
ஸர்வாங்க$_{3}$ஶ்சிபு$_{3}$கம் பாது பாத்வோஷ்டௌ$_{2}$ காலநேமிஹா ॥ 39 ॥

## ஸ்ரீவராஹகவசம்

முக2ம் து மது4ஹா பாது த3ந்தாந் தா3மோத3ரோऽவது ।
நாஸிகாமவ்யய: பாது நேத்ரே ஸூர்யேந்து3லோசந: ॥ 40 ॥

பா2லம் கர்மப2லாத்4யக்ஷ: பாது கர்ணௌ மஹாரத2: ।
ஶேஷஶாயீ ஶிர: பாது கேஶாந் பாது நிராமய: ॥ 41 ॥

ஸர்வாங்க3ம் பாது ஸர்வேஶ: ஸதா3 பாது ஸதீஶ்வர: ।
இதீத3ம் கவசம் புண்யம் வராஹஸ்ய மஹாத்மந: ॥ 42 ॥

ய: படே2த் ஶ்ருணுயாத்3வாபி தஸ்ய ம்ருத்யுர்விநஶ்யதி ।
தம் நமஸ்யந்தி பூ4தாநி பீ4தா: ஸாஞ்ஜலிபாணய: ॥ 43 ॥

ராஜத3ஸ்யுப4யம் நாஸ்தி ராஜ்ய ப்4ரம்ஶோ ந ஜாயதே ।
யந்நாம ஸ்மரணாத் பீ4தா: பூ4த வேதாள ராக்ஷஸா: ॥ 44 ॥

மஹாரோக3ாஶ்ச நஶ்யந்தி ஸத்யம் ஸத்யம் வதா3ம்யஹம் ।
கண்டே2 து கவசம் ப3த்3த்4வா வந்த்4யா புத்ரவதீ ப4வேத் ॥ 45 ॥

ஶத்ருஸைந்ய க்ஷய ப்ராப்தி: து3:க2ப்ரஶமநம் தத2ா ।
உத்பாத து3ர்நிமித்தாதி3 ஸூசிதாரிஷ்ட நாஶநம் ॥ 46 ॥

ப்3ரஹ்மவித்3யாப்ரபோ3த4ம் ச லப4தே நாத்ர ஸம்ஶய: ।
த்4ருத்வேத3ம் கவசம் புண்யம் மாந்த4ாதா பரவீரஹா ॥ 47 ॥

ஜித்வா து ஶாம்ப3ரீம் மாயாம் தை3த்யேந்த்3ராநவதீ4த் க்ஷணாத் ।
கவசேநாவ்ருதோ பூ4த்வா தே3வேந்த்3ரோऽபி ஸுராரிஹா ॥ 48 ॥

பூ4ம்யோபதி3ஷ்டகவச த4ாரணாந் நரகோऽபி ச ।
ஸர்வாவத்4யோ ஜயீ பூ4த்வா மஹதீம் கீர்திமாப்தவாந் ॥ 49 ॥

அஶ்வத்த2மூலேऽர்கவாரே நித்ய புஷ்கரிணீதடே ।
வராஹகவசம் ஜப்த்வா ஶதவாரம் படே2த்3யதி3 ॥ 50 ॥

அபூர்வராஜ்ய ஸம்ப்ராப்திம் நஷ்டஸ்ய புநராக3மம் ।
லப4தே நாத்ர ஸந்தே3ஹ: ஸத்யமேதந்மயோதி3தம் ॥ 51 ॥

## ஸ்ரீவராஹகவசம்

ஜப்த்வா வராஹ மந்த்ரம் து லக்ஷமேகம் நிரந்தரம் ।
த₃ஶாம்ஶம் தர்பணம் ஹோமம் பாயஸேந க்₄ருதேந ச ॥ 52 ॥

குர்வந் த்ரிகால ஸந்த்₄யாஸு கவசேநாவ்ருதோ யதி₃ ।
பூ₄மண்ட₃லாதி₄பத்யம் ச லப₄தே நாத்ர ஸம்ஶய: ॥ 53 ॥

இத₃முக்தம் மயா தே₃வி கோ₃பநீயம் து₃ராத்மநாம் ।
வராஹ கவசம் புண்யம் ஸம்ஸாரார்ணவ தாரகம் ॥ 54 ॥

மஹாபாதக கோடிக்₄நம் பு₄க்திமுக்தி ப₂லப்ரத₃ம் ।
வாச்யம் புத்ராய ஶிஷ்யாய ஸத்₃வ்ருதாய ஸுதீ₄மதே ॥ 55 ॥

ஸ்ரீ ஸூத:
இதி பத்யுர்வச: ஶ்ருத்வா தே₃வீ ஸந்துஷ்ட மாநஸா ।
விநாயக கு₃ஹௌ புத்ரௌ ப்ரபேதே₃ த்₃வௌ ஸுரார்சிதௌ ॥ 56 ॥

கவசஸ்ய ப்ரபா₄வேந லோகமாதா ச பார்வதீ ।
ய இத₃ம் ஶ்ருணுயாந்நித்யம் யோ வா பட₂தி நித்யஶ: ।
ஸ முக்த: ஸர்வ பாபேப்₄யோ விஷ்ணுலோகே மஹீயதே ॥ 57 ॥

॥ இதி ஸ்ரீவராஹகவசம் ஸம்பூர்ணம் ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருவாய்மொழி

## ॥ ஆழியெழ ॥

### எம்பெருமானது வெற்றிச் செயல்களைப் பேசுதல்

‡ஆழியெழச்* சங்கும் வில்லும் எழ* திசை
வாழியெழத்* தண்டும் வாளும் எழ* அண்டம்
மோழையெழ* முடி பாதம் எழ* அப்பன்
ஊழியெழ* உலகம் கொண்டவாறே (1)

ஆறு மலைக்கு* எதிர்ந்தோடும் ஒலி* அர-
ஆறு சுலாய்* மலை தேய்க்கும் ஒலி* கடல்
மாறு சுழன்று* அழைக்கின்ற ஒலி* அப்பன்
சாறுபட* அமுதம் கொண்ட நான்றே (2)

நான்றில ஏழ்* மண்ணும் தானத்தவே* பின்னும்
நான்றில ஏழ்* மலை தானத்தவே* பின்னும்
நான்றில ஏழ்* கடல் தானத்தவே* அப்பன்
ஊன்றியிடந்து* எயிற்றில் கொண்ட நாளே (3)

நாளுமெழ* நில நீருமெழ* விண்ணும்
கோளுமெழ* எரி காலுமெழ* மலை
தாளுமெழச்* சுடர் தானுமெழ* அப்பன்
ஊளியெழ* உலகமுண்ட ஊணே (4)

ஊணுடை மல்லர்* ததர்ந்த ஒலி* மன்னர்
ஆணுடைச் சேனை* நடுங்கும் ஒலி* விண்ணுள்
ஏண் உடைத் தேவர்* வெளிப்பட்ட ஒலி* அப்பன்
காணுடைப் பாரதம்* கையறைப் போழ்தே (5)

போழ்து மெலிந்த* புன் செக்கரில்* வான் திசை
சூழும் எழுந்து* உதிரப் புனலா* மலை
கீழ்து பிளந்த* சிங்கம் ஒத்ததால்* அப்பன்
ஆழ் துயர் செய்து* அசுரரைக் கொல்லுமாறே (6)

## திருவாய்மொழி

॥ ஆழியெழ ॥

மாறு நிரைத்து★ இரைக்கும் சரங்கள்★ இன
நாறு பிணம்★ மலை போல் புரள★ கடல்
ஆறு மடுத்து★ உதிரப் புனலா★ அப்பன்
நீறுபட★ இலங்கை செற்றநேரே (7)

நேர் சரிந்தான்★ கொடிக் கோழி கொண்டான்★ பின்னும்
நேர் சரிந்தான்★ எரியும் அனலோன்★ பின்னும்
நேர் சரிந்தான்★ முக்கண் மூர்த்தி கண்டீர்★ அப்பன்
நேர்சரி வாணன்★ திண்டோள் கொண்ட அன்றே (8)

அன்று மண் நீர் எரி கால்★ விண் மலை முதல்★
அன்று சுடர்★ இரண்டு பிறவும்★ பின்னும்
அன்று மழை★ உயிர் தேவும் மற்றும்★ அப்பன்
அன்று முதல்★ உலகம் செய்ததுமே (9)

மேய் நிரை கீழ் புக★ மா புரள★ சுனை
வாய் நிறை நீர்★ பிளிறிச் சொரிய★ இன
ஆநிரை பாடி★ அங்கே ஒடுங்க★ அப்பன்
தீ மழை காத்துக்★ குன்றம் எடுத்தானே (10)

‡குன்றம் எடுத்த பிரான்★ அடியாரொடும்★
ஒன்றி நின்ற★ சடகோபன் உரை செயல்★
நன்றி புனைந்த★ ஓர் ஆயிரத்துள் இவை★
வென்றி தரும் பத்தும்★ மேவிக் கற்பார்க்கே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥


ராம ராம

